
பாரம்பரியமா?
பரிசுத்த ஆவியானவரா?
கலாத்தியர் நிருப விளக்கவுரை
பாஸ்டர் மா. ஜான்ராஜ்

# பாரம்பரியமா?
# பரிசுத்த ஆவியானவரா?

பாஸ்டர் மா. ஜான்ராஜ்

ZIONFORT
INTERNATIONAL MINISTRIES

**சீயோன்கோட்டை**
**சர்வதேச ஊழியங்கள்**


விலாசம்:
சீயோன்கோட்டை சர்வதேச ஊழியங்கள்,
26 D, காந்தி ரோடு, பஸ் ஸ்டாண்டு மேற்குபுறம்,
சிவகாசி - 626 123.

Phone : 0091 - 4562 - 230491
Church : 0091 - 4562 - 277209
Fax : 0091 - 4562 - 230491
Email : pastor_m_johnraj@yahoo.com

**பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரா?**

| | |
|---|---|
| நான்காம் பதிப்பு | : செப்டம்பர் 2011 |
| மொத்தப் பிரதிகள் | : 1000 |
| உரிமை | : பாஸ்டர் மா. ஜான்ராஜ் |
| விலை | : ரூ 50/- |
| | : வெளிநாடுகளில் **3 US.** டாலர்கள். |

**புத்தகங்கள் கிடைக்குமிடம்:**

*இந்தியாவிலுள்ள அனைத்து*

*கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்*

# அர்ப்பணம்

நியாயப் பிரமாணம் நீதி யானதுதான்
கிறிஸ்துவின் பிரமாணம் அன்பு அன்றோ
எழுத்தின் பிரமாணம் கல் எறிகிறதே
ஆவியின் பிரமாணம் மன்னிக் கின்றதே

இரக்கம் இல்லா பிரமாணம் நமக்கெதற்கு
ஈகை இல்லா ஊழியம் வனாந்திரமே
சமாதான சிலுவை சகலர்க்கும் வேண்டுமே
அன்பின் சேவை அனைவர்க்கும் வேண்டுமே

மங்கும் கழுந்திரி மனுஷ கற்பனையே
மறைந்துள்ள விளக்கு மனுஷ பாரம்பரியமே
பரிசேய சதுசேய பாரம்பரிய மெல்லாம்
படுகுழியில் தள்ளிடும் வேளை யல்லவோ

பகட்டான பாரம்பரியம் பறந் தோடட்டும்
பகை விரோதங்கள் பகடி யாகட்டும்
பறந்து காக்கும் பட்சியைப் போல்
பரிசுத்த ஆவியானவர் அசை வாடட்டும்

அப்போஸ்தல உபதேசம் அஸ்திபார மாகட்டும்
தீர்க்கர்களின் உரைகள் தீவிர மாகட்டும்
மேய்ப்பனின் இதயம் பாசத்தைப் பொழியட்டும்
சுவிசேஷகனின் பாதங்கள் அழகாய் தெரியட்டும்

## திறவுகோல் வசனம்

*நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தின்படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள்*

*- (கலா 3 : 29*

## பொருளடக்கம்


1. பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரா?
2. கலாத்திய சபை எப்படிப்பட்டது?
3. சுவிசேஷம் எப்படிப்பட்டது?
4. சுவிசேஷ ஊழியர் எப்படிப்பட்டவர்?
5. நியாயப் பிரமாணமா? சிலுவையின் பிரமாணமா?
6. விசுவாசமா? கிரியையா?
7. விசுவாசமா? நியாயப் பிரமாணமா?
8. அடிமைத்தனமா? சுயாதீனமா?
9. மாம்சமா? ஆவியா?
10. மாம்சமா? சிலுவையா?



# 1

# பாரம்பரியமா ? பரிசுத்த ஆவியானவரா ?

பரிசுத்த வேதாகமத்தில் இரண்டு ஏற்பாடுகள் உள்ளன. ஒன்று பழைய ஏற்பாடு, மற்றது புதிய ஏற்பாடு. பழைய ஏற்பாட்டிலும் தேவன் திருச்சபையை ஏற்படுத்தி இருந்தார். புதிய ஏற்பாட்டிலும் தேவன் திருச்சபையை மலரச் செய்தார். பழைய ஏற்பாட்டு சபையைக் குறித்து

**''சீனாய் மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங் கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவ வார்த்தைகளைப் பெற்றவனும் இவனே'' (அப் 7 : 38).** என்று வனாந்திரத்தில் சபை இருந்ததாக வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு சபைக்கு பத்து கட்டளைகளையும், நியாயப் பிரமாணங்களையும், கர்த்தர் கொடுத்தார். இவைகளைக் குறித்தே கர்த்தராகிய இயேசு அவைகள் யூதர்களின் பாரம்பரியங்கள் என்று சொன்னார். யூதர்களாகிய 12 கோத்திரங்களுக்குக் கொடுத்த நியாயப் பிரமாணங்களையே பாரம்பரியங்கள் என்று வேதம் சொல்கிறது. ஒவ்வொரு யூதர்களும் இந்த பாரம்பரியத்துக்காக பக்தி வைராக்கியமாய் இருந்தார்கள். பவுலும் கூட தான் இரட்சிக்கப் படுவதற்கு முன்பு பாரம் பரியங்களை அனுசரித்தார். **''என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்.'' என்கிறார். (கலா 1 : 14).**

ஆனால் புதிய ஏற்பாட்டு சபையானது இயேசு கிறிஸ்துவை மூலைக் கல்லாகவும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களின் உபதே சங்களை அஸ்திபாரமாகவும் போட்டுக் கட்டப்பட்டது (எபே. 2 : 20).

இரட்சிக்கப்படுகிற அனைவரையும் புதிய ஏற்பாட்டு திருச்சபையில் கர்த்தர் சேர்க்கிறார். இதில் யூதர்கள் மட்டுமல்ல. அனைத்து தேச, அனைத்து ஜாதி மக்களும் உண்டு. ''**அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்'' (எபே. 3:3)**

எனவே புதிய ஏற்பாட்டு சபையில் யூதர்களின் நியாயப்பிரமாண பாரம்பரியங்களை நாம் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் பாரம்பரியங்களைக் கைக் கொள்வதால் எந்தப் பலனும் இல்லை. (I பேதுரு 1:18) அவைகள் வீணான பாரம்பரியங்களே. எனவே தான் இயேசு கிறிஸ்து தன் ஊழிய நாட்களில் யூதர்களின் நியாயப் பிரமாண பாரம்பரியங்களை உடைத்தார்.

★ **குஷ்டரோகியைத் தொடக்கூடாது என்று நியாயப் பிரமாண பாரம்பரியம் சொல்கிறது. (லேவி 13:45, 46). ஆனால் இயேசுவே குஷ்டரோகியைத் தொட்டார். (மத் 8:3).**

★ **ஓய்வு நாளில் வேலை செய்யக்கூடாது என்பது நியாயப் பிரமாண பாரம்பரியம். (லூக் 13:14). ஆனால் இயேசு கிறிஸ்து ஓய்வு நாளில் வேலை செய்தார் (லூக் 6:1-6).**

★ **கைகழுவாமல் சாப்பிடக் கூடாது என்பது யூதர்களின் பாரம்பரியம். ஆனால் இயேசுவின் சீஷர்களோ யூதர்களின் பாரம்பரியத்தை உடைத்தனர். (மத் 15:1-3).**

அப்போஸ்தலர்கள் மூலம் சுவிசேஷ ஊழியம் உலகம் முழுவதும் பரவி புற ஜாதிகள் இரட்சிக்கப்பட்டார்கள். ஞானஸ்நானம் எடுத்தார்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றார்கள். புதிய ஏற்பாட்டு திருச்சபைகள் பல இடங்களில் மலர்ந்தது. அப்பொழுது கலாத்திய நாட்டிலும் சபைகள் உருவானது.

இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை, பிசீதியா, அந்தியோகியா ஆகிய பட்டணங்களே கலாத்தியா என்ற மாவட்டமாகும். இந்த ஐந்து இடங்களிலும் சபைகள் எழும்பி, வளர்ந்தது. பவுல் அப்போஸ்தலனின் முதலாம் மிஷனெரி ஊழியத்தின் மூலம் எழும்பியது.

ஆனால் இந்த சபைகளில் யூதேயாவிலிருந்து வந்த பரிசேயரால் குழப்பமான பாரம்பரியங்கள் உள்ளே புகுத்தப்பட்டது. அதில் முக்கியமான பாரம்பரியம் தான் விருத்தசேதனம்.

''சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால்; இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்.'' (அப். 15 : 1)

''அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை விருத்தசேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள்''. (அப் 15 : 5).

கலாத்திய நாட்டு சபைகளுக்கு வந்த பாரம்பரிய தாக்குதல் இன்று புதிய ஏற்பாட்டு சபைகளிலும் உலகமெங்கிலும் வந்திருக்கிறது.

1. குழந்தை ஞானஸ்நானம் ஒரு பாரம்பரியம். குழந்தைகளுக்கு பெயர் வைப்பதும், பிரதிஷ்டை செய்வதும், ஆசீர்வதிப்பதும் இயேசு கிறிஸ்துவின் உபதேசம் தான். லூக் 2 : 23, மாற்கு 10 : 13, 16. ஆனால் அது ஞானஸ்நானம் என்பது பெயர்க்கிறிஸ்த சபைகளின் பாரம்பரியமே.

2. திடப்படுத்தல் என்பது வேதத்தில் சொல்லப்படாத பாரம்பரிய நியாயங்கள் தான்.

3. இரட்சிக்கப்படும் போதே ஆவியின் அபிஷேகமும் பெற்று விட்டோம் என்பது மற்றொரு பாரம்பரிய வஞ்சிக்கிற போதனைகள் தான்.

4. யூதர்களின் ஆசாரியர்களைப் போலவே புதிய ஏற்பாட்டு ஊழியக்காரர்களின் சீருடை வஸ்திரங்கள். இன்றைய பாரம் பரியங்கள் தான்.

5. யூதர்களின் மூன்று முக்கிய பண்டிகைகள் போலவே இக்காலத்திலும் கிறிஸ்தவர்கள் கொண்டாடும் வருடாந்திர மூன்று பண்டிகைகளும் இக்காலத்தின் பாரம்பரியங்கள் தான்.

6. கல்யாணத்துக்கும் கல்லறைக்கும் ஒரு திருச்சபை அங்கமும், ஜெபத்துக்கும், உபவாசத்துக்கும், கர்த்தருடைய பந்திக்கும் மற்றொரு சபையின் அங்கம் என்ற மாய்மால பக்தியாகிய பாரம்பரியக் கட்டுகள் உடைக்கப்பட வேண்டும்.

கலாத்திய நாட்டில் புறஜாதிகள் இரட்சிக்கப்பட்டு விசுவாசத்தினால் நீதிமான்களானார்கள். ஆனால் சில பரிசேய சமயத்தார்கள். யூதர்களின் பாரம்பரியமாகிய விருத்தசேதனத்தை எடுத்துக் கொண்டால் தான் இரட்சிக்கப்படுகிறோம் என்று (அப் 15 : 1) பாரம்பரியங்களை புதிய

ஏற்பாட்டு சபைக்குள் புகுத்திய போது கலாத்திய சபையில் இடறல்கள் உண்டாயிற்று.

எனவே தான் பவுல் இந்த நிருபத்தை வெகு தெளிவாக கலாத்திய நாட்டு சபைகளுக்கு மட்டுமல்லாது புதிய ஏற்பாட்டு சபைகளாகிய அனைத்து திருச்சபைகளுக்கும் எழுதுகிறார். எனவே பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரா? பழைய சடங்குகளின் பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரின் புதிய ஏற்பாட்டு உபதேசங்களா? எது நமக்கு தேவை என்பதை விளக்குவதே இப்புத்தகத்தின் நோக்கம்.

**''பாவங்களிலிருந்து நாம் மீட்கப்பட்டது போலவே பாரம்பரியங்களிலிருந்தும் நாம் இரட்சிக்கப்பட வேண்டும்''** என்று கர்த்தர் கூறுகிறார். இயேசு கிறிஸ்து நம்மை பாரம்பரியங்களிலிருந்தும் இரட்சித்திருக்கிறார். **''உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே''. (**I பேதுரு 1 : 18, 19).

இரட்சிப்பு என்பது ஒரு வெளிப்பாடு. அது ஒரு ஊற்றுத்தண்ணீர் போன்றது. அது எடுக்க எடுக்க புதிய தண்ணீர் ஊறிக் கொண்டேயிருக்க வேண்டும். இரட்சிக்கப்பட்ட நாள் முதல் இந்த உலகில் கடைசி மூச்சை விடும் வரை நமக்குள் அது புதிய புதிய அனுபவங்களைக் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அது நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்று போன்றது. யோவான் 4 : 14.

எனவே ஆவிக்குரிய மக்கள் தங்கள் பக்தியிலே புதிய புதிய அநுபவங்களை எதிர் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். உடைந்து போன பழைய காலத்து கிராம போன் ரிக்கார்டு போல பழையதையே சொல்லிக் கொண்டு இருக்கக் கூடாது. மோசேக்குக் கிடைத்த நியாய பிரமாணத்தை விட இயேசு கிறிஸ்து மூலம் மேன்மையான வெளிப்பாடுகளை தேவன் தந்துள்ளார்.

**''நியாயப் பிரமாணம் மோசே மூலமாய் கொடுக்கப்பட்டது. ஆனால் கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டாயிற்று'' (யோவான் 1 : 17)**

என்பதை எடுத்துச் சொல்வதே கலாத்திய நிருபத்திற்கு விளக்கவுரையாகும். எனவே பாரம்பரியங்களில் பற்றுக் கொண்ட பரிசேய சமயத்தாரே மனந்திரும்புங்கள். பரிசுத்த ஆவியானவரின் சத்தம் கேளுங்கள்.

சிலர் பாரம்பரியங்களுக்கு அடிமைப்பட்டு ஊழிய வரங்கள் ஐந்தினையும் மறுக்கிறார்கள். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் ஆகிய (எபே 4 : 13) ஐந்து வகை ஊழிய வரங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். நாம் சகோதரர்கள், நமக்குள் ஊழியங்களில் வித்தியாசமில்லை என்கிறார்கள். ஆனால் ஊழியங்களில் வித்தியாசம் உண்டு. (I கொரி 12 : 5).

சிலர் பாரம்பரியங்களுக்கு அடிமைப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது வரங்களும் இன்று இல்லை என்கிறார்கள். (I கொரி 12 : 4-10). கொரிந்திய சபை அனைத்து வரங்களையும் பெற்றிருந்த சபை. (I கொரி 1 : 7). இதை இல்லை என்று மறுக்கிற பாரம்பரிய கிறிஸ்தவர்கள் உண்டு. ஆனால் ஆவியானவர் சபைகளுக்குச் சொல்கிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று வெளி 2 : 7, 2 : 11, 2 : 17ல் கர்த்தர் அழைக்கிறார்.

கலாத்திய நாட்டு சபைகளைக் குழப்பிய பாரம்பரியங்களைப் போலவே இன்று அகில உலகிலும் வளர வேண்டிய, பெருக வேண்டிய திருச்சபைகளைக் குழப்புகிற பாரம்பரியர்களை விட்டு வெளியே வந்து சத்தியத்தின் வெளிச்சத்தில் நடந்து கர்த்தருடைய வருகைக்கு கறை திரையற்ற மணவாட்டி சபையாக எழும்புவோமாக! பாரம்பரியங்களைக் கைக்கொண்டால் வரும் தீமைகள் ஏழினைக் குறித்து கீழே காண்போம்.

**1. பாரம்பரியம் தேவனுடைய கற்பனையை மீறுகிறது :-** எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து : **''உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள்.''** (மத். 15 : 2)

**''அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக : நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும், தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி : உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ. அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம் பண்ணாமற் போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்''.** (மத். 15 : 4-6)

இவ்விதமாக இன்றும் பாரம்பரியங்களைக் கைக்கொள்கிறவர்கள் தேவனுடைய கற்பனையை அவமாக்குகிறார்கள். தேவனுடைய

கற்பனையை மீறுகிறார்கள். கலாத்திய நாட்டு சபைகளுக்கு விருத்தசேதனம் என்னும் பாரம்பரியத்தைச் சொன்ன கள்ளப் போதகர்களும் புதிய ஏற்பாட்டின் ஆவியானவரின் உபதேசங்களை மீறுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டு சபை நியாயபிரமாணத்தினால் கட்டப் படுவதில்லை. பாரம்பரியத்தினால் கட்டப்படுவதில்லை. அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் உபதேசத்தில் ஆவியானவரைக் கொண்டே கட்டப்படுகிறது. (எபே. 2:22) எனவே பாரம்பரியத்தில் பற்றுக் கொண்ட பரிசேயர்களே மனந்திரும்புங்கள்.

**2. பாரம்பரியங்கள் உடைக்கப்பட வேண்டும்:-** இயேசுவின் சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியங்களை உடைத்தெறிந்தார்கள். பாரம்பரியங்களை மீறுவதால் விளையப் போகும் மனுஷ விரோதங்களைக் குறித்து இயேசுவின் சீஷர்கள் கொஞ்சமும் பயப்படவில்லை. இயேசு கிறிஸ்துவாகிய நமது குரு இதற்கு முன் மாதிரியாய் இருக்கிறார்.

**''அப்பொழுது எருசலேமிலிருந்து வந்த வேத பாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே என்றார்கள்''** (மத் 15:1,2) கைகளைக் கழுவி, கால்களை சுத்தம் செய்து, பயன்படுத்தும் பாத்திரங்களைக் கழுவித்தான் யூதர்கள் சாப்பிடுவார்கள். இது மோசேயின் நியாயப்பிரமாணச் சட்டம். இதை பாரம்பரியமாய் பரிசேயரும், சதுசேயரும் கடைப்பிடித்து வந்தார்கள்.

ஆனால் இயேசுவின் சீஷர்களோ இந்த பாரம்பரியத்தை உடைத் தெறிந்தார்கள். கை கழுவாமலேயே சாப்பிட்டார்கள். கை கழுவின பின்பு சாப்பிடுவது சரீரப் பிரகாரம் சுத்தமானது தான். ஆனால் ஆத்மீகப் பிரகாரம் எந்தப் பலனும் இல்லை. பரிசேயரும், சதுசேயரும் இந்தப் பாத்திரங்களின் சுத்திகரிப்பை முக்கியப்படுத்துகிறார்கள். ஆனால் இதயத்தை சுத்திகரிக்க, இதயத்தை கழுவ போதிய சிந்தை வைக்கவில்லை.

இன்றும் தேவாலயத்தை சுத்தமாக வைக்கும் அநேகர் தன் சரீரமாகிய தேவாலயத்தை சுத்திகரிக்க சிந்தை வைப்பதில்லை. ஆலயக் கட்டிடத்தின் சுத்திகரிப்பைக் கவனிக்கும் சிலர் தங்கள் சரீரமாகிய ஆலயத்தை இப்பிரபஞ்சத்தின் வெள்ளியினாலும், பொன்னினாலும் தீட்டுப் படுத்துகிறார்கள். (ஏசா. 30:22, வெளி. 21:27).

இந்த வசனங்களில் சொல்லப்பட்டுள்ள நமது ஆத்துமாவை தீட்டுப்படுத்தும் காரியங்களைக் கழற்றி எறிய வேண்டும். நமது சரீரத்தை

விட்டுக் களைய வேண்டும் என்று கர்த்தர் சொல்கிறார். இன்று ஆவியின் வரம் பெற்றேன் என்று சொல்கிறவர்கள் கூட பாரம் பரியத்தில் பற்றுக் கொண்ட பரிசேய சமயத்தாராக இருக்கிறார்கள்.

கை கழுவாமல் சாப்பிடுவது நம்மை தீட்டுப் படுத்தாது. நமது இதயத்தின் உள்ளேயிருந்து புறப்பட்டு வெளியே வருகிறதே நம்மைத் தீட்டுப்படுத்தும் என்று கர்த்தர் சொல்கிறார். எனவே தான் கிறிஸ்தவ ஆலயங்களில் காணப்படுகிற பாரம்பரியங்களை விட்டு கர்த்தருக்காக செயல்பட வேண்டும்.

**3. சுமக்க முடியாத பாரம் பாரம்பரியம் :-** கலாத்திய நாட்டு சபைகளைத் தாக்கிய பாரம்பரியம் எதுவென்றால் அது யூதர்களின் பாரம்பரியமாகிய விருத்தசேதனம் செய்வதாகும். இதை நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பே பிதாக்களின் காலத்தில் ஆபிரகாமுக்கு தேவன் கட்டளையிட்டார். இது ஆபிரகாமின் மாம்ச சந்ததிகளுக்கு தேவன் கொடுத்த பிரமாணம். (ஆதி 17 : 10)

இப்படியிருக்க சிலர் யூதேயாவிலிருந்து வந்து கலாத்திய நாட்டு புறஜாதி சபையாரைக் கலக்கினார்கள். தங்களின் யூதபாரம்பரியத்தைக் கைக்கொள்ளாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று போதித் தார்கள்.

**விசுவாசியின் மனம் செழிப்பான நிலம்**
The mind of the beliver is the fertile Land

எனவே விசுவாசிகள் மனதில் கோதுமையை விதைத்தாலும் அது செழித்து வளரும். விசுவாசியின் மனதில் களையை விதைத்தாலும் அது செழித்து வளரும். எனவேதான் கள்ள உபதேசகாரர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை நமது திருச்சபைக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது.

ஏனென்றால் பாரம்பரியங்களை பிறர்மீது சுமத்தும் போது அது அவர்களால் சுமக்க முடியாது. பாரச் சுமையாகிறது. இதினிமித்தம் கிறிஸ்தவ மார்க்கத்தையே மற்ற புறஜாதிகள் வெறுக்கும் அபாயம் நேரிடுகிறது. சிலர் மிஞ்சின பரிசுத்தத்திற்கு இடங்கொடுத்து பெண்கள் கொண்டை போட வேண்டும் என்றும் ஆண்கள் தங்கள் மீசையை மொட்டையாக வழித்துவிடுவதுதான் பரிசுத்தம் என்பார்கள். இதுவும் பக்தி என்ற பெயரில் கிறிஸ்தவத்தை தாக்கியுள்ள பாரம்பரியம் தான்.

பாரம்பரியம் எதுவானாலும், அது எங்கிருந்து வந்தாலும் அது பிறருக்கு சுமக்க முடியாத பாரம் தான். இதைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது :

''இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின் மேல் சுமத்துவதினால் நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?'' (அப். 5 : 10)

கிறிஸ்தவ மார்க்கம் பாரமானதா? அது சுமக்க முடியாத நுகத்தடியா? இல்லவே இல்லை. கிறிஸ்தவ மார்க்கம் லேசானது தான். கிறிஸ்துவின் உபதேசங்கள் நமக்குக் கைக் கொள்வதற்கு இலகுவானது தான். இதைக் குறித்து இயேசு என்ன சொல்கிறார்.

''என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்'' (மத். 11 : 30)

''நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம். அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல'' (1 யோவான் 5 : 3)

**4. புறஜாதிகளைக் கலங்கப் பண்ணும் பாரம் பரியம் :-** உலக முழுவதிலும் பரம்பரைக் கிறிஸ்தவர்களும் உண்டு. புறஜாதிக் கிறிஸ்தவர்களும் உண்டு. வேத வசனத்துக்கு இசைந்து போகாத எந்த சடங்காச்சாரங்களும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு பிரச்சனையாகத் தான் இருக்கும். சிலர் யூதேயாவிலிருந்து வந்து கலாத்திய நாட்டு சபை விசுவாசிகளைக் குழப்பினார்கள். கலங்கப் பண்ணினார்கள். இதைக் குறித்து வேதம் சொல்கிறது என்ன?

''ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாதென்றும்'' (அப். 15 : 19)

''உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும்'' (கலா. 5 : 12)

என்று பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார். புறஜாதிகளிலிருந்து இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்து புதிய ஏற்பாட்டு சபையில் சேர்க்கப்பட்டவர்களைக் கலங்கப் பண்ணுகிற வேத புரட்டர்கள் உண்டு. நீங்கள் எந்த நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்தீர்கள் என்று குழப்புகிற கூட்டம் உண்டு. உங்களுக்கு சீயோனைப் பற்றிய வெளிப்பாடு உண்டா? என்று குழப்புகிறவர்களும் உண்டு. நான்கு சுவர்களுக்குள் எவ்வளவு காலம் தான் அடைந்தே இருக்கப் போகிறீர்கள். உங்கள் திருச்சபை ஆராதனைக்குப் போவதை மூன்று மாதத்திற்கு நிறுத்துங்கள். உங்கள் எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள். போ...... போ...... போ..... என்று கட்டளையிடுகிறார்கள்.

புறஜாதிகளிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள் ஞாயிற்றுக் கிழமை தோறும் கர்த்தரை ஆராதிக்க ஆலயம் செல்ல வேண்டும் என்ற சத்தியத்தில் உறுதிப்படாத ஒருவரை ஆலயத்தை விட்டு கிராம

ஊழியத்துக்குப் போ என்றால் அவர் கர்த்தரை விட்டு விலகி சினிமா தியேட்டருக்குள் போய் விடுகிறார். எனவே புறஜாதிகளிலிருந்து இரட்சிக்கப்பட்டவருக்குள் எந்த பாரம்பரிய உபதேசங்களையும் சொல்லி கலங்கப்பண்ணக்கூடாது என்று கர்த்தர் சொல்கிறார்.

**5. ஆத்துமாக்களைப் புரட்டும் பாரம்பரியம் :** கலாத்திய நாட்டு சபைகளின் ஆத்துமாக்களைப் புரட்டியது பாரம்பரியம் என்று அப்போஸ்தலர்களின் சங்கம் ஆலோசனைக் கூறுகிறது. இன்று நம் கன்வென்சனுக்கு அழைக்கப்படும் பிரசங்கியார் நமது சபை ஆத்துமாக்களின் ஈடேற்றத்துக்காக பக்தி விருத்திக்கேதுவானதைப் போதித்து ஆவிக்குரிய வாழ்வில் எழுப்புதலைத் தூண்ட வேண்டும்.

இன்று வெளியிடப்படும் பத்திரிக்கைகளும், புத்தகங்களும் வாசிப்போரை ஜெப ஜீவியத்திற்குள்ளும், பரிசுத்தத்திற்குள்ளும் நடத்த வேண்டும். உள்ளூர் சபையின் மேய்ப்பரையும், அவர்கள் விசுவாசிகளையும் இணைத்து கிறிஸ்துவின் அன்பில் வேரூன்றச் செய்ய வேண்டும். இடிப்பதற்கு அல்ல, ஊன்றக் கட்டுகிறதே நம் வேலை. (II கொரி. 13:10). ஆனால் சிலர் பக்தி விருத்திக்கேதுவானதைச் செய்வதில்லை.

பிற ஊழியர்களின் துரும்பு போன்ற குறைவை தூணாகப் பெரிதுபடுத்தியும் புள்ளி போன்ற தவறுகளை பூதமாக மாற்றியும் எழுதுவது, ஆத்துமாக்களைப் புரட்டுவது தான். பிற ஊழியர்களைக் குறையாக எழுதுவதும் தவிர்க்கப்பட வேண்டும். நமக்கு நாமே காட்டிக் கொடுக்கும் துரோகச் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆதிகாலத்து அப்போஸ்தலர்கள் ஊழியம் செய்த நாட்டுகளிலேயே ஆத்துமாக்களைப் புரட்டும் ஊழியர்கள் அலைந்து திரிந்தார்கள். இன்றும் ஏராளம் எழும்பியுள்ளார்கள்.

> **''எங்களால் கட்டளை பெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதனமடைய வேண்டுமென்றும், நியாயபிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே'' (அப். 15:24)**

இவ்விதமாய்க் கலங்கிப் போன ஆத்துமாக்களுக்கு புரட்டப்பட்ட ஆத்துமாவிற்கு ஊழியம் செய்யும்படி இரண்டு ஊழியர்களை அனுப்பினார்கள். முதலாவது பர்னபா, அடுத்தவன் பவுல். பர்னபா என்பதற்கு ஆறுதலின் மகன் என்றும், பவுல் என்றால் சிறியவன் அல்லது தாழ்மையுள்ளவன் என்றும் அர்த்தம்.

பர்னபா - **The son of encouragement -** உற்சாகமூட்டுபவன்
பவுல் - **small -** சிறியவன்

என்ற அர்த்தத்தோடு இந்த இரண்டு ஊழியக்காரர்கள் சென்றார்கள். புரட்டப்பட்ட ஆத்துமாக்கள் ஸ்திரப்படுத்தப்பட்டார்கள். கலங்கின ஆத்துமாக்கள் புத்தியிலே தெளிவு பெற்றார்கள். இன்றைய ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்கும் இது நல்ல உதாரணமாய் இருக்கிறது.

**6. பாரம்பரியத்தை புகுத்தாதது பரிசுத்த ஆவியானவருக்கு நல்லது :** பரிசுத்த ஆவியானவரின் கிரியையும், பரிசுத்த ஆவியானவரின் உபதேசமும் பாரம்பரியத்தை உடைப்பதாகவே இருக்கும். ஓய்வு நாளில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் கதிர்களைக் கொய்து நிமிட்டித் தின்றார்கள்.

பாரம்பரியத்தில் பற்றுக் கொண்ட பரிசேயர்களுக்கு அது எரிச்சலை மூட்டி விட்டது. ஓய்வு நாளில் செய்யத் தகாததை உம்முடைய சீஷர்கள் ஏன் செய்கிறார்கள் என்று இயேசு கிறிஸ்துவிடம் கேள்வி கேட்டார்கள். அவர்களின் தர்க்கமான கேள்விகளுக்கு இயேசு தெளிவான பதிலைத் தந்தார். தேவனுடைய வீட்டையும், தாவீதையும் உதாரணமாகச் சொன்னார். (மத். 12 : 1-8)

**''பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்த மாட்டீர்கள்'' (மத். 12 : 7)**

மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார் என்று பதில் கொடுத்தார். அதாவது பாரம்பரியத்தை மாற்றி புதிய உபதேசத்தையும், புதிய கிரியைகளையும் ஸ்தாபிக்கும் அதிகாரியாக இருக்கிறார் என்று கூறினார்.

**ஓய்வுநாளுக்கும் ஆண்டவர் - LORD என்றும், கிரேக்க மொழியில் KURIOS என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் ஆளுநர், அதிகாரி என்பதாகும்.**

எனவே தான் கலாத்திய நாட்டு சபைகளைக் கலங்கப் பண்ணின கள்ளப் போதகர்களின் கபட செயல்களை மாற்ற அப்போஸ்தலர் சங்கம் கூடினார்கள். நிருபம் எழுதினார்கள். அது பரிசுத்த ஆவியானவருக்கு நல்லது என்று எழுதினார்கள்.

**''அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது. இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக்**

**காத்துக் கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்'' (அப். 15 : 29)**

அதைத் தொடர்ந்து பவுல் அப்போஸ்தலன் கலாத்திய நிருபத்தை எழுதியனுப்பினார். இவ்வித சூழ்நிலையில் எழுதியது தான் கலாத்திய நிருபம். எனவே இந்த நிருபத்தை எழுதியது பரிசுத்த ஆவியானவருக்கும் பரிசுத்த அப்போஸ்தலர்களின் பார்வையிலும் நலம் என்று கூறினார்கள்.

எனவே கலாத்திய நிருபம் அதின் ஆறு அதிகாரங்கள் வாசிப்பவர்களின் ஆத்துமாவுக்கு நல்லது. பாரம்பரியத்தை உடைத்து எறிவோம் அது எல்லோருக்கும் நல்லது.

**7. பாரம்பரியத்தை விலக்குவது எல்லோருக்கும் ஆறுதல் :** அப்போஸ்தலர்களின் சங்கம் கூடி ஜெபித்து ஆலோசனை எழுதும் போது புறஜாதிகளுக்கு நான்கு சட்டங்களை மட்டும் எழுதினார்கள். அதாவது ஏற்கனவே யூதர்களின் பாரம்பரியத்தில் ஆயிரக்கணக்கான உபதேசங்கள் இருந்தாலும் அவற்றில் நான்கு உபதேசங்களை மட்டுமே கைக்கொண்டால் போதுமானது என்று எழுதினார்கள்.

1. **விக்கிரகங்களுக்கு படைத்தவைகளைப் புசியாதிருங்கள்.**
2. **இரத்தத்தைப் புசியாதிருங்கள்.**
3. **நெருக்குண்டு செத்ததைப் புசியாதிருங்கள்.**
4. **வேசித்தனம் செய்யாதிருங்கள். (அப். 15 : 28)**

ஆகிய இந்த உபதேசங்களை மட்டும் புறஜாதி சபையார் கைக்கொண்டால் போதுமானது. யூதர்களின் மற்ற பாரம்பரியங்களைக் கைக்கொள்ள வேண்டியதில்லை என்று எழுதினார்கள். இதை கலாத்திய நாட்டு சபைகள் வாசித்த போது புறஜாதி சபைகளுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என்ன?

**''அதை அவர்கள் வாசித்து, அதினாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள்'' (அப். 15 : 31)**

எனவே பாரம்பரியத்திலிருந்து புதிய ஏற்பாட்டு சபையார் விடுதலை பெறுவது அவர்களுக்கு ஆறுதலையும், சந்தோஷத்தையும் உண்டாக்கும்.

சோதனைக்காரனின் திறமைகளை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். உலகம் துவங்கிய காலத்திலேயே அவன் தன் வஞ்சகத்தை துவங்கியிருக்கிறான். ஏவாளிடத்தில் தன் தந்திரமான போதகத்தைக் காண்பித்தான். அவளின் மனதைக் கெடுத்தான்.

தேவன் நமக்கு எழுதிக் கொடுத்த பிரமாணங்களைப் புறக்கணிக்கும் படி பிசாசு செய்கிறான். அதற்காக தேவ வார்த்தையோடு சில உபதேசங்களைக் கூட்டிக் கொள்ளும்படி நம்மைத் தூண்டுகிறான். நாமும் கூட சில நேரங்களில் தேவனுடைய ஆரோக்யமான உபதேசங்களோடு கொஞ்சத்தைக் கூட்டிக் கொள்கிறோம்.

இதினிமித்தமே மனித வாழ்வில் மீறுதலும், பாவமும், கீழ்ப்படியாமையும் வந்தது. இதினிமித்தமே மனுக்குலம் தேவனை விட்டுப் பிரிக்கப்பட்டு சபிக்கப்பட்டுப் போயிற்று.

சர்ப்பம் ஏவாளிடம் பேசிய போது உன் தேவனாகிய கர்த்தர் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று சொன்னதுண்டோ? (ஆதி. 3:2) இங்கே தேவனுடைய வார்த்தையோடு 'சகல' என்ற வார்த்தையை மட்டும் பிசாசு கூட்டிச் சொல்கிறான். தேவனுடைய வார்த்தையோடு ஒரு சிறு வார்த்தையைக் கூட்டுவது தான் சர்ப்பத்தின் தந்திரம்.

அதேபோல் சர்ப்பத்திற்கு பதில் அளிக்கும் ஏவாளும் ஒரே ஒரு வார்த்தையைக் கூட்டி பதில் பேசுகிறாள்.

ஆனாலும் தோடத்தின் மத்தியில் இருக்கும் கனியைக் குறித்து தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். (ஆதி. 3:3)


இங்கு ஏவாள் வார்த்தையில் ''தொடவும்'' வேண்டாம் என்று ஒரு வார்த்தையைக் கூட்டிக் கொள்கிறாள். இதுவே இன்றைய புதிய ஏற்பாட்டு சபையிலும் சந்திக்கிற உபதேச குழப்பங்களாகும்.

**''சகலவித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய்க் கொடுக்கிற தேவன்'' (1 தீமோ. 6:17)**

என்று வேதம் திட்டவட்டமாய்க் கூறியிருக்க தொடாதே, தீண்டாதே, ருசிபாராதே என்று நியாயப்பிரமாணத்தை புதிய ஏற்பாட்டு சபைக்குள் சில கள்ளப்போதகர்கள் நுழைக்கப் பார்க்கிறார்கள்.

எனவே தான் பவுல் அப்போஸ்தலன் கலாத்திய நிருபத்தை எழுதினார். இந்த நிருபத்தை கலாத்திய நாட்டு சபைகள் வாசித்த போது ஆறுதலும், சந்தோஷமும் அடைந்தார்கள் என்று பார்க்கிறோம். அதே தரிசனத்தோடு தான் இந்த நிருபத்திற்கு விளக்கவுரையாக இப்புத்தகத்தை எழுதியுள்ளேன். வாஞ்சையோடு உள்ளே செல்லுங்கள். வாசித்து முடியுங்கள். நீங்களும் ஆறுதலும் சந்தோஷமும் அடைய உங்களை வாழ்த்துகிறேன். ஜெபிக்கிறேன்.

# 2



# கலாத்திய சபை எப்படிப்பட்டது?

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கர்த்தருடைய சபைக்கு மேய்ப்பராயிருந்து ஆண்டவருடைய ஊழியத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். ஜனங்களைப் பற்றிய ஆவிக்குரிய நிலையை ஊழியக்காரனுக்குக் கர்த்தர் வெளிப்படுத்துகிறார். தேவ ஜனங்களுடைய உள்ளான பக்தியை தேவனுடைய ஊழியக்காரன் வெளிப்பாடாகப் பெற்றுக் கொண்ட பிற்பாடு அந்த சபைக்குக் கொடுக்க வேண்டிய தேவ செய்தியை ஆண்டவர் ஊழியக்காரனுக்கு வெளிப்படுத்துகிறார்.

பிலேயாம் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைப்பதற்காக தூர தேசத்திலிருந்து அழைக்கப்பட்டான். அந்த பிலேயாம் பலிபீடத்திலே பலி செலுத்தின பிற்பாடு கர்த்தருடைய ஆவியானவர் பிலேயாமை நிரப்புகிறார். அந்த பிலேயாம் தன் கண்களை ஏறெடுத்து இஸ்ரவேல் தங்கள் தங்கள் கோத்திரங்களின் படியே பாளயம் இறங்கியிருப்பதை பார்த்தபொழுது பரிசுத்த ஆவியானவர் அந்த சபைக்கு சொல்ல வேண்டிய ஆசீர்வாதமான தேவ வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். (எண். 24 : 2)

இதே காரியத்தைத் தான் இன்றைக்கும் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு செய்கிறார். தன் சபையார் பக்தியிலும், பரிசுத்தத்திலும், விசுவாசத்திலும், ஆவியிலும் வளர வேண்டும் என்ற பாரத்தோடு விசுவாசிகளுக்காக ஜெப நிலையில் காத்திருக்கிற போது தேவ ஜனங்களுடைய உள்ளான நிலைமையைக் கர்த்தர் வெளிப்படுத்துகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு இந்த நிருபத்தை எழுதுவதற்காக தேவனால் தூண்டப்பட்ட சந்தர்ப்பம் எது என்பதை நாம் கடந்த அத்தியாயத்திலே பார்த்தோம். இந்த அத்தியாயத்திலே கலாத்திய

சபையினுடைய உள்ளான பக்தியை ஏழு காரியங்களாலே பரிசுத்த ஆவியானவர் பவுலுக்கு வெளிப்படுத்தினார். உடனே கலாத்திய நிரூபம் ஆறு அதிகாரங்களையும் எழுதும் படியான தேவ செய்தி பவுல் அப்போஸ்தலனுக்குக் கிடைத்தது. அந்த ஏழு உள்ளான நிலைமைகளிலிருந்து கலாத்திய சபை எப்படிப்பட்டது என்பதை இன்று நாம் புரிந்து கொள்ளலாம். சபையாராகிய நாம் இன்று எப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறோம் என்பதை நம்மோடு ஒப்பிட்டு இந்த ஏழு சத்தியத்தின் மூலமாக புரிந்து கொண்டு நாமும் நம்முடைய ஆவிக்குரிய நிலைமையை சீர்ப்படுத்திக் கொள்ளலாம்.

**1. கலாத்திய சபையினர் புத்தியில்லாதவர்கள் :** யோபுவின் சரித்திர புஸ்தகத்திலே யோபுக்கு கர்த்தர் வெளிப்படுத்துகிறார் : ''இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி'' (யோபு 28 : 28) என்று யோபு சொல்கிறார். ஆகவே புத்தி என்று சொல்வது கல்லூரியிலே படிக்கிற பட்டங்கள் அல்ல. கலைத்துறை படிப்பறிவிலே வருகிற புத்தியுமல்ல. தேவன் தருகிற ஞானத்தினாலே பொல்லாப்பை விட்டும், பாவத்தை விட்டும் விலகி ஜீவிப்பது தான் புத்தி என்று வேதம் கூறுகிறது.

ஆனால் கலாத்திய சபையைக் குறித்து புத்தியில்லாத கலாத்தியர் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்கு கடிதம் எழுதுகிறார்.

> **''புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே'' (கலா. 3 : 1)**

கலாத்திய சபையிலிருக்கிற அனைவரும் புத்தியில்லாதவர்கள் என்று பவுல் கடிந்து கொள்ளக் காரணம் என்ன? அவர்களுக்காக தேவன் கொடுத்த சத்தியத்தை விட்டு விலகி, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாத ஒரு மயக்க நிலைக்கு அவர்கள் சென்று விட்டார்கள். சத்தியத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் புத்தியில்லாதவர்கள் தான். விசுவாசிகளானாலும் தேவனுடைய ஊழியக்காரனானாலும் சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

★ மனைவியானவள் புருஷனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எபே. 5 : 22)
★ பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எபே. 6 : 1)
★ விசுவாசிகள் மேய்ப்பருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எபி. 13 : 17)

இவ்விதமாக சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள் தான் புத்தியுள்ளவர்கள். ஆனால் கலாத்திய நாட்டு சபை விசுவாசிகள் விசுவாச சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் நியாயபிரமாண பாரம்பரியங்களை அநுசரிப்பவர்களாக மாறிவிட்டார்கள். அதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுடைய புத்தியில்லாத நிலையைக் கண்டிக்கிறார். இதனை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை

நண்பர்களே! நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களா? அல்லது மனிதனுக்கும் பாரம்பரியங்களுக்கும் பயந்து உலகத்தோடு ஒத்து போய், உலகத்தோடு ஒட்டி உறவாடுபவர்களா? அப்படியிருந்தால் மனந்திரும்புங்கள். கலாத்தியரைப் போல புத்தியில்லாதவர்களாய் இராமல் கர்த்தருடைய சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிற, பொல்லாப்பை விட்டு விலகுகிற புத்திமான்களாய் இருங்கள்.

**2. மாம்சத்திலே முடிவுப் பெறப் போனவர்கள் :**ஆவிக்குரிய உலகத்திலே நான் கண்ட ஒரு பெரிய மாயையான காரியம் என்னவென்றால் ஆவியிலே ஆரம்பம் பண்ணி விட்டு சற்று காலங்கள் கடந்த பிறகு மாம்சத்திலே முடிக்கிற பரிதாபமான மக்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். கலாத்திய சபையும் அப்படித்தான் மாம்சத்திலே முடிவு பெறப் போனது. எனவே தான் கலாத்திய சபையார் மனந்திரும்பி, தங்களுடைய ஆதி மேன்மையை அடையும்படி பவல் அப்போஸ்தலன் அவர்களுக்கு இந்த கலாத்திய நிருபத்தை எழுதினார்.

**ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களா? நீங்கள் இத்தனை புத்தியீனரா? (கலா. 3 : 3)**

அபிஷேகம் பெற்ற ஊழியக்காரனானாலும், ஆவியின் நிறைவு பெற்ற விசுவாசிகளானாலும் ஆவிக்குரியவர்களாகவும் வாழ முடியும். மாம்சத்திற்குரிவர்களாகவும் தங்களை மாற்றிக் கொள்ள முடியும்.

The blood is thicker than water.
**இரத்தம் தண்ணீரை விட கனமுள்ளது.**

உலகத்தான் சொல்வது ஓரளவு இந்த விஷயத்தில் உண்மை தான். நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திலே ஜீவித்தாலும் ஆவியானவர் தங்கியிருக்கிற சரீரமாகிய நம் உடலில் இருக்கிற இரத்தமும் மாம்சமும் அநேகரை இந்த நாட்களில் வீழ்த்திக் கொண்டிருக்கிறது. மாம்சத்திலே முடிவு பெறுகிறவர்கள் ஆவிக்குரிய மக்களிடத்திலே தங்களுடைய வாயைத் திறக்க மாட்டார்கள். தங்களைப் போலவே பின்மாற்றமடைந்த, மாம்ச சிந்தையிலே போய்க் கொண்டிருக்கிற நெருக்கமான உறவினர்களிடத்திலே தங்கள் மாம்ச எண்ணங்களை வெளிப்படுத்துவார்கள்.

★ **மாம்ச சிந்தை மரணம் (ரோமர் 8 : 6)**
★ **மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. (கலா. 5 : 19)**
★ **மாம்சத்தின்படி ஜீவிக்கிறவர்கள் கர்த்தருக்குப் பிரியமாய் இருக்க மாட்டார்கள். (ரோமர் 8 : 8)**
★ **மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். (ரோமர் 8 : 13)**

இவ்விதமாக ஆவியானவர் மாம்சத்திற்குரிய விசுவாசிகளைக் கண்டிக்கிறார். ''தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்'' என்று கலா 6 : 8ல் ஆவியானவர் சொல்கிறார்.

எனக்குத் தெரிந்த ஒரு விசுவாச குடும்பத்தார் தங்களுடைய சகோதரியை வெளியூருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். தன்னுடைய உடன் பிறந்த சகோதரியான அவர்கள் வெளியூரிலே கர்த்தருடைய ஊழியத்தை செய்து கொண்டு வந்தார்கள். அதுவரை தங்களுடைய தசமபாகம், காணிக்கைகளை தங்கள் சபைக்கு ஒழுங்காகக் கொடுத்துக் கொண்டிருந்த இந்த குடும்பத்தார் தங்கள் மாம்ச உறவாகிய தங்களுடைய சகோதரியை இன்னொருவருக்கு திருமணம் செய்து கொடுத்த பிற்பாடு தங்கள் வருமானத்தின் தசமபாகங்களை தங்கள் உடன் பிறந்த சகோதரி ஊழியத்திற்கு அனுப்பினார்கள். இதுவரை தாங்கள் ஐக்கியம் கொண்டிருந்த ஆவிக்குரிய சபையிலே கர்த்தருக்குக் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள்.

இதைத் தான் கர்த்தர் ''தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்'' என்று சொல்லியிருக்கிறார்.

சிலரை கர்த்தர் பொறுப்பான ஊழியத்தில், பொறுப்பான உயர்ந்த தலைமை ஸ்தானத்தில் வைப்பார். அது தேவனுடைய சுத்த கிருபை. அவர்கள் ஆவிக்குரிய நிலையை அறிந்து தான் கர்த்தர் அவர்களை உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கிறார். ஆனால் உயர்ந்த ஸ்தானத்திற்கு வந்த பிற்பாடு தங்களுடைய ஆவிக்குரிய உயர்வை மறந்து விட்டு, மாம்ச சம்பந்தமானவர்களை ஊழிய பொறுப்பில் உயர்த்தவும், கனப்படுத்தவும், அவர்களை ஆதரிக்கவும், அன்பு பாராட்டவும், உதவி செய்யவும், துணிந்து விடுவார்கள். உண்மையான வரங்கள் பெற்ற, கிருபை பெற்ற, ஆவியின் நிறைவு பெற்ற, அபிஷேகம் பெற்ற, திறமையுள்ள, தாலந்துகளை பெற்ற கர்த்தருடைய பிள்ளைகள் அசட்டை பண்ணப்படுவார்கள்.

இது முற்றிலும் தவறானது. ஆவிக்குரிய ஊழியத்திலே மாம்சத்திற்கு கொஞ்சம்கூட இடமே கிடையாது. தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல. தேவனுடைய பிள்ளைகளும் பட்சபாதம் பார்க்கவே கூடாது.

கர்த்தருடைய ஊழியக்காரனாகிய லேவியன் முகம் பாராதவன். உறவினர்களாயிருந்தாலும், நண்பர்களாயிருந்தாலும், மாம்ச சொந்தக்காரர்களாயிருந்தாலும் கர்த்தர் பட்சத்திலே நின்று கிரியை செய்யக்கூடியவன். ஆகவே நாமும் மாம்சத்தில் முடிவு பெறவே கூடாது.

ஒரு ஊழியக்காரனை கர்த்தர் புழுதியிலிருந்து எடுத்து உயர்த்தினார். ஒரு ஸ்தாபனத்திற்கு தலைவராக்கினார். அவர் கரத்திலே ஒவ்வொரு மாதமும் சில லட்சங்களைக் கர்த்தர் கொடுத்தார். அவரோ தன் ஆவிக்குரிய நிலையைப் பார்த்து கனப்படுத்தி கர்த்தர் நம்மை உயர்த்திருக்கிறார் என்பதை மறந்து விட்டு தன் மாம்ச உறவினர்களை உயர்த்துவதிலும், மாம்ச உறவில்லாதவர்களை பகைத்து, ஊழியக்காரர்களை களை எடுத்து தூக்கி எறிகிற ஒரு மனிதனாக இருந்தார். தேவ ஆவியை இழந்த சவுலை பொல்லாத ஆவி கலங்கப்

பண்ணினது போல பிற்பாடு இவர் உயர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டு, அவருடைய கரத்திலிருந்த தேவனுடைய ஆசீர்வாதமான பணங்களெல்லாம் பிடுங்கப்பட்டு, செல்லா காசாக விரைவில் தள்ளப்பட்டார்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற நண்பர்களே! மாம்சத்திலே ஒருபோதும் ஆவிக்குரிய வாழ்க்கையை நடத்தக்கூடாது. மாம்சத்திலே முடிக்கவும் கூடாது. ஆவியிலே ஆரம்பம் பண்ணின நாம் ஆவியிலே முடிக்க வேண்டும். உண்மையில் துவங்கிய நாம் உண்மையிலே முடிக்க வேண்டும். பரிசுத்தத்திலே துவங்கின நாம் பரிசுத்தத்திலே முடிவு பெற வேண்டும். தெய்வீக அன்பிலே துவங்கிய நாம் தெய்வீக அன்பிலே முடிவு பெற வேண்டும். தேவ சித்தத்திலே துவங்கிய நாம் தேவ சித்தத்திலே முடிக்க வேண்டும். கர்த்தருடைய சத்தம் கேட்ட நாம் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டே வாழ்க்கையின் முடிவை முடிக்க வேண்டும்.

ஆனால் கலாத்திய சபையோ மாம்சத்திலே முடிவு பெறப் போகிற சபையாக மாறி விட்டது. பரிசுத்த ஆவியானவர் பவுலின் மூலம் சத்தியத்தால் கடிந்து கொண்டு மாம்சத்திலே முடிவு பெறப் போகிற நீங்கள் மீண்டும் ஆவிக்குரிய நிலைக்குத் திரும்புங்கள் என்று எச்சரித்து எழுதுகிறார்.

**3. கிருபையிலிருந்து விழுந்த சபை :-** கலாத்திய சபை கிருபையிலிருந்து விழுந்த சபையார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களை எச்சரிக்கிறார். (கலா. 5:4). அன்று அவர்கள் கிருபையிலிருந்து விழுந்து போனது போலவே இன்றும் தேவ கிருபையிலிருந்து விழுந்து போன விசுவாசிகள் உண்டு. தேவ கிருபையிலிருந்து விழுந்து போன ஊழியக்காரர்களும் உண்டு. தேவ கிருபையிலிருந்து விழுந்து போனவர்கள் எப்படியிருப்பார்கள் என்பதற்கு வேத புத்தகத்திலே மூன்று மனிதர்களை உதாரணமாகக் கர்த்தர் காட்டியிருக்கிறார்.

(1) சவுல் ராஜா - கசப்பு, வைராக்கியம் உள்ளவர்
(2) நியாயாதிபதியாகிய சிம்சோன் - வேசித்தனம் செய்தவர்
(3) ஈசாக்கின் மூத்த குமாரனாகிய ஏசா - நிர்விசாரம் உள்ளவர்

இந்த மூன்று பேரும் தேவன் கொடுத்த கிருபையிலிருந்து விழுந்தவர்கள். இவர்கள் கிருபையிலிருந்து விழுந்ததற்குக் காரணம் என்னவென்று கவனித்தால் எபி 12:15, 16, 17 ஆகிய வசனங்களில் வீழ்ச்சிக்கான காரணத்தை கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

ஆகவே இந்த மூன்றில் ஏதாவது ஒரு காரியத்துக்கு தங்கள் வாழ்க்கையில் இடங்கொடுத்தாலே கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கிற கிருபையை இழக்க நேரிடும். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய வாழ்க்கையைக் குறித்து சொல்கிற போது ''தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு,

உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்கிறோம்.'' (II கொரி 6:1) என்று குறிப்பிடுகிறார். ஆகவே தேவனுடைய கிருபையை விருதாவாக்கக் கூடாது. தேவனுடைய கிருபையை நஷ்டப்படுத்தக்கூடாது.

கலாத்திய நாட்டு சபை கிருபையிலிருந்து விழுந்தது என்றால் அதற்கு என்ன அர்த்தம்? கிறிஸ்துவினாலே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று கிறிஸ்துவை சார்ந்து ஜீவிப்பது தான் கிருபையில் நிற்கிற அனுபவங்கள். ஆனால் அதே சமயம் கிறிஸ்துவின் கிருபையை முக்கியத்துவப்படுத்தாமல் நியாயப் பிரமாண கிரியைகளை முக்கியப்படுத்தி அதையே உபதேசங்களாகப் போதிப்பது கிருபையிலிருந்து விழுவதைக் குறிக்கிறது. நியாயப் பிரமாணத்தினால் ஒருவன் எப்படி நீதிமானாக முடியும்? இதை செய், அதை செய்; அப்பொழுதுதான் நீதிமானாவாய் என்பது தான் நியாய பிரமாணத்தின் நீதியாகும். ஆனால் கிருபையோ உனக்காக கிறிஸ்து சிலுவையிலே எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டார். நீ அதை விசுவாசித்தால் நீதிமானாவாய் என்று சொல்வது தான் கிருபை. ஆவிக்குரிய ஊழியங்களிலே உபதேசங்கள் கொடுப்பது நல்லது. புத்திமதிகள் கொடுப்பது நல்லது. நாம் கிறிஸ்துவின் கிருபையிலே வளர்வதற்காக பக்தியுள்ள சில காரியங்களைக் கற்றுக் கொண்டு வளர்வது நல்லது தான். ஆனால் அதை அதிகமாய் மேன்மைப்படுத்தி கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து வருகிற உயர்வை மறந்து போவோமானால் அந்த கிறிஸ்துவின் கிருபையிலிருந்து விழுந்த போகக்கூடும்.

சிலர் தங்களுக்கு இருக்கிற பிரதிஷ்டையை மேன்மைப் படுத்துவார்கள். அது மகா பெரிய தவறு. பிரதிஷ்டை தங்களுக்கு அவசியம் தான். பிரதிஷ்டையின் மூலம் நாம் பரிசுத்தமடைகிறோம். பிரதிஷ்டையிலே தேவ பெலன் அடங்கியிருப்பது உண்மை தான். ஆனாலும் அந்த பிரதிஷ்டை நியாய பிரமாணத்தைப் போல நாம் நிறைவேற்றுகிற ஒரு கிரியையே தவிர அதினாலே நாம் நீதிமான்களாவதில்லை, அதினாலே கர்த்தர் நம்மை ஆசீர்வதிப் பதுமில்லை. எல்லாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம். இது நம்மால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபே 2:8). எனவே அருமையான தேவனுடைய பிள்ளைகளே! நாம் கிருபையை சார்ந்தே ஜீவிப்போமாக.

**4. பின்மாற்றக்காரர்கள் :-** பவுல் அப்போஸ்தலன் ஊழியம் செய்த முதலாம் நூற்றாண்டு காலத்திலேயே சபையில் பின்மாற்றக்காரர்கள் இருந்திருக்கிறார்கள். பொதுவாக 100 பேர் கொண்ட சபையிலே 5 பேர் பின்மாற்றக்காரர்களாய் இருப்பார்கள். ஆனால் கலாத்திய நாட்டு சபையார் அனைவரும் பின்மாற்றம் அடைந்திருந்தார்கள். இது கர்த்தருடைய பார்வையிலே அதிர்ச்சி தரக்கூடிய ஒரு செயலாகும்.

**''உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள்**

இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்'' (கலா 1:6).

இந்த வசனத்திலிருந்து நாம் அறிகிறது என்னவென்றால் கலாத்திய சபை முழுமையாக பின்வாங்கிப் போனது. பின்மாற்றத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று பாவத்திற்கு இடங்கொடுத்து ஆவிக்குரிய ஜீவியத்தை நஷ்டப்படுத்தி பின்வாங்குவது. இப்படிப்பட்ட பின்மாற்றம் சபையிலே ஒரு சிலருக்குத் தான் இருக்கும். ஆனால் முழு சபையும் பின்மாறுவது என்றால் அது பாவத்திலே விழுகிற வீழ்ச்சியினால் வருகிற பின்மாற்றம் அல்ல, உபதேசக் குழப்பத்தினால் வருகிற பின்மாற்றமாகும்.

இப்படிப்பட்ட பின்மாற்றத்தைக் குறித்தும் கூட நாம் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். அருமை நண்பர்களே! அன்பு தேவ பிள்ளைகளே! நீங்கள் ஒருவேளை பாவமாகிய பின்மாற்றத்திற்கு இடங்கொடாமல் இருக்கலாம் ஜீவியத்திலே பரிசுத்தமாக இருக்கலாம். ஆனால் உபதேச குளறுபடிகள், சத்தியத்திலே வீழ்ச்சி ஆகியவற்றிலே நீங்கள் பின்மாற்றம் அடையக்கூடாது. கலாத்திய சபை கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விட்டு விட்டு வேறொரு சுவிசேஷத்தை நோக்கி பின்மாற்றம் அடைந்து விட்டது. ஆகவே கலாத்திய சபையார் அனைவரும் முழுவதும் பின்மாற்றக்காரர்கள் ஆகிவிட்டார்கள்.

ஜீவியத்திலே பின்மாற்றம் அடைந்தவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, பரிசுத்தமடைந்து மீண்டும் புதுப்பிக்கப்பட வாய்ப்புண்டு. அதே வேளையில் உபதேசத்திலே பின்மாற்றம் அடைந்தவர்களும் மீண்டும் புதுப்பிக்கப்பட முடியுமா?

நிச்சயமாய் புதுப்பிக்கப்பட முடியும். உபதேசத்தை விட்டு விலகினேன், உபதேசத்தை மறுதலித்தேன். உபதேசத்துக்கு மாறுபாடானவைகளைச் செய்தேன் என்று அந்தரங்கத்தில் ஆண்டவரோடு அறிக்கையிடுவது போல இவரால் இடறலடைந்த ஜனங்கள் மத்தியிலேயும் அறிக்கையிட்டு உபதேச மாறுபாடுகளிலிருந்தும், குளறுபடிகளிலிருந்தும் மீண்டும் திரும்ப வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் நமக்கு திட்டவட்டமாய்க் கூறுகிறார்.

பொதுவாக பாவம் ஒரு பின்மாற்றம் என்பதை மனிதன் உணர்வது இலகுவாக இருக்கும். ஆனால் உபதேச மாறுபாடுகளை பின்மாற்றம் என்று ஒத்துக்கொள்வது மகா கடினம். ஏனென்றால் உபதேச மாறுபாடுகளை இவர்கள் ஏற்றுக்கொள்ளும் போது ஏற்கனவே இருக்கிற நீதியுள்ள நடக்கையில் இருந்து சற்று மேன்மையான நீதிமானாகிறோம் என்று நினைத்து தான் தவறான உபதேசங்களுக்குள் பின்மாற்றம் அடைகிறார்கள். ஆனால் அவர்கள் ஜீவியத்திலே உண்மையான நீதியிலே முன்னேற்றம் வரப்போவதில்லை. திருடன் கையில் தேள் கொட்டினால் ஐயோ, தேள் என்னைக் கொட்டி விட்டதே என்று அவன்

கதற மாட்டான். வலியையும் வேதனையையும் பொறுத்துக் கொண்டு, மரணமே வந்தாலும் அதை அடக்கிக் கொண்டு ஓடுவானே தவிர மருத்துவம் செய்து திருந்த மனமற்றவனாய் இருப்பதுபோல, உபதேச குளறுபடிகளுக்குள் செல்கிறவர்களும் கூட அதை தவறு என்று ஒத்துக்கொண்டு திருந்துவது மிகக் கடினம். தன் நீதியிலே கெட்டுப் போகிற நீதிமானும் உண்டு என்று சாலொமோன் சொல்கிறது போல நீதிமானாகப் போகிறோம் என நினைத்து மாறுபாடான உபதேசங்களிலே விழுந்து போகிறவர்கள் திரும்பப் புதுப்பிக்கப் படுவது கஷ்டமான காரியம்.

**5. உணர்ச்சிக்கு இடமளிக்கக் கூடியவர்கள் :-** அப்போஸ்தலனாகிய பவுல் சபை கட்டுகிற ஊழியத்திலே ஆழ்ந்த அனுபவமும், முதிர்ந்த அறிவும் உடையவர். சபையில் இருக்கிற விசுவாசிகளை அவர் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறார்.

(1) குழந்தை விசுவாசிகள் (I கொரி 3 : 1)
(2) ஜென்ம சுபாவ விசுவாசிகள் (I கொரி 2 : 14)
(3) ஆவிக்குரிய விசுவாசிகள் (I கொரி 3 : 1)

I கொரி 3 : 1-6 வசனங்களில் இந்த சத்தியத்தைக் குறித்து நாம் பார்க்கிறோம்.

குழந்தை விசுவாசிகள் என்றால் என்ன? I கொரி 3 : 1-ல் அவர்களை மாம்சத்திற்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் என்றும் பவுல் அழைக்கிறார். குழந்தையினிடத்திலே பிடிவாத குணம் உண்டு. பொறாமை உண்டு, கேட்டதைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அழுகிற சுபாவம் உண்டு. தன்னை விட மற்ற பிள்ளைக்கு நன்மை கிடைத்து விடக்கூடாத என்ற பொறாமை உண்டு. தனக்குத் தெரிந்ததை உண்மை என்று சாதிக்கக்கூடிய வாக்குவாத குணங்கள் உண்டு. (I கொரி 3 : 3). இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறார்கள். 50 பைசா சாக்லேட் கிடைத்தால் ஆனந்த சந்தோஷமடைவார்கள். அதே சாக்லேட் வாங்க முடியாத சூழ்நிலை இருந்தால் அழுது பிடிவாதம் பண்ணுகிறவர்களாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களே குழந்தை விசுவாசிகள் இவர்கள் கலாத்திய சபையிலே நிரம்பியிருந்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் இவர்களைக் குறித்து எழுதும் போது **''உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன். அப்படியிருந்தும், என் சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் அசட்டை பண்ணாமலும், அரோசியாமலும், தேவ தூதனைப் போலவும், கிறிஸ்து இயேசுவைப் போலவும் என்னை ஏற்றுக் கொண்டீர்கள். அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக் கூடுமானால் அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்'' என்று கலா 4 : 13, 14, 15 ஆகிய வசனங்களில் கூறுகிறார்.**

இந்த வசனங்களிலே பவுல் சொல்கிற வார்த்தைகளைப் பாருங்கள். ''அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே?'' என்று கேட்டார். அப்படியானால் அவர்கள் இப்பொழுது எப்படியிருக்கிறார்கள்? தாங்கள் ஆதியிலே கொண்டிருந்த ஆனந்த பாக்கியத்தை விட்டு விட்டார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு தேவ மனிதரென்றும், தேவனைத் தரிசித்தவரென்றும், அவரிடத்திலிருந்து வருவது தேவனுடைய சுவிசேஷமென்றும் நம்பி விசுவாசித்து ஏற்றுக் கொண்டு, கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்த இந்த கலாத்திய சபை விசுவாசிகள் இப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரரை அசட்டை பண்ணி விட்டு, மற்றவர்கள் சொல்லுகிற மாறுபாடான வார்த்தைகளுக்கு இடமளித்து விட்டார்கள். இவர்கள் தான் குழந்தை போன்ற விசுவாசிகள்.

இப்படிப்பட்ட மக்களை இன்றைக்கும் சபையிலே பார்க்க முடியும். எங்கேயாவது கன்வென்சன் என்று நோட்டீஸ், வால்போஸ்ட்டுகளைப் பார்த்தால் ஓட்டம் பிடிப்பார்கள். வேதத்தை எடுத்துக் கொண்டு வீதியிலே திரிகிற ஊழியக்காரனை தங்கள் வீட்டுக்குள் கூப்பிட்டு எங்களுக்காய் ஜெபியுங்கள் என்று சொல்வார்கள். கண்ட ஊழியக்காரரிடத்தில் எல்லாம் தலையைக் கொடுத்து ஜெபித்து அங்குமிங்கும் கிடக்கிற குப்பை கூளங்களை தலையிலே கொட்டிக் கொள்வார்கள். இவர்கள் தான் கிறிஸ்துவுக்குள் குழந்தை போன்ற விசுவாசிகள். பிற்பாடு தேவையில்லாத குழப்பங்களும், தேவையில்லாத சிக்கல்களும், எதிர் பார்க்க முடியாத பிசாசின் போராட்டங்களும் அவர்கள் மீது வந்து அமருகிற போது ஐயோ! ஏன் எனக்கு இப்படி என்று புலம்பி மேன்மையான ஆனந்த பாக்கியத்தை இழந்து போவார்கள். இப்படி தான் கலாத்திய சபை தங்களுடைய கண்களைப் பிடுங்கிக் கொடுக்கக்கூட ஆயத்தமுள்ளவர்களாய் அன்புள்ளவர்களாய் ஆதியிலே இருந்தார்கள். ஆனால் இன்றோ அந்த ஊழியக்காரனை தங்கள் முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டு தங்களுக்கு இருந்த ஆதி அனந்த பாக்கிய நன்மையை இழந்து போனார்கள்.

கலாத்திய நாட்டு சபைகள் ஸ்தாபிக்கப்படுகிற போது அப்போஸ்தலனாகிய பவுலைக் கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்தினார். லீஸ்திராவிலே தாயின் வயிற்றிலே சப்பாணியாய் பிறந்தவன் எழுந்து காலூன்றி நின்று குதித்தெழுந்து நடந்தான். (அப் 14 : 10). இதைக் கண்ட கலாத்திய நாட்டு சபை விசுவாசிகள் என்ன செய்தார்கள் தெரியுமா? உடனே இந்த பர்னபாவுக்கும் பவுலுக்கும் முன்பாக ஆடு மாடுகளை பலியிடவும், இவர்களுக்கு பூ மாலைகள் போட்டு புகழவும் தொடங்கி விட்டார்கள். இவ்விதமாக இருந்த அதே விசுவாசிகள் அந்த அதிகாரத்தின் பிற்பகுதியில் பார்த்தால் அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனை செய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப் போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியே இழுத்துக் கொண்டு போனார்கள். (அப். 14 : 19)

எவ்வளவு பரிதாபமான நிலைமை! பத்து வசனங்களுக்கு முன்னால் இதே ஜனங்கள் ஊழியக்காரருக்கு பூமாலை போட்டு, காளை எருதுகளை பலியிட்டு புகழுகிறார்கள். பத்து வசனங்களுக்குப் பின்னே ஒருசில நாளிலேயே அந்தியோகிவிலிருந்து வந்த யூதர்களுடைய போதனைகளைக் கேட்டு அதே ஊழியக்காரர்களை கல்லெறிகிறார்கள். பவுல் மரித்து போனாரென்று நினைக்கும் அளவுக்கு பயங்கரமான இரத்தம் சிந்துதலும், காயங்களும் பவுலுக்கு உண்டாயிற்று.

அன்பானவர்களே! உங்கள் ஆவிக்குரிய நிலைமை என்ன? உங்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தி, உங்களை அபிஷேகத்திற்குள் வழிநடத்தி, தேவ விசுவாசத்துக்குள் கொண்டு வருகிற ஊழியக்காரர்களை உங்கள் ஆயுட்காலம் முழுவதும் கனப்படுத்துங்கள். அது தான் உங்கள் ஆவிக்குரிய நிலைமையின் உச்சகட்டம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**6. ஆவியிலே மரித்தவர்கள் :-** கலாத்திய நாட்டு சபை விசுவாசிகள் அனைவரும் தங்கள் உள்ளான மனிதனிலே ஆவியிலே செத்தவர்களாக இருந்தார்கள். ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல் இவர்கள் இருக்கிற நிலையைக் குறித்து எழுதுகிறார்.

**''என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்''. (கலா 4:19).**

அப்படியானால் கலாத்திய சபை விசுவாசிகளிடத்திலே கிறிஸ்து இல்லை. கிறிஸ்து தங்கள் ஆவியிலே இல்லாதவர்கள் ஆவி மனிதனில் மரித்தவர்கள் தானே. ஆவியிலே மரணம் என்பதைக் குறித்து அநேகருக்குத் தெரியாது. மரணம் என்றால் பிரிவு என்று அர்த்தம். சரீரத்திலே ஒருவருக்கு மரணம் வருகிறது என்று சொன்னால் மரித்தவன் தன் குடும்பத்தார் அனைவரையும் விட்டுப் பிரிக்கப்பட்டு, ஒரு பெட்டியிலே வைக்கப்பட்டு, பின்பு அவன் கொண்டு செல்லப்பட்டு, தூரமாய் இருக்கிற கல்லறையிலே தனிமையிலே வைத்து மூடப்படுகிறான். அது தான் சரீர மரணம்.

இதுபோலவே ஆவியிலே மரித்தவர்களும் முதலாவது கர்த்தரை விட்டுப் பிரிக்கப்படுவார்கள். பின்பு கர்த்தருடைய சபையை விட்டு பிரிந்து பிறகு சபை கூடி வருதலை விட்டு விடுவார்கள். தங்களுடைய சபை சரியில்லையென்று அந்தரங்கத்திலும், வெளியிலும் தனக்கு அறிமுகமான அனைவரிடமும் குறை கூறுவார்கள். இவ்விதமாய் ஆவியிலே மரித்தவர்கள் பின்பு பயங்கரமான தனிமைக்கு போய் விடுவார்கள். இதுவே ஆவியிலே மரிப்பதாகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இதை அவர்களுக்குச் சொல்லும் போது மீண்டும் ஆவிக்குரிய வாழ்வில் ஜீவன் வர வேண்டுமானால் கிறிஸ்துவை விட்டு பிரிந்த இவர்கள், சத்தியத்தை விட்டு தூரமாகப் போன இவர்கள் மீண்டும் கிறிஸ்துவோடுகூட ஐக்கியப் படவேண்டும்

என்கிறார். ஜீவன் என்றால் ஐக்கியமாகும். கிறிஸ்துவோடு இவர்கள் ஐக்கியப்பட வேண்டும். ஆனபடியால் அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்காக ஒரு ஸ்திரீ கர்ப்ப வேதனைப்படுகிறது போல ஆவிக்குள்ளாக நொறுங்கி அவர் ஜெபம் பண்ணுகிறார். என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து மீண்டும் உங்களிடத்தில் உருவாக வேண்டும். உங்கள் ஆவியில் கிறிஸ்துவின் ஜீவனும் இணைந்து காணப்பட வேண்டும் என்று பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார்.

ஆகவே கலாத்திய நாட்டு சபை கல்லறைக்குப் போக வேண்டிய சபையாயிருந்தது. அடக்க ஆராதனை நடத்தப்பட வேண்டிய நாற்றமெடுத்த நிலைமைக்கு போய் விட்டது. இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை நண்பர்களே! கலாத்திய நிருப விளக்க வுரையைப் படிக்கிற நாம் நம்முடைய உள்ளான மனிதனில், நமது ஆவியில் பெலப்பட்டுக் கொண்டிருக்கிறோமா? முழங்கால் படியிட்டு ஜெபிக்கும் போது பரிசுத்த ஆவியானவரின் தூய பிரசன்னத்தால் நிரம்புகிறோமா? பரிசுத்த ஆவியானவருடைய மகிமையின் மேகம் நம்மை மூடி நிரப்புகிறதா? அவருடைய இனிமையான பிரசன்னம் நம்மை நிரப்புவதாலே நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் பரிசுத்த ஆவியில் களிகூறுகிறதா? தேவனைப்பாடி ஆராதிக்கிற தேவ சபையின் ஆராதனையிலே கர்த்தருடைய மகிழ்ச்சி நமக்குள்ளே பொங்குகிறதா? கர்த்தருடைய ஊழியர்களைப் பார்க்கும் போது நம்முடைய உள்ளம் சந்தோஷப்படுகிறதா? கர்த்தருக்காய் கொடுக்க சந்தர்ப்பம் வருகிற போது சந்தோஷமாய் அள்ளிக் கொடுக்கிறோமா? பரிசுத்த ஆவி யானவர் இந்த வேளையிலே உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார்.

**7. குழம்பிப் போனவர்கள் :-** கலாத்திய நாட்டு சபையிலிருக்கிற விசுவாசிகள் எல்லாரும் கலங்கிப் போன கிணற்றின் தண்ணீரைப் போல குழம்பிப் போனவர்கள். குழம்பிப் போன குட்டையிலே வண்டலும், தண்ணீரும் கலந்திருக்கிறதைப் போல இவர்கள் புத்தியிலே குழப்பமானவர்கள்.

**''உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்'' (கலா 5 : 10).**

**''உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும்''. (கலா 5 : 12)**

யூதேயாவிலிருந்து வந்த கள்ளப் போதகர்கள் தங்கள் குழப்பமான உபதேசங்களாலே கலாத்திய சபை விசுவாசிகளைக் குழப்பி விட்டார்கள். அவர்களை கலக்கி விட்டார்கள். குழப்பத்திற்கும், கலக்கத்திற்கும் இவர்கள் இடங்கொடுத்து விட்டார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுடைய உள்ளான ஆவிக்குரிய நிலைமையை எடுத்துச் சொல்கிறார்.

''அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக் கொளுத்திச் சோதித்து, வண்டல் போலக் குழம்பியிருக்கிறவர்களும், கர்த்தர் நன்மை


செய்வதும் இல்லை தீமை செய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரைத் தண்டிப்பேன்''. (செப்பனியா 2 : 12). கடைசி காலத்திலே தேவனுடைய சபையிலிருக்கிற மக்கள் கலங்கிப் போவார்கள், குழம்பிப் போவார்கள் என்பதை தீர்க்கதரிசனமாய் செப்பனியா மூலமாகக் கர்த்தர் எச்சரித்திருக்கிறார். இந்த தீர்க்கதரிசன நிறைவேறுதலை இன்று உலகமெங்கிலும் இருக்கிற அநேக சபைகளிலே நாம் காணமுடியும். கர்த்தருடைய வேதம் திட்டவட்டமாய்ச் சொல்லுகிற சத்தியத்திலே ஜனங்கள் இன்றைக்கு கலங்கினவர்களாகவும், குழம்பினவர்களாகவும் இருக்கிறார்கள். விருத்தசேதனம் நமக்கு தேவையில்லை என்பது இவர்களுக்கு நன்றாய்த் தெரியும். விசுவாசத்தினால், கிருபையினால் தான் நாம் மனந்திரும்புகிறோம் என்று விசுவாசித்து இவர்கள் மனந்திரும் பியவர்கள்.

ஆனால் இப்பொழுதோ யூத போதகர்கள் கொடுத்த கள்ள உபதேசங்களைக் கேட்டு விருத்தசேதனம் பண்ணிக் கொண்டால் நல்லது என்று நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே இவர்களுடைய வாழ்க்கை இப்பொழுது குழம்பிப் போனது, கலங்கிப் போனது.

அப்போஸ்தலனாகிய பவுல் இவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதும் போது உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் அவன் தனக்கேற்ற ஆக்கினைகளை அடைவான், உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும் என்று பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிற ஆத்தும வேதனையோடு பவுல் இப்படி எழுதுகிறார்.

ஒருவர் புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய பிள்ளையாய் மாறுகிறார் என்றால் அதற்காக ஊழியக்காரர் எடுக்கிற தியாகங்கள் ஏராளம் ஏராளம். எத்தனையோ நாட்கள் உபவாச ஜெபங்கள் ஏறெடுக்கிறார். எத்தனையோ நாட்கள் முழு இரவு ஜெபத்திலே கண் விழித்திருக்கிறார். எத்தனையோ நாட்கள் ஓடி ஓடி வீடு சந்திக்கிறார். எத்தனையோ மணி நேரங்கள் ஜெபிப்பதிலும், உபதேசம் பண்ணுவதிலும் செலவிடுகிறார். ஆனால் மிக எளிதாக ஒரு சிறு துளி விஷம் பாலில் கலப்பது போல கள்ளத் தீர்க்கத்தீர்க்க தரிசிகளுடைய போதனைகளும் உபதேசங்களும் நல்ல விசுவாசிகளைக் குழப்பிவிடுகிறது. கலக்கி விடுகிறது.

ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வளவு கடினமான வார்த்தைகளை உபயோகித்து இந்நிருபத்தை எழுதுகிறார். அருமை நண்பர்களே! கலக்கத்திற்கு உங்களிடத்திலே இடம் வேண்டாம். குழப்பத்திற்கும் இடம் வேண்டாம். உங்களை நடத்திக் கொண்டிருக்கிறவர் பரிசுத்த ஆவியானவர். அவர் சரியான பாதையிலே நடத்திக் கொண்டிருக்கிறார். குறுக்கு வழியாய் வருகிற கள்ள சகோதரர்களுக்கும், பக்க வழியாய் நுழைகிற பழைய ஏற்பாட்டு உபதேசங்களுக்கும் நீங்கள் இடங்கொடாமல் குழம்பிப் போகாமல் கலக்கம் அடையாமல் காணப்படுங்கள்.



# 3

# சுவிசேஷம் எப்படிப்பட்டது ?

(கலா 1 : 1-14 வரை)

முந்திய தலைமுறைகளின் உலகளாவிய எழுப்புதலுக்கு தேவ பக்தர்களைத் தூண்டி எழுப்பிய சத்தியம் கலாத்திய நிருபத்திலிருந்து சொல்லப்பட்டது என்று வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். இந்த நிருபத்தின் செய்தியை மார்ட்டின் லூதர் வாசித்த போது அது அவருக்கு மாபெரும் ஆவிக்குரிய விழிப்புணர்வைக் கொடுத்தது. சமய மறுமலர்ச்சிக்கு வழி வகுத்தது. வேதத்துக்குப் புறம்பான எத்தனையோ பாரம்பரிய அனுசாரங்கள் நூற்றுக்கணக்கானோரை அடிமைப்படுத்தி வைத்திருந்தது. அவை எல்லா வற்றிலுமிருந்து ஒரு நொடிப் பொழுதிலே விடுதலை பெற்று, தன் பாரம்பரிய மார்க்கத்திலிருந்து அவர் வெளியே வந்தார். அவர் மூலம் இன்றைக்கு விசுவாசத்தினால் இரட்சிப்பு என்ற மாபெரும் சத்தியம் வெளிப்பட்டது.

அவரைத் தொடர்ந்து உலக எழுப்புதலுக்குக் காரணமாயிருந்த கர்த்தருடைய தாசன் ஜான் வெஸ்லி தன் இருதயத்திலே நீண்ட காலமாக தெய்வ சமாதானத்தைத் தேடி வாஞ்சித்து அலைவாராம். ஆனாலும் அவருக்கு அந்த சமாதானம் கிடைக்கவில்லை. ஒருமுறை கருத்தோடு ஜெபத்தோடு முழு சிந்தையோடு திறந்த மனதோடு கலாத்திய நிருபத்தின் அடிப்படை சத்தியத்தை அவர் பிரசங்கத்தில் கேட்டபொழுது இவர் உள்ளத்தில் தேவ சமாதானத்தை கர்த்தர் ஊற்றினார்.

அந்த சமாதானத்தோடு தன் சொந்த வாழ்க்கையிலும், குடும்பத்திலும் எத்தனையோ முறை குழப்பங்களும், வேதனையான சம்பவங்களும் அவருடைய வாழ்க்கையில் குறுக்கிட்டாலும் அவரோ கலாத்திய நிருப

சத்தியத்திலே கிடைத்த சமாதானத்தின் மூலம் கடைசி வரை வெற்றியாய் ஊழியத்தைச் செய்தார். ஒவ்வொரு ஆறு மாதங்களுக்குள்ளும் பத்தாயிரம் பேரை இரட்சிப்புக்குள் நடத்தி முழுக்கு ஞானஸ் நானத்திற்குள் நடத்தி மகா பெரிய எழுப்புதலை உலகத்தில் ஏற்படுத்தினார்.

எந்த ஒரு தலை முறையினரும் கலாத்திய நிருபத்தின் செய்தியைக் கேட்டு அதற்கு செவி சாய்ப்பார்களேயானால் அந்த செய்தி அவர்கள் இருதயத்தைத் தூண்டி செயல்பட வைக்கும்.

இந்த அத்தியாயத்திலே கலாத்திய நிருபம் முதலாம் அதிகாரம் 1ம் வசனம் முதல் 14ம் வசனம் வரை உள்ள பகுதிகளிலிருந்து சுவிசேஷம் எப்படிப்பட்டது. என்கிற தலைப்பிலே ஏழு சத்தியங்களை நாம் தியானிக்கப் போகிறோம்.

**1. சுவிசேஷத்தின் மையப்பொருள் கிறிஸ்து:** எந்தத் தலைமுறை பிரசங்கியாக இருந்தாலும் சுவிசேஷம் என்றாலே அங்கே கிறிஸ்து உயர்த்திக் காட்டப்படவேண்டும். ஆதியாகமம் முதல் அதிகாரம் முதலாம் வசனத்தில் இருந்து வெளிப்படுத்தல் 22-ம் அதிகாரம் 21-ம் வசனம் வரைக்கும் எந்த வேத வசனத்திலும் கிறிஸ்துவை நிழலாட்டமாகவும், தத்ரூபமாகவும், நேரடியாகவும் நாம் எடுப்பித்து காண்பிக்க முடியும். அப்படிப்பட்டவனே சுவிசேஷ ஊழியக்காரன். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரி சபையாருக்கு எழுதும்போது சுவிசேஷம் என்றால் என்ன என்பதற்கு அருமையான விளக்கத்தைச் சொல்கிறார்.

**"இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷம்..." (ரோமர் 16 : 26)**

ஆகவே சுவிசேஷம் என்றாலே அது இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகும். இயேசு என்ற நாமத்தை போட்டு அதன் அருகிலே நல்லவர் என்று சேர்த்து இயேசு நல்லவர், இயேசு அற்புதர், இயேசு பாவங்களை மன்னிப்பார், இயேசு அதிசயமானவர் என்று எந்த வார்த்தையைச் சொன்னாலும் இயேசுவைக் கூறுகிற இடமே சுவிசேஷம் அறிவிக்கப்படுகிற இடமாகும். இந்த அத்தியாயத்திலே முதல் குறிப்பு கிறிஸ்து நமக்காக மரித்தார் என்பதாகும்.

**"அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்." (கலா 1 : 4)** இதுவே சுவிசேஷம். ஆகவே கிறிஸ்து நமக்காக மரித்தார் என்று சொல்வதே சுவிசேஷம்.

ஒருமுறை தேவ ஊழியர் ஜான் வெஸ்லி ஒரு நற்செய்தி கூட்டத்தில் தொடர்ச்சியாக சில நாட்கள் பிரசங்கித்துக் கொண்டிருந்தாராம். ஒவ்வொரு நாளும் ஜனங்களுடைய பாவங்களைக் குறித்து நேருக்கு நேராக திட்டவட்டமாக பரிசுத்த ஆவியானவருடைய நிறைவோடு கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி பிரசங்கித்தாராம். தன் சுவிசேஷ பிரசங்கத்தின் இடையிலே மதுவினால் வருகிற போதை மயக்கத்தையும், அதினால் வருகிற மக்கள் சேதத்தையும் குறித்து அவர் கண்டிப்பாய் போதித்தாராம்.

மதுவினால் போதை மயக்கம் கொண்டிருந்த இரண்டு பேர் அந்த கூட்டத்தின் ஓரமாக நின்று கொண்டு அவருடைய சுவிசேஷ செய்தியைக் கேட்டார்கள். அவர்கள் நம்மைக் குறித்து மிக மோசமான காரியங்களை ஜான் வெஸ்லி கூறுகிறார் ஆகவே நாளயை கூட்டத்தில் அவரை தாக்கி விட வேண்டும் என்று இரகசியமாய்த் திட்டம் தீட்டினார்களாம். மறுநாள் அந்தக் கூட்டத்திற்கு வருகிற போது தங்கள் கைகளிலே பெரிய பெரிய கற்களை எடுத்துக் கொண்டு வந்தார்கள். பிரசங்கியாராகிய ஜான் வெஸ்லியின் தலையை குறி வைத்து தாக்கக்கூடிய தொலைவில் அவர்கள் நின்று கொண்டார்களாம்.

பரிசுத்த ஆவியானவருடைய வெளிப்பாடோடுகூட நின்று கொண்டிருந்த ஜான் வெஸ்லி அன்று ஜனங்களுடைய பாவங்களைக் குறித்து தாக்கிப் பேசாமல் பிரசங்க தலைப்பையே மாற்றி விட்டார். கிறிஸ்து நமக்காக நம்முடைய பாவங்களை போக்கும்படி மரித்தார் என்ற சத்தியத்தை முழுமையாக பிரசங்கித்துக் கொண்டே போனாராம். அந்த கொலைகாரர்கள் தங்களுடைய கொலை திட்டத்தை நிறைவேற்ற முடியாதபடி தத்தளிப்பாய் போனார்கள். இயேசு கிறிஸ்து பாவிகளின் நண்பர் என்றும், பாவத்தை நீக்கும் இரட்சகர் என்றும், நமது பாவங்களை சிலுவையில் சுமந்து தீர்த்தார் என்றும், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவ மன்னிப்பும் பாவத்திலிருந்து விடுதலையும் உண்டு என்றும் தெய்வீக அன்போடும் உண்மையான உணர்வோடும் அவர் பிரசங்கித்தார்.

ஜான் வெஸ்லியின் பிரசங்க வேளையிலே அவர் முகம் தேவ தூதன் முகம் போல் பிரகாசமாகியது. அவருடைய துடிப்பான வார்த்தைகள் அவரை கொலை செய்ய வந்தவர்களுடைய இருதயங்களை துளைத்தன. அவர்கள் தங்கள் கைகளிலிருந்த கற்களை கீழே போட்டு விட்டு செய்தியின் முடிவிலே ஜான் வெஸ்லிக்கு முன்பாக முழங்கால் படியிட்டு இந்த பாவிகளின் இரட்சகர் எங்களுக்கும் வேண்டும், எங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று ஒப்புக் கொடுத்தார்கள். ஜான் வெஸ்லி அந்த இருவருடைய தலைகளின் மேல் கை வைத்து என் பிள்ளைகளே!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று பல முறை சொல்லி அவர்களை ஆசீர்வதித்து ஜெபித்து அனுப்பினார்.

அவர்கள் இருவரும் வீட்டிற்குத் திரும்பிச் செல்லும் போது ஒருவன் மற்றொருவனிடம் இவர் தான் தேவனோ? என்று சொன்னானாம். மற்றவன் தன் நண்பனிடத்திலே இல்லை! இல்லை! இவர் தேவனல்ல. இவர் தேவனைப் போன்ற ஒரு மனிதன் என்று பதிலளித்தானாம்.

ஆகவே தேவனுடைய சுவிசேஷம் என்பது நம்முடைய நற்கிரியைகளைக் குறித்து சொல்கிற பிரசங்கம் அல்ல. நம்முடைய வீர தீர செயல்களையோ நம்முடைய சாகசங்களையும் குறித்துச் சொல்கிற பிரசங்கமும் அல்ல, அல்லது நமது பழைய பாவ வாழ்க்கையின் பட்டியலை சற்று விரிவாக்கி பேசக்கூடிய நேரமும் அல்ல. சுவிசேஷம் என்பது கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்ற செய்தியாகும்.

கலாத்திய நாட்டு சபை விசுவாசிகளுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் இதை திட்டமும் தெளிவுமாக எடுத்துரைத்தார். விசுவாசிகளே! உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் தானே தவிர நியாயபிரமாணத்தின் நீதியினால் அல்ல அல்லது விருத்தசேதத்தினாலும் அல்ல. கிறிஸ்துவின் சிலுவை இரத்தத்தினால் மட்டுமே இந்தப் பொல்லாத பிரபஞ்சத்தினின்றும் பாவ வாழ்க்கையிலிருந்தும் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார். எனவே சுவிசேஷம் என்பது நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி கிறிஸ்து மரித்தார் என்பதே அதன் சத்தியமாகும்.

**2. வேறொரு சுவிசேஷம் இல்லை:-** கலாத்திய நாட்டு சபையாருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் திட்டமும் தெளிவுமாய் பவுலினால் போதிக்கப்பட்டிருக்க இப்பொழுது அவர்களுக்கு ஒரு பயங்கர சோதனை உண்டாயிற்று. சிலர் யூதேயாவிலிருந்து வந்து மோசேயின் நியாய பிரமாணத்தின்படி விருத்தசேதனம் அடையாவிட்டால் நீங்கள் இரட்சிக்கப்பட மாட்டீர்கள் என்று போதித்த போது இந்த விசுவாசிகள் விருத்தசேதனம் செய்யவேண்டும். நியாய பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று யூத மார்க்கத்துக்குத் திரும்பி விட்டார்கள். கிறிஸ்தவ மார்க்கம் கிறிஸ்துவின் சிலுவையிலே துவங்குகிறது. யூத மார்க்கம் யூதர்களின் நியாயபிரமாணத்திலே துவங்கியது. நாம் கிறிஸ்தவ மார்க்கத்திலே இருக்கிறோமென்றால் அதற்கு ஆரம்பமும் முடிவும் சிலுவையே. அது போதுமானது. இதற்கு வெளியே வேறொரு சுவிசேஷம் இல்லை.

போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது என்று (I கொரி 3:11) அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். எனவே கிறிஸ்து அறிவிக்கப்படவேண்டும். அதுவே சுவிசேஷம். ஆனால் கலாத்திய நாட்டு சபை விசுவாசிகளுக்கு நியாய பிரமாணம் அறிவிக்கப்பட்டது. அது சுவிசேஷம் அல்ல, வேறொரு சுவிசேஷம். வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்பக்கூடாது என்று பவுல் எச்சரிக்கிறார்.

**"உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்". (கலா 1:6)**

**"வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார் களேயல்லாமல் வேறெல்ல". (கலா 1:7)**

சமீபத்தில் எங்கள் விசுவாசியின் வீடு ஒன்றை அருகில் இருக்கிற மற்றொரு சபையின் போதகர் வந்து சந்தித்தார். சந்தித்தவர் உங்கள் போதகர் எப்படியிருக்கிறார், உங்கள் போதகர் உள்நாட்டில் இருக்கிறாரா? வெளிநாடு சென்றிருக்கிறாரா? என்று அன்போடு விசாரிப்பது போல் விசாரித்தார். விசாரிக்கிற போது எங்கள் விசுவாசிகள் சொன்னார்கள்: எங்கள் போதகர் கடந்த மாதம் தான் வெளிநாடு ஊழியம் ஒன்றை முடித்து விட்டு இப்பொழுது வந்திருக்கிறார் என்று சொன்னார்கள். உடனே அந்த போதகர் மீண்டும் அடுத்த கேள்வியாக உங்கள் போதகர் உங்களுடைய வீட்டிற்கு ஜெபிக்க வந்து எவ்வளவு நாட்கள் ஆகிறது என்று கேட்டார். உடனே இவர்கள் எங்கள் போதகர் எங்களுடைய வீட்டிற்கு வந்து ஒரு வருடம் ஆகிறது என்று சொன்னார்கள்.

அதற்கு இந்த போதகர் சொன்னார்:...ம்! உங்கள் போதகருக்கு உங்களை நினைத்துப் பார்க்க அவருக்கு எப்படி நேரம் இருக்கும்? அவர் அகில உலகமும் சுற்றுகிற பிரசங்கியார். உங்களை எங்கே நினைக்கப்போகிறார்! என்னைப் பாருங்கள், நான் உங்கள் வீட்டிற்குப் பக்கத்திலே இருக்கிறேன். எந்த நேரம் நீங்கள் அழைத்தாலும் ஓடி வந்து ஜெபிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறேன். உங்கள் போதகரோ உலகம் சுற்றி வருகிறார். அநேக வெளி நாடுகளுக்கும் போகிறார். ஆகவே அவர் உங்களை நினைத்துக் கொண்டிருக்க முடியாது என்று சொல்லி கிறிஸ்துவை அறிவிப்பதை விட்டு விட்டு என்னை அங்கே அறிவிக்க தொடங்கி விட்டார்.

இவர்களைத் தான் கள்ளப் போதகர்கள், கள்ளத் தீர்க்கதரிசிகள் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. ஏனென்றால் ஓர் ஊழியக்காரன் விசுவாசியையோ அல்லது புற ஜாதி மார்க்கத்தானையோ சந்திக்கிற போது அவர்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க வேண்டும். கிறிஸ்துவையே உயர்த்திக் காட்டவேண்டும். கிறிஸ்துவை உயர்த்திக் காட்டாமல், கிறிஸ்துவை அறிவிக்காமல் வேறு எதைச் சொன்னாலும் அவர்கள் கள்ளப்போதகர்களும், கள்ளத்தீர்க்கதரிசியுமாயிருக்கிறார்கள். ஏனென்றால் இவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்காமல் வேறொன்றைச் சொல்லி கிறிஸ்துவின் சுவிசேஷத்திலிருந்து ஜனங்களைப் புரட்டும் படியாக முயற்சிக்கிறார்கள்.

தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவும், தங்கள் கைகளின் ஆதாயத்திற்காகவும் ஜனங்களை வஞ்சிக்க முயற்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் தவிர்க்கப்படவேண்டும். இப்படிப்பட்ட காரியங்கள் கண்டிக்கப்பட வேண்டும். ஆகவே கிறிஸ்துவின் சிலுவையைத் தவிர வேறொரு சுவிசேஷம் இல்லை. இதை இக்கால விசுவாசிகள் திட்டமும் தெளிவுமாக அறிந்திருந்தால் வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்ப வேண்டிய கட்டாயம் இருக்காது.

**3. பவுலை விட சுவிசேஷம் மேலானது :-** கலாத்திய நாட்டு சபைகளுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தவர் அப்போஸ்தலனாகிய பவுல் தான். இவருடைய பிரசங்கத்தின் மூலமாகவே அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு இரட்சிக்கப்பட்டு விசுவாசிகளானார்கள். அவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதும் போது நான் பிரசங்கித்த சுவிசேஷம் என்னை விட மேலானது என்று சொல்கிறார்.

**''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப் பட்டவனாயிருக்கக் கடவன்''. (கலா 1 : 8)**

ஒருமுறை கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து பிரசங்கித்த பவுல் திரும்ப அவர்களிடம் வந்து : நான் போன முறை சொன்னதைத் தவறாக சொல்லி விட்டேன். இந்த முறை வேறொரு சுவிசேஷம் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னால் அது தவறானது, அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது. அப்படிப் பேசுகிறவன் சபிக்கப்பட்டவன் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார்.

கடந்த காலத்திலே தமிழ் நாட்டிலே கூட ஒரு பிரசங்கியார் தன்னுடைய பிரசங்கத்திலே அப்படி செய்யக்கூடாது. இப்படி செய்யக்கூடாது என்று பேசினார். பாடலும் பாடினார்.

கொஞ்ச நாட்கள் கழித்து செழுமையின் உபதேசத்தைப் படித்த அவர் நான் கடந்த காலத்திலே உங்களுக்குச் சொன்ன பிரசங்கமெல்லாம் தவறாக போதித்து விட்டேன். இப்பொழுது தான் என் கண்கள் திறக்கப்பட்டிருக்கிறது, இப்பொழுது சரியாய் போதிக்கிறேன் என்று ஏற்கனவே கட்டின உபதேசங்களை இடித்து புதுமையானவைகளைப் பேசினார்.

அவர் நீண்ட காலம் ஜனங்களைக் குழப்ப தேவன் அனுமதியாத படி அவரை தேவன் பரிசுத்தப்படுத்தி பரம ராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டார். கர்த்தருடைய ஊழியக்காரனுக்கு ஏன் இப்படி சம்பவித்தது என்று பலர் குழம்பி சிந்திக்கக்கூடும். இப்படிப்பட்டவர்களுக்கு சரியான பதிலைக் கர்த்தர் தருகிறார். சுவிசேஷத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன். (கலா 1:9) என்று வேதம் திட்டவட்டமாய் சொல்லுகிற படியால் வேறொரு சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள் சபிக்கப்படுகிறார்கள். தேவனால் தண்டிக்கப்படுகிறார்கள்.

இந்த நாட்களிலே தேவ ஜனங்கள் இதிலே தெளிவாக இருக்கவேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கர்த்தர் பவுலையோ, அப்பொல்லோவையோ, கேபாவையோ பயன்படுத்துகிறார். ஊழியக்காரர் மூலம் தேவனுடைய சுவிசேஷத்தை நாம் கேட்கிறோம். ஆனால் நாம் செய்கிற பெரிய தவறு என்னவென்றால் சுவிசேஷத்தின் நாயகராம் கிறிஸ்துவின் மேல் அன்பு வைப்பதை விட்டு விட்டு சுவிசேஷத்தை பிரசங்கித்த பிரசங்கியாரின் மேலே அளவு கடந்த அன்பு வைக்கிறோம். அது பிரசங்கியாருக்கும் ஆபத்தாக முடியும். விசுவாசிகளுக்கும் ஆபத்தாக முடியும். எனவே சுவிசேஷத்தை பிரசங்கித்த பிரசங்கியாரை விட சுவிசேஷம் மேன்மையானது என்ற இந்த மூன்றாவது சத்தியத்தை அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய நாட்டு சபைகளுக்கு எழுதுகிறார்.

**4. தேவ தூதனை விட சுவிசேஷம் மேலானது :-** தேவ கிருபையினாலே சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கு ஊழியக்காரர்களாகிய நம்மையே தேவன் பயன்படுத்துகிறார். சுவிசேஷம் பேச தேவன் தேவ தூதர்களுக்குக் கட்டளை கொடுக்கவில்லை. தேவ தூதர்கள் தரிசனமாவார்கள், சுவிசேஷ கூட்டங்களுக்கு வழிகாட்டுவார்கள், சுவிசேஷ கூட்டத்தின் தடைகளை மாற்றுவார்கள், சுவிசேஷ கூட்டத்துக்கு ஆதரவாக பணிவிடை செய்வார்கள். ஆனால் சுவிசேஷம் பேசக்கூடிய வாய்ப்பும் சிலாக்கியமும் தேவ தூதர்களுக்குக் கிடையாது.

கொர்நேலியு வீட்டார் சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். ஆனால் கொர்நேலியுக்கும், பேதுருவுக்கும் தேவ தூதன் தரிசனமானாரே தவிர சுவிசேஷத்தை தேவ தூதன் பேசவில்லை.

சுவிசேஷத்தைப் பேசும்படி பேதுருவுக்குத் தான் கையளிக்கப்பட்டது. பேதுரு பேசின சுவிசேஷத்தைக் கேட்ட பொழுது பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியு வீட்டார் மேலே சம்பூரணமாய் இறங்கினார். ஆகவே தான் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் போது இந்த சுவிசேஷ பிரசங்கத்தைக் கேட்க தேவ தூதர்களும் ஆசையாயிருக்கிறார்களென்று அனுபவத்தோடு கூட அப்போஸ்தலனாகிய பேதுரு தன் நிருபத்திலே எழுதுகிறார். (I பேதுரு 1 : -12)

ஆகவே பவுல் பிரசங்கித்த சிலுவையின் சுவிசேஷத்துக்கு மாறாக வானத்திலிருந்து ஒரு தூதன் இறங்கி வந்து வேறொரு சுவிசேஷத்தைச் சொன்னால் அந்த தேவதூதனும் சபிக்கப்பட்டவன் என்று பவுல் எழுதுகிறார்.

**''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்''. (கலா 1 : 8)**

எனவே புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம் தேவ தூதர்களைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும், தேவ தூதர்களைக் குறித்த சத்தியத்தைப் பற்றியும் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். சிலர் தரிசனங்களைக் கண்டேன், தேவ தூதனைக் கண்டேன், கர்த்தருடைய தூதனைக் கண்டேன், அவர் எனக்கு அப்படிச் சொன்னார், இப்படி சொன்னார் என்று ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிற வேதாகம சத்தியத்திற்கு எதிராக மாறுபாடாக எதையாவது சொன்னால் நாம் அதை ஏற்றுக்கொள்ளவே கூடாது.

சில வருடங்களுக்கு முன்னால் எங்கள் ஊரிலே ஒரு வாலிபன் ஊழியக்காரனானான். ஆறு மாதங்கள் கடந்தது. திடீரென்று செருப்புப் போடாமல் நடக்க ஆரம்பித்தான். முழங்கால் வரைக்கும் வேஷ்டியை உயர்த்திக் கட்ட ஆரம்பித்தான். பார்த்தவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு! என்னய்யா! வெறுங்காலில் நடக்கிறீர்கள், வேஷ்டியை முழங்காலுக்கு மேலாக உயர்த்தி விட்டீர்களே என்று கேட்டதற்கு நான் தியாக ஊழியம் செய்கிறேன், பிரதிஷ்டையாயிருக்கிறேன் என்று சொன்னார். செருப்புப் போடாதது தியாகமல்ல. வேஷ்டியை சற்று உயர்த்திக் கட்டுவது பிரதிஷ்டையுமல்ல. ஒவ்வொரு நாட்டுக்கும்

ஒவ்வொரு தேச மக்களுடைய பண்பாட்டுக்கும் ஏற்றபடி ஆடைகளில் வித்தியாசமிருக்கலாம். இதினால் ஒரு பிரதிஷ்டை எடுத்து ஆண்டவரைப் பிரியப்படுத்தி விட முடியாது. சமீபத்தில் அவரை நான் சந்தித்தேன். செருப்புப் போடாமல் இருந்த அவர் இப்பொழுது வெளிநாட்டு செருப்பைத் தவிர உள்நாட்டு செருப்புகள் போடுவதில்லை என்கிற நிலையிலே விலையுயர்ந்த வெளிநாட்டு செருப்புகளை அவர் அணிகிறார்.

ஏனென்றால் தேவ தூதன் போல ஊழியக்காரன் நடிக்கத் துவங்கக்கூடாது. வேதாகமத்திலே பாதரட்சைப் போடுவது அனு மதிக்கப்பட்டிருக்கிறது. பாதரட்சை போடுவது நம்முடைய கால்களுக்கு பாதுகாப்பு. சரீரத்திற்கு ஒரு சுகம். அசுத்தமான கிருமிகள், தரையிலே கிடக்கிற அசுத்தங்களை மிதித்து விடக்கூடாது. அதினால் நமக்கு ஆரோக்யம் கெட்டு நோய் வரக்கூடாது என்பதற்காகத் தான் நாம் பாதரட்சை அணிகிறோம். கர்த்தர் அனுமதித்த ஒன்றை அநுபவிக்கக்கூடாது என்று சொல்வது தூதனுடைய உபதேசம் போலிருக்கலாம். கேட்பதற்கு ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆனால் நீண்ட காலம் அதிலே நிலைத்திருக்க முடியாது.

ஆகவே இன்றைக்கு கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களை தேவ தூதன் போலக் காட்ட முற்பட்டால் அப்படிப்பட்டவர்கள் சபிக்கப் பட்டவர்கள் என்று பவுல் தெளிவாய் எழுதுகிறார். எனவே விசுவாசிகள் இந்த மாய்மாலமான சடங்காச்சாரங்களிலிருந்தும் தேவ தூதன் போல தன்னைக் காட்டுகிற அபாயங்களிலிருந்தும் விலகும்படி புதிய ஏற்பாட்டு சத்தியங்களை தெளிவாய்க் கற்று நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

### 5. சுவிசேஷம் எந்த மனுஷனையும் விட மேலானது :-

புதிய ஏற்பாட்டு ஊழியக்காரர்களுடைய கரத்திலே தேவன் ஒப்புவித்த சுவிசேஷமானது தேவ தூதர்களுக்குக் கூட கிடைக்காத பெரிய சிலாக்கியம் என்பதை நாம் கடந்த வசனங்களிலே தியானித்தோம். இந்த பகுதியிலே சுவிசேஷமானது. சுவிசேஷத்தை எடுத்துச் சொல்கிற எந்த மனிதனையும் விட மேலானது. ஏனென்றால் அயல்நாட்டவர் கொண்டு வருகிற சுவிசேஷம் அது கலப்படம் நிறைந்ததாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் கிழக்கித்திய நாடுகளிலிருக்கிற ஏழை மக்களுக்கு உண்டு. ஆனபடியினாலே சுவிசேஷத்தை கொண்டு வருகிறவர் உள்நாட்டவராயிருந்தாலும் வெளிநாட்டவராயிருந்தாலும் எவராக இருந்தாலும் அவரை விட அவர் மூலமாக பேசப்படும் சுவிசேஷம் மேலானது, மேன்மையானது.

**''முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனா யிருக்கக்கடவன்''. (கலா 1:9).**

எனவே கர்த்தருடைய சபையார் ஊழியக்காரரை தேவன் பயன்படுத்தும் ஒரு கருவியாக பார்க்க வேண்டுமே தவிர அவர் சொல்வதெல்லாம் வேதவாக்கு என்று நினைத்து விடக்கூடாது. ஏனென்றால் சுவிசேஷமானது எந்த மனிதனையும் விட மேன்மையானது.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சிறிய கிராமத்திலே நாலுமுழ வேஷ்டி கட்டிக் கொண்டு அதிகாலை ஐந்து மணிக்கு ஒரு கிராமத்து ஊழியக்காரர் தன் கரத்திலே தகரத்தால் செய்யப்பட்ட ஒரு குழாயை எடுத்துக் கொண்டு தன் ஊரின் மையப்பகுதியிலே நின்று கொண்டு சத்தத்தை உயர்த்தி கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிவித்தார்.

அந்த அதிகாலை வேளையிலே ஊரார் முழுவதும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தூங்கிக் கொண்டிருக்கிற அந்த மக்கள் மத்தியிலே இந்த ஊழியக்காரன் கர்த்தருடைய சுவிசேஷத்தை சொல்ல ஆரம்பித்தார். அவர் சொன்ன சுவிசேஷத்தில் ஒரே ஒரு வசனத்தைத் திரும்ப திரும்ப உரைத்துக் கொண்டிருந்தார்.

**''வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத் 11:28).**

இயேசு கிறிஸ்துவின் இந்த திருவாக்கை திரும்ப திரும்ப அந்த ஊழியக்காரர் சொல்லிக் கொண்டிருந்த போது சற்று தொலைவிலே பூட்டப்பட்ட வீட்டுக்குள்ளே ஒரு மனிதன் தற்கொலைக்காக முயன்று கொண்டிருந்தார். அந்த மனிதன் பல ஆண்டுகளாக தீராத வயிற்று வலியினால் தாக்கப்பட்டு பல விதமான மாத்திரைகள், மருந்துகள் உபயோகித்தும், மருத்துவர்களால் குணமாக்க முடியாமல் கைவிடப்பட்ட சூழ்நிலையிலே மரணம் தான் தனக்கு நித்திய இளைப்பாறுதல் என்று நினைத்து தூக்குக் கயிற்றிலே தொங்க முயற்சித்துக் கொண்டிருந்த பொழுது இந்த சுவிசேஷ வார்த்தை அந்த மனிதனுடைய செவிகளிலே விழுந்தது. உனக்கு இளைப்பாறுதல்

சொல்கிறார் என்கிற வார்த்தையை அந்த மனிதன் கேட்ட பொழுது இயேசு கிறிஸ்து அவரிடத்தில் நேரடியாய் பேசுவது போல் உணர்ந்தார்.

தனக்கு இயேசு கிறிஸ்துவினிடத்திலே மீட்பும் சுகமும் நீடித்த ஆயுளும் உண்டு என்பதை அவர் விசுவாசித்தார். தன் கழுத்திலே மாட்டப்பட்ட அந்த கயிறு இறுக்குவதற்கு முன்பாக அதிலே தொங்குவதற்கு முன்பாக கேட்ட இந்த நற்செய்தியின் மூலம் கயிற்றை அவிழ்த்து அப்புறம் எரிந்து விட்டு தெரு சந்தியிலே நிற்கிற ஊழியக்காரரிடத்திலே ஓடி வந்து தன் பிரச்சனையைச் சொன்னார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய சிலுவை பாடுகளை விசுவாசித்தார். அந்த அதிகாலையிலே ஜெப வீட்டிற்குச் சென்றார். தன் பாவங்களையெல்லாம் அறிக்கையிட்டு மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஆண்டவராய் ஏற்றுக் கொண்டார். அந்த நாளிலே அந்த மனிதனுடைய வியாதி சுகமடைந்தது. தன்னைக் குணமாக்கின கர்த்தருக்காக தன் எஞ்சிய காலத்தை பயன்படுத்தும்படி அந்த மனிதர் அன்று முதல் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய ஒப்புக்கொடுத்தார். சில வருடங்களுக்கு முன்பாக நானும் அந்த ஊழியக்காரரும் ஒரே மேடையிலே கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தோம். அவர் தன்னுடைய தேவ சந்திப்பை என்னோடு சொன்ன போது இந்த உண்மையை நான் தெரிந்து கொண்டேன்.

அன்பானவர்களே! இன்றைக்கு இந்த மனிதருடைய உண்மை சாட்சி அநேகருடைய ஆத்துமாக்களை இரட்சித்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் மெய் சாட்சிக்காரன் உயிர்களை இரட்சிக்கிறான் என்று சாலொமோன் ஞானி சொல்லுகிறபடி (நீதி 14 : 25) இவர் ஜீவியத்திலே வந்த மெய்யான மாற்றம் இன்று அநேகரை மாற்றிக் கொண்டிருக்கிறது.

பாருங்கள்! இந்த சுவிசேஷத்தைச் சொல்லி ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிப்பதற்கு கோட்டும் சூட்டும் போட்ட, டை கட்டின, ஷூ அணிந்துள்ள ஒரு மேல் நாட்டு பிரசங்கியார் வரவில்லை. ஒரு கிராமத்து ஊழியக்காரன் தான் இவ்விதம் பயன்படுத்தப்பட்டார். ஆனாலும் சுவிசேஷமானது சுவிசேஷம் போதிக்கிற எந்த மனிதனையும் விட மேலானது என்பதற்கு இந்த உண்மை சம்பவம் நமக்கு ஒரு உதாரணமாக இருக்கிறது.

**6. சுவிசேஷத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன் :-**

தேவனுடைய சுவிசேஷத்தைப் புரட்டுகிறவர்கள் இன்று ஏராளமானோர்

இருக்கிறார்கள். சுவிசேஷத்தில் பிரசங்கிக்க வேண்டியது மிக முக்கியமானவைகள் நான்கு காரியங்களாகும்.

(1) இயேசு கிறிஸ்துவின் கன்னிகை பிறப்பு
(2) இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம்
(3) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
(4) இந்த இயேசு திரும்ப சீக்கிரம் நியாயாதிபதியாய் வரப்போகிறார்.

இந்த நான்கு சத்தியங்களையும் உள்ளடக்கியது தான் பூரண சுவிசேஷம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதும் போது இப்படி எழுதுகிறார்: ''நான் உங்களிடத்தில் வரும் போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன்''. (ரோமர் 15 : 29)

ஆகவே சுவிசேஷம் பூரணமாய பிரசங்கிக்கப்படுதற்கு பதிலாக அரை குறை சுவிசேஷமோ அல்லது திருப்பிப் போடுகிற சுவிசேஷமோ பேசப்படக்கூடாது. சுவிசேஷத்தை புரட்டுகிறவன் அல்லது திருப்பிப் போடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்று பவுல் சொல்கிறார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கும் கட்டளை கொடுத்து அனுப்பும் போது இரண்டு சத்தியத்தை பிரசங்கிக்கும் படிச்சொன்னார்.

**''அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டியது''.**

எனவே சுவிசேஷம் பிரசங்கிக்கும் போது அதிலே மனந்திரும்புங்கள் என்றும் போதிக்கப்பட வேண்டும். பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றும் போதிக்கப்படவேண்டும். ஆகவே சிலுவை மரணத்தைக் கேட்கிற ஒரு மனிதன் மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டால் அது சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதமாகும்.

இதை விட்டு விட்டு சுவிசேஷத்தை திருப்பிப் போடுவதினால் ஆத்துமாக்கள் இடறலடைவந்து, பின்மாற்றமடைகிறார்கள். பரிசுத்தமடைவதற்கு பதிலாக பல பாவ கண்ணிகளுக்குள் அவர்கள் சிக்கிக் கொள்வார்கள். இன்றைக்கு மனந்திரும்புதல் என்ற பிரசங்கத்தை விட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுங்கள் என்கிற பிரசங்கம் தான் எங்கும் மலிந்து காணப்படுகிறது. பாவ மன்னிப்பைப்

பெற்றுக் கொள்ளுங்கள் என்கிற பிரசங்கத்தை விட இயேசு கிறிஸ்துவை நேசியுங்கள் என்கிற பிரசங்கங்கள் அதிகமாய் இருக்கிறது.

மூன்று மணி நேரம் நடக்கக்கூடிய சுவிசேஷ கூட்டத்தில் இயேசு என்ற நாமத்தை ஒருமுறை கூட உச்சரிக்காமல் அந்த கூட்டம் முடிவு பெறுகிறது என்று சொன்னால் அந்தக் கூட்டத்தைக் குறித்து நாம் என்ன சொல்வது? இவர்கள் சுவிசேஷத்தை புரட்டுபவர்கள் தான், அல்லது சுவிசேஷத்தை பிரித்து கூறுபவர்கள் தான். இதில் சந்தேகமேயில்லை.

பிரசங்க வேளைகளிலே தெய்வம் என்றும், கடவுள் என்றும் உச்சரித்து விட்டு அங்கே இயேசு என்ற நாமத்தை உச்சரிக்காமல் அந்த கூட்டம் முடிவு பெறுமென்றால் இவர்கள் சுவிசேஷத்தைக் கூறுகிறவர்களா அல்லது சுவிசேஷத்தை திருப்பிப் போடுபவர்களா? என்று தான் யோசிக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் சரியாய் மனந்திரும்ப வேண்டும். சரியாய் ஊழியத்தை செய்யவேண்டும். **''அவராலேயன்றி (இயேசுவாலேயன்றி) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய (இயேசுவின்) நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை''. (அப் 4 : 12).**

எனவே இயேசு கிறிஸ்துவின் நாமம் பிரசிங்கிக்கப்பட்டால் மட்டுமே ஜனங்கள் இரட்சிக்கப்பட முடியும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லாமல் கடவுள், தெய்வம் என்று எத்தனை வார்த்தைகளை புகழுரையாக அள்ளிக் கொட்டினாலும் ஜனங்கள் மனந்திரும்பவும் மாட்டார்கள். இரட்சிக்கப்படவும் மாட்டார்கள். சிலுவையின் பக்கம் திரும்பவும் மாட்டார்கள்.

ஆகவே கர்த்தருடைய பிள்ளைகள் இந்த காரியத்திலே மிகவும் ஜாக்கிரதையோடும் பயத்தோடும் பக்தியோடும் சுவிசேஷத்தைப் போதிக்க வேண்டும். வார்த்தைக்கு வார்த்தை இயேசு, இயேசு கிறிஸ்து என்ற நாமம் உச்சரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். ஏனென்றால் நான் உயர்த்தப்பட்டிருக்கும் போது ஜனங்களை என்னண்டையிலே இழுத்துக் கொள்வேன் என்று ஆண்டவர் நமக்கு திட்டவட்டமாய்ச் சொல்லியிருக்கிறார். ஆகவே இம்மாதிரியான பூரண சுவிசேஷத்தை பிரசங்கியாமல் வேறு விதமாக திருப்பி பிரசங்கிப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் சாபத்தை பெற்றுக் கொள்கிறார்கள் என்று பவுல் கலா 1 : 9-ல் எச்சரிக்கிறார்.

**7. சுவிசேஷம் தேவனின் வெளிப்பாடு :-** வேதாகமம் முழுவதிலும் வெள்ளைக் காகிதங்களில் கறுப்பு எழுத்துக்கள் கொட்டிக் கிடந்தாலும் இந்த வேதாகமத்தை வாசிக்கும் போதும் தியானிக்கும் போதும் சுவிசேஷத்தை பற்றிய வெளிப்பாட்டை ஆவியானவரே ஊழியக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தான் பெற்றுக் கொண்ட சுவிசேஷம் அது தேவனின் வெளிப்பாடு என்று திட்டவட்டமாய் அறிவிக்கிறார்.

**''மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நான்...'' (கலா 1 : 1)**

**''மேலும் சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின் படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன்''.**

**''நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப் படுத்தினார்''. (கலா 1 : 11, 12)**

பரிசுத்த ஆவியானவருடைய வெளிப்பாடுகள் இருக்கிறவர்கள் மட்டுமே சுவிசேஷத்தை தெளிவாக புரிந்து ஜனங்களுக்கு எளிதாக எடுத்துச் சொல்ல முடியும். சுவிசேஷத்தை பற்றிய வெளிப்பாடு உள்ள தேவ மனிதர்கள் சுவிசேஷத்தைக் குறித்து பேசும் போது அவர்களுடைய முகம் தேவ தூதர் முகம் போல பிரகாசிக்கும். ஏனென்றால் ஸ்தேவான் இந்த சுவிசேஷத்தை சொல்லும் போது சபையார் எல்லாரும் அவனை உற்றுப் பார்த்தார்கள். அப்பொழுது அவன் முகம் தேவதூதன் முகம் போல பிரகாசித்தது என்று (அப் 6 : 15)-ல் சொல்லப்பட்டுள்ளது.

சுவிசேஷத்தைப் பற்றிய வெளிப்பாடு உள்ள ஊழியக்காரர் சுவிசேஷத்தைக் குறித்து பேசும் போது அந்த சுவிசேஷகனுடைய இருதயம் பெரிய கொள்ளைப் பொருளைக் கண்டு பிடித்தது போல சந்தோஷமாக பொங்குகிற இதயமாக இருக்கும். (சங். 45 : 1)

சுவிசேஷத்தைப் பற்றிய வெளிப்பாட்டோடு தேவ ஊழியக்காரர் சுவிசேஷத்தைப் பேசும்போது அதை பரிசுத்த ஆவியானவருடைய நிச்சயத்தோடு கூட பேசுவார் என்று I தெச 1 : 5-ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்.

இப்படிப்பட்ட சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தப்படுவார்கள். தேவ ஆவியானவருடைய துணையோடு தேவ வெளிப்படுத்தலோடு பவுல் பிரசங்கித்த படியாலே அந்த சுவிசேஷம் என் சுவிசேஷம் என்று உரிமையோடு பரிசுத்த ஆவியானவர் கொடுத்த அதிகாரத்தோடு அறிவிக்கிறார். (ரோமர் 2 : 16, ரோமர் 16 : 26). எனவே சுவிசேஷம் என்பது அது தேவ ஊழியக்காரனுக்கு கர்த்தர் கொடுக்கிற வெளிப்பாடாகும்.

ஒருமுறை ஒரு டிசம்பர் மாதத்திலே இராணுவ தளம் ஒன்றில் தேவ செய்தி கொடுக்கும் படியாக ஒரு பல்கலைக்கழக பேராசிரியர் அழைக்கப்பட்டிருந்தார். அங்கே ரால்ஃப் என்ற ஒரு போர் வீரனை அவர் சந்தித்தார். அந்த போர் வீரனின் சந்திப்பை தன் வாழ்நாளில் ஒரு போதும் மறக்க இயலாது என்று அவர் சொல்லுகிறார்.

விமான நிலையத்தில் அவரை சந்திக்கும்படி ரால்ஃப் அனுப்பப்பட்டிருந்தான். இந்த பேராசிரியரும் ரால்ஃபும் ஒருவருக்கொருவர் தங்களை அறிமுகம் செய்து கொண்ட பிற்பாடு சாமான்களை எடுக்கும் இடத்திற்கு இருவரும் சென்றார்கள். பாதையில் நடந்து செல்லும் போது ரால்ஃப் என்ற அந்த ராணுவ வீரன் அடிக்கடி அவரை விட்டு விலகிச் சென்றான். ஒருமுறை ஒரு மூதாட்டியின் பெட்டி திறந்து கொள்ள அந்த பெட்டியை மூடுவதற்கு ரால்ஃப் உதவி செய்தான். மற்றொரு முறை இரண்டு குட்டி பையன்கள் கிறிஸ்துமஸ் தாத்தாவைப் பார்க்கும்படி அவர்களை தூக்கி உயர்த்திக் காட்டி சந்தோஷப் படுத்தினான். தொடர்ந்து அவர்கள் நடந்து செல்லும் போது, வழியை தவற விட்டு தவறான பாதையிலே சென்று கொண்டிருக்கிற ஒருவருக்கு உதவும் படி ரால்ஃப் மீண்டும் மற்றொருவன் பக்கம் சென்றான். ஒவ்வொரு முறையும் ரால்ஃப் முகத்தில் புன்னகை நிறைந்தவனாய் திரும்பி வந்தாள்.

இந்த பேராசிரியர் ரால்ஃப்பிடம் கேட்டார்: இவ்விதம் பிறருக்கு உதவி செய்ய நீ எங்கே கற்றுக் கொண்டாய்? என்றார். ஐயா, ராணுவ வீரனாகிய நான் போரிலே இருந்த நாட்களை நினைக்கிறேன். வியட்நாமில் என்னுடைய இராணுவ முகாமில் கண்ணி வெடிகளை அகற்றுவது தான் என்னுடைய வேலையாக இருந்தது. கண்ணி வெடிகளை அகற்ற நான் இராணுவ தளத்துக்குச் செல்லும் போது ஒருவர் பின் ஒருவராக என்னுடைய சக நண்பர்கள் கண்ணி வெடிகளில் சிக்கி


சின்னாபின்னமாய் சிதறியதை நான் காண நேர்ந்தது என்று ரால்ஃப் அந்த பேராசிரியரிடம் எடுத்துக் கூறினான்.

ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதற்கு இடையிலே நான் ஒரு சிறு ஊழியத்தைச் செய்ய கற்றுக் கொ்ண்டேன். ஏனென்றால் கண்ணி வெடிகள் நிறைந்த பிரதேசத்திலே இராணுவ முகாமிலே நான் அடுத்து எடுத்து வைக்கும் காலடி தான் என்னுடைய இறுதி காலடியாக இருக்குமோ? என்ற நிச்சயமில்லாதவனாக இருந்தேன். எனவே என் காலை எடுத்து அதை மறுபடியுமாக கீழே வைப்பதற்கு இடைப்பட்ட அந்த கண நேரத்தில் ஒவ்வொரு நன்மையை செய்ய நான் கற்றுக் கொண்டேன். நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஒரு முழுமையான புதிய உலகமாக இருந்ததை நான் இராணுவ முகாமிலே படித்துக் கொண்டேன். அன்றிலிருந்து நான் இவ்விதமாக வாழவும், பிறருக்கு உதவி செய்யவும், அதன் மூலம் கிறிஸ்துவின் அன்பை அறிவிக்கவும் படித்துக் கொண்டேன் என்று அந்த ரால்ஃப் கூறினானாம்.

தன் வாழ்க்கையின் முடிவு அடுத்த காலடி வைக்கிற போது கண்ணி வெடி இருந்து வெடித்து தன்னை சின்னா பின்னமாய் சிதறி விடுமோ என்ற பயந்த சூழ்நிலையிலே அந்த ஒரு கணபொழுதை ரால்ஃப் கர்த்தருக்காய் பயன்படுத்த வெளிப்பாடை பெற்றுக் கொண்டாள்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற நமக்கும் கூட ஒவ்வொரு மனித ஆத்துமாவுக்கும் நம்முடைய ஒவ்வொரு நிமிடத்தையும் சரியாகப் பயன்படுத்தி கிறிஸ்துவுக்காக ஜனங்களை நித்திய ஜீவனுக்கு நேராய் திருப்புகிற ஆத்தும பாரத்தை வெளிப்பாடாக பெற்றுக் கொண்டால் சுவிசேஷத்தின் வெளிப்பாடு நமக்கு தொடர்ந்து கிடைத்துக் கொண்டேயிருக்கும். ஒவ்வொரு முறை நாம் சுவிசேஷம் சொல்லும் போதும் நம்முடைய உள்ளத்திலிருந்து அந்த சுவிசேஷத்தின் சத்தியம் ஜீவ தண்ணீர் ஊற்றாக புதிய வெளிப்பாடாக புறப்பட்டு வரும். நம்முடைய பிரசங்களிலே அரைத்த மாவையே திரும்பவும் அரைத்து புளிக்க வைக்காமல் ஒவ்வொரு நற்செய்தி கூட்டத்திலும் சுவிசேஷ பிரசங்கங்கள் புதிய புதிய வெளிப்பாடாக வந்து கொண்டிருக்கும் படி தேவ ஆவியானவர் வெளிப்பாடுகளை நமக்குக் கொடுப்பார்.

# 4



# சுவிசேஷ ஊழியர் எப்படிப்பட்டவர்?

(கலாத்தியர் 1 : 13 முதல் 2 : 10 வரை)

அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பிரபலமான பிரசங்கியார் ஒருமுறை ஒரு திறந்த வெளிக்கூட்டத்தில் செய்தி கொடுத்துக் கொண்டிருந்தார். கூட்டம் முடிந்த போது தேவன் இல்லையென்று சாதிக்கக்கூடிய ஒரு நாஸ்திகவாதி கூட்டத்தின் முன்னால் வந்து இந்த பிரசங்கியாரிடம் தன்னுடன் தெய்வத்தைக் குறித்து விவாதம் பண்ணும்படி அவருக்கு ஒரு சவால் விடுத்தார். அதற்கான அரங்க வாடகைச் செலவையும், விளம்பர செலவையும், மின் கட்டண செலவையும் தான் ஏற்றுக் கொள்வதாக அந்த நாத்திகன் கூறினார்.

அப்பொழுது அந்த பிரசங்கியார் நாத்திகனுக்கு சரியான ஒரு பதிலைச் சொன்னார். சகோதரா! நான் உன்னோடு விவாதம் செய்ய சம்மதிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனையை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். அது என்னவென்று நாத்திகவாதி கேட்டான்.

உனது தத்துவத்தால் பயனடைந்த ஐம்பது பேரை நீ உன்னோடு கூட்டிக் கொண்டு வந்தால் நான் உன்னோடு வாதம் புரிவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன். இல்லையென்றால் நான் பிரசங்கிக்கிற இந்த சுவிசேஷம் தங்கள் வாழ்க்கையில் அற்புதமான மாற்றத்தை ஏற்படுத்தியது, தங்கள் ஜீவியத்தை ஆசீர்வதித்தது என்று சாட்சி சொல்லக்கூடிய நூற்றுக்கணக்கான பேரை நான் என்னுடன் அழைத்து வருவேன் என்று அந்த பிரசங்கியார் சொன்ன போது அந்த

சுவிசேஷகருக்கு அறை கூவல் விடுத்தவன் தலை குனிந்தவாறே அந்த இடத்தை விட்டுப் போய் விட்டான்.

அன்பானவர்களே! கர்த்தர் நமக்குக் கொடுத்த சுவிசேஷம் பாவிகளை பரிசுத்தமாக்குகிறது. அக்கிரமக்காரனை நீதிமானாய் மாற்றுகிறது. வியாதியஸ்தனுக்கு சுகமளிக்கிறது. பெலவீனனை பெலவனாக்குகிறது. தரித்திரனை ஐசுவரியவானாக்குகிறது. தாழ்ந்தவனை உயர்ந்த இடத்தில் வைக்கிறது. பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருக்கிறவனை தூக்கியெடுத்து கன்மலையின் மேல் நிறுத்தி ஆண்டவரைத் துதிக்கும் புதுப்பாடலைக் கொடுக்கிறது. இப்படிப்பட்ட வல்லமையான சுவிசேஷத்தை எடுத்துச் சொல்லக்கூடிய ஊழியக்காரன் எப்படிப்பட்டவன் என்ற செய்தியை ஏழு குறிப்புகளாக பவுல் அப்போஸ்தலனுடைய ஜீவியத்திலிருந்து நாம் தியானிக்கப் போகிறோம்.

**1. சுவிசேஷ ஊழியக்காரன் பக்தி வைராக்கிய முள்ளவன் :-** கர்த்தருடைய ஊழியக்காரன் களிமண்ணைப் போல நெளிந்து கொடுக்கிறவனாய் இருக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரன் இரும்பைப் போல உறுதியுள்ளவன். கர்த்தர் மேல் வைக்கிற விசுவாசத்திலும் பக்தியிலும் சாதாரண மக்களை விட சபையிலிருக்கிற விசுவாசிகளை விட சற்று கூடுதலாக கர்த்தர் பேரிலே வைராக்கியமுள்ளவன் தான் கர்த்தருடைய ஊழியக்காரன்.

**"என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூத மார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்". (கலா 1:14)**

இந்த வசனத்திலே பவுல் தன்னுடைய பழைய வாழ்க்கையைக் குறித்து சொல்கிறார். அவர் பிறப்பால் பரிசேய சமயத்தைச் சேர்ந்தவர். யூத மார்க்கத்திலிருந்தவர். எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பெற்றவர். அந்த நாட்களிலே அவர் யெகோவா தேவன் பேரிலே பக்தி வைராக்கியம் உள்ளவராக இருந்தார் என்று சொல்கிறார்.

பொதுவாக யூதனாய் பிறந்த எல்லாருக்கும் பக்தி வைராக்கியமிருக்கும். ஆனால் அந்த பக்தி வைராக்கியத்தை பரிசுத்த வேதாகமம் இரண்டு விதமாக பிரிக்கிறது.

(1) அறிவுக்கேற்ற பக்தி வைராக்கியம்
(2) அறிவில்லாத பக்தி வைராக்கியம்

ஒவ்வொரு யூதனுக்கும் பக்தி வைராக்கியம் இருக்கும். ஆனால் அந்த

பக்தி வைராக்கியம் அறிவுக்கேற்ற வைராக்கியமாய் இருக்க வேண்டும். **''தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவ நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலை நிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்''. (ரோமர் 10 : 2, 3).**

இவ்விதமாக ஒரு யூதனுடைய பக்தி வைராக்கியம் அவனுக்கும் பிரயோஜனமில்லை. மற்றவர்களுக்கும் பிரயோஜனமில்லை. இங்கே பவுல் தன் பக்தி வைராக்கியத்தினாலே கடந்த கால வாழ்க்கையிலே தேவனுக்கும் பயனில்லை. தேவனுடைய சபைக்கும் பயனில்லை என்று சொல்லுகிறார்.

**''பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்''. (பிலி 3 : 6)** எனவே பக்தியை வைராக்கியம் என்று சொல்லிக் கொண்டு ஊழியங்களை கட்டியெழுப்புவதை விட்டு விட்டு ஊழியங்களுக்கு துன்பம் கொடுக்கிற சில பக்திமான்கள் உண்டு. வளர்ந்து வருகிற கர்த்தருடைய சபைகளுக்கு இடையூறு செய்கிறவர்கள் உண்டு. தேவனால் பயன்படுத்தப்படுகிற தேவ ஊழியர்களுக்கு நிந்தைகளையும் அவமானங்களையும் தூஷணங்களையும் உண்டாக்கி பேசுகிறவர்களும் உண்டு. ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று கேட்டால் தேவன் பேரில் இருக்கிற பக்தி வைராக்கியத்தினால் அதைச் செய்கிறோம் என்று சொல்வார்கள். ஆனால் நமது பக்தி வைராக்கியம் அறிவுக்கேற்ற பக்தி வைராக்கியமாய் இருக்க வேண்டும் என்று பின்காலத்திலே பவுல் புரிந்து கொண்டு அதை நமக்கும் எழுதுகிறார். நாம் முன்காலத்திலேயே நடப்பித்த நம்முடைய பக்திவைராக்கியம் அறிவுக்கேற்ற பக்தி வைராக்கியமாக மாற்றிய மைக்கப்பட வேண்டும். நமது பக்தி வைராக்கியம் அறிவுக்கேற்ற பக்தி வைராக்கியமாக மாற்றப்படு மேயானால் அதிலே நான்கு விதமான பக்தி வைராக்கியங்கள் உண்டு என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

- ★ **கர்த்தருக்காக பக்தி வைராக்கியம். (II இரா 10 : 16)**
- ★ **சபையைக் குறித்த பக்தி வைராக்கியம். (யோவான் 2 : 17)**
- ★ **விக்கிரகங்களை முறிக்கிற பக்தி வைராக்கியம். ( அப். 17 : 16)**
- ★ **பரிசுத்தத்திற்காக பக்தி வைராக்கியம். (எண் 25 : 11).**

இவ்விதமாக கர்த்தருக்காகவும், கர்த்தருடைய சபைக்காகவும், பரிசுத்தத்திற்காகவும் வைராக்கியம் பாராட்டி, விக்கிரகங்கள் கட்டோடு ஒழிந்து போம் என்கிற தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலுக்காக பிரயாசப்படுகிறவனே உண்மையான சுவிசேஷ ஊழியக்காரன்.

**2. தாயின் வயிற்றிலேயே முன் குறிக்கப்பட்டவன்:-** கர்த்தருடைய சுவிசேஷ ஊழியக்காரன் நேற்று பெய்த மழைக்கு திடீரென்று முளைக்கக்கூடிய சிறு காளான் அல்ல. எங்கேயாவது ஏதாவது நடக்கிற நற்செய்தி முகாம்களிலே கலந்து கொண்டிருந்தால் உண்டாகிற திடீர் எழுப்புதல் தீர்மானமும் அல்ல. அல்லது யாராவது ஒரு வாலிபருடைய உற்சாகத்தைப் பார்த்து, உனக்கு ஊழியத்திற்கு அழைப்பு இருக்கிறது என்று அவனுக்காய் சொல்லும் போது, கேட்டவன் உள்ளத்தில் பொங்கி எழுகிற உணர்ச்சி வசப்பட்ட தீர்மானமும் அல்ல. கர்த்தருடைய ஊழியக்காரன் தாயின் வயிற்றில் தோன்றும் முன்னதாகவே முன் குறிக்கப்பட்டவன் என்று பரிசுத்த வேதாகமம் நமக்கு திட்டவட்டமாய்ச் சொல்கிறது. அதை பவுல் அப்போஸ்தலனுடைய வாழ்க்கையில் இருந்து நாம் புரிந்து கொள்கிறோம்.

**''அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்...'' (கலா 1:15).**

என்று பவுல் தன் ஊழிய அழைப்பைக் குறித்தும், தான் தேவனால் முன்குறிக்கப்பட்டதைக் குறித்தும் அவர் சொல்கிறார். முழு வேதாகமத்திலும் தேவனால் எடுத்து பயன்படுத்தப்படுகிற தேவ ஊழியர்கள் திடீரென்று தோன்றியவர்கள் அல்ல. அவர்கள் தாயின் வயிற்றிலேயே முன் குறிக்கப்பட்டவர்கள். மோசேயை பாருங்கள். தாயின் வயிற்றில் இருக்கும் போதே ஊழியத்திற்காய் பிரித்தெடுக்கப்பட்டவர். எரேமியாவை குறித்து பாருங்கள். அவர் தாயின் வயிற்றில் இருக்கும் போதே கர்த்தருடைய ஊழியத்திற்காக தீர்க்க தரிசியாய் இருக்கும்படி முன் குறிக்கப்பட்டவர். (எரே 1:5). அப்போஸ்தலனாகிய பவுலும் தேவ ஊழியத்திற்காக இளமையிலே வந்தாலும் அவர் தேவ ஊழியத்திற்காக ஊழியக்காரன் என்று முன்குறிக்கப்பட்டவர். எபேசு சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் தன் நிருபத்தை எழுதும் போது அங்குள்ள விசுவாசிகளை ஆவிக்குரிய ஜீவியத்திலே உற்சாகமூட்டும்படி அவர் சொல்கிற வார்த்தை என்ன?

**''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே...'' (எபே 1:4).**

ஆகவே கர்த்தருடைய ஊழியக்காரன் உலக தோற்றத்துக்கு முன்பாகவே தெரிந்து கொள்ளப்பட்டவன். தாயின் வயிற்றில் உருவாகுவதற்கு முன்னதாகவே ஊழியக்காரனாயிருக்கும்படி முன் குறிக்கப்பட்டவன்.

புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலன் யோவான் ஸ்நானகனைப் பாருங்கள். அவரும் தாயின் வயிற்றிலிருக்கிற போதே முன் குறிக்கப்பட்டவர். அது மட்டுமல்ல. தாயின் வயிற்றிலிருக்கிற போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர். அவர் பிறப்பதற்கு முன்னதாகவே அவருடைய ஊழியத்தை தீர்க்கதரிசனமாக தேவ தூதன் முன் கூட்டியே சொல்லிவிட்டார். (லூக் 1 : 15). ஆனால் இன்றைய ஊழியக்காரர்களைக் குறித்து சற்று உன்னிப்பாக கவனித்து பார்ப்போமானால், அவர்கள்

★ **அழைக்கப்பட்ட விதம் அவசரமானது.**

★ **தெரிந்து கொள்ளப்பட்ட விதம் நூதனமானது.**

★ **அர்ப்பணிப்புக்குள் வந்த நேரம் சிக்கலானது.**

தங்கள் போதகரோடு இணைந்து போக முடியாததினாலே சபைகளை உடைத்துக் கொண்டு ஊழியக்காரர்களாய் எழும்பினவர்கள் உண்டு. தங்கள் உடன் விசுவாசிகளோடு ஒத்து போக முடியாததினால் பிரிந்து போய் கூடாரம் போட்டவர்கள் உண்டு. தனக்கு ஏதோ ஒரு வரம் இருக்கிறது. அந்த வரத்தை தங்களுடைய மேய்ப்பன் கண்டு கொள்ள மாட்டேன் என்கிறார். தன்னை முன்னால் நின்று மைக்கை பிடித்து சற்று நேரம் பாடல் பாடவும், ஆராதனை நடத்தவும், பிரசங்கம் பண்ணவும் வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று பிரசங்க தாகத்தினாலே பிரிந்து போய் ஊழியம் தொடங்கி ஊழியக்காரர் ஆனவர்களும் உண்டு. உலக பிரகாரமாக தன் உத்தியோகத்தை பார்த்துக் கொண்டிருக்கிற போது காலமெல்லாம் உலகத்துக்கு வேலை செய்து சரீரத்தின் இளமையையும் வாலிபத்தையும் உலக வேலைக்காகவும், உலக உத்தியோகத்திற்காகவும் பயன்படுத்திவிட்டு 58 வயதான பிறகு இனி உலக உத்தியோகம் பார்க்க உன் சரீரத்திலே தகுதியில்லை என்று உலகம் ஓய்வு கொடுத்த பிற்பாடு அதன் பிறகு கர்த்தருடைய ஊழியத்திற்கு வருகிறேன் என்று வந்து விடுபவர்களும் உண்டு.

கர்த்தருடைய ஊழியத்திற்கு எந்த நிலைமையிலும் வரலாம். அது தவறில்லை. ஆனால் அது இரண்டாம் தரமான அழைப்பு தான். கர்த்தருடைய ஊழியத்திற்கு முதல் தரமான அழைப்பு எதுவென்றால் கர்த்தருடைய ஊழியத்திற்கு வருகிற சுவிசேஷ ஊழியக்காரன் தாயின் வயிற்றிலேயே தேவனால் முன்குறிக்கப்பட்டவன். தன் வாலிப நாட்களிலேயே தேவனுடைய அழைப்பை தெரிந்து கொண்டவன். இளமையின் இரத்தம் சரீரத்திலே ஓடிக் கொண்டிருக்கிற போது தன் முழு வாழ்க்கையையும் தேவனுடைய சுவிசேஷத்திற்காய் பிரித்தெடுத்து ஒப்புக்கொடுக்கிறவனே முதல் தரமான அழைப்பு பெற்றவன். இதை வாசித்துக் கொண்டிருக்கிற நண்பர்களே! நீங்கள் இரண்டாம் தரமான அழைப்பு பெற்றவர்களாக அல்ல, முதல் தரமான அழைப்பிலேயே

வாலிபத்திலே உங்களுடைய முழு வாழ்க்கையையும் கர்த்தருக்குக் கொடுங்கள்.

தேவன் உங்களை தமது கனமான ஊழியத்திற்கு முன் குறித்திருப்பாரென்று சொன்னால் இளமை வயதிலேயே தேவன் உங்களோடு இடைபடுவார். அவருடைய அழைப்பை உங்களோடு திட்டவட்டமாய் பேசுவார். உங்களுடைய ஆவியிலே அதன் உறுதியைத் தருவார். பிறர் மூலமாக தீர்க்கதரிசனத்தின் மூலமும் உங்கள் அழைப்பையும், முன் குறித்தலையும் அவர் உறுதிப்படுத்துவார். தேவனுக்கு பரிபூரணமாய்க் கீழ்ப்படிந்து கர்த்தருடைய கனமான ஊழியத்திற்கு வந்து விட்டால் முழு வாழ்க்கையும் கர்த்தருக்காக பிரயோஜனப்படும். எனவே தேவனுடைய சுவிசேஷ ஊழியக்காரர் தாயின் வயிற்றிலேயே முன் குறிக்கப்பட்டவர்.

**3. மனித ஆலோசனையைத் தேடாதவன்:-** ஒருவரை கர்த்தர் தமது கனமான சுவிசேஷ வேலைக்காக அழைக்கிற போது அந்த அழைப்பை பாழாக்கும்படியாகவும், அழைக்கப்பட்டவனுடைய மனச்சாட்சியைக் கெடுக்கும்படியாகவும், தேவனால் முன் குறிக்கப்பட்டவனுடைய உறுதியிலிருந்து அவனை விழச் செய்யவும் பிசாசு மூன்று உபகரணங்களை பயன்படுத்துவான். அதை பவுல் தன் வாழ்க்கையிலிருந்தே கூறுகிறார். தேவனுடைய முன் குறிப்பை புரிந்து கொண்ட பவுல் தனக்கு அடுத்து நேரிடக்கூடிய காரியங்களை இவ்விதமாகச் சொல்கிறார் :

**''தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்த போது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணாமலும், எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்-களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்....'' (கலா 1 : 16, 17).**

இந்த இரண்டு வசனத்திலும் தேவ ஊழியத்திற்காய் அழைக்கப் படுகிறவனுக்கு வருகிற மூன்று சோதனைகளை நாம் பார்க்கிறோம்.

**(1) மாம்சம் (2) இரத்தம் (3) மூத்த சகோதரர்கள்**

இங்கே நாம் முதலாவது சந்திப்பது நமது மூளை அறிவின் சிந்தையாகிய அவரவருடைய மாம்ச சிந்தையாகும். மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் என்று ரோமர் 8 : 6-ல் வேதம் தெளிவாய் சொல்கிறது. ஆகவே தேவனுடைய முன்குறிப்பும் அழைப்பும் வருகிற போது பவுல் மாம்சத்தின்படி தன் பெலவீனமான சிந்தைக்கு அவர் இடங்கொடுக்க வில்லை.

இரத்தத்தோடு ஆலோசனை என்பது உடன் பிறப்புகள், உறவினர்கள் போன்றவர்களிடத்திலே தன்னுடைய அழைப்பையும், தன்னுடைய முன் குறித்தலையும் அவர் பகிர்ந்து கொள்ளவில்லை. அவ்விதமாக இரத்தம் சம்பந்தமான உறவினர்களிடத்தில் தன் அழைப்பையும், தன் தெரிந்து கொள்ளுதலையும் அவர் பகிர்ந்திருப்பார் என்று சொன்னால் இரத்த சம்பந்தமான உறவுகாரர்கள் நம்மை உற்சாகப்படுத்த மாட்டார்கள். அதற்கு பதிலாக நம்முடைய அழைப்பை நஷ்டப்படுத்துவதற்கான அபாயமான ஆலோசனைகளை சொல்லி பிசாசினுடைய தந்திர மந்திரமான எண்ணங்களையும் நமக்குள்ளே போடுவார்கள். நீ கஷ்டப்படுவாய், உனக்கு சாப்பாடு கிடைக்காது, போதிய வஸ்திரம் இருக்காது, நீ தெருத் தெருவாக அலைவாய் என்று நம்மீது அன்புள்ளவர்கள் போல இரத்த சம்பந்தமான உறவுகாரர்கள் தவறான ஆலோசனைகளை நமக்குக் கொடுப்பார்கள். எனவே பவுல் தேவனுடைய அழைப்பு தனக்கு வந்தவுடனே இரத்த சம்பந்தமான ஆட்களோடே ஓடி ஆலோசனை கேட்கவில்லை.

தேவனுடைய அழைப்பு பெற்ற மனிதன் தன்னுடைய மூத்த சகோதரர்களிடத்திலே ஓடிப் போய் ஆலோசனை கேட்கக்கூடாது என்று அவர் சொல்கிறார். பவுலும் தன்னுடைய ஜீவியத்திலே இவருக்கு முன் அப்போஸ்தலரானவர்களிடத்திலே போய் ஆலோசனை கேட்கவில்லை.

எனக்கு கர்த்தர் 20 வயதிலே அவருடைய கனமான ஊழியத்திற்கு அழைப்புக் கொடுத்த போது ஊழியத்திற்காக வேதாகம பள்ளியிலே படிப்பதற்கு நான் துடிப்போடு காணப்பட்டேன். என் பெற்றோர் அதற்கு இணங்கவில்லை. என் உடன்பிறப்புகள் அதற்கு சம்மதிக்க வில்லை. ஆயுள் கைதியை அந்தமான் தீவிற்கு அனுப்பும் போது உறவினர்களும் பெற்றோரும் எப்படி கண்ணீர் சிந்துவார்களோ அதுபோல என் குடும்பத்தார் ஊழியத்திற்கு அனுப்புகிற என்னைப்பார்த்து கண்ணீர் சிந்தினார்கள். அது மட்டுமல்ல, மூத்த சகோதரர்கள் சிலர் என்னை சந்தித்து, ஆரோனைப் போல் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்திற்கு தானாய் ஏற்படுகிறதில்லை. உனக்கு ஆரோனைப் போன்ற அழைப்பு இருக்கிறதா? என்று எபி 5:4-யைச் சொல்லி என்னை சோர்வடையப் பார்த்தார்கள்.

நல்ல வேளையாக பரிசுத்த ஆவியானவருடைய கிருபை என்னோடுகூட இருந்து என்னை தைரியப்படுத்தி, மாம்ச யோசனைகளுக்கும், இரத்த சம்பந்தமான ஆலோசனைகளுக்கும், மூத்த சகோதரர்களுடைய தீமையான எண்ணங்களுக்கும் என் செவியை அடைத்து, ஆவியானவருக்கு மட்டும் கீழ்ப்படியத்தக்கதான சுத்த மனச்சாட்சியைக் கர்த்தர் கொடுத்த படியினாலே அந்த இடத்திலிருந்து

பிரிந்து, ஆண்டவருடைய ஊழியத்திற்காய் பயிற்சி தரக்கூடிய வேதாகம பள்ளிக்கு ஓடத்தக்கதான தைரியத்தைக் கர்த்தர் எனக்குக் கொடுத்து பிரித்தெடுத்தார். அதற்காக நாள் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இன்று உலகத்தின் அநேக நாட்டு மக்களுக்கும், என்னுடைய சொந்த பட்டணத்திலிருக்கிற ஜனங்களுக்கும், இந்தியாவில் இருக்கிற அநேக பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கும்படி தேவன் என்னைப் பயன்படுத்தி ஆசீர்வதித்தார். ஆகவே இதிலிருந்து நாம் அறிகிற சத்தியம் என்னவென்றால் கர்த்தருடைய ஊழியக்காரன் மனுஷ ஆலோசனைகளைத் தேடக்கூடாது.

முதலாமாண்டு வேதாகம கல்வி முடிந்து, விடுமுறை நாட்கள் கழிந்து, இரண்டாமாண்டு வேதாகம படிப்பை துவங்குகிற போது மீண்டும் ஒரு மனித ஆலோசனை என் வாழ்க்கையிலே குறுக்கிட்டது. என்னோடு இரட்சிக்கப்பட்ட ஒரு மூத்த சகோதரர் என் அருகில் வந்து அன்பாய் பேசுவது போல ஆலோசனை வழங்க ஆரம்பித்தார். அவரும் என்னோடு வேதாகம பள்ளியிலே படித்துக் கொண்டிருந்தார். அவர் சொன்ன வார்த்தைகள் பின்மாற்றமான வார்த்தைகள். அப்படி அவர் என்ன சொன்னார்?

நண்பரே! இன்னும் கொஞ்ச காலத்தில் வெளிநாட்டு பணமெல்லாம் நின்று போகும். ஆனபடியினால் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற ஊழியக்காரர்களுக்கு மகா கஷ்டங்கள் நேரிடும். நம்முடைய வாழ்க்கையின் தேவைகள் சந்திக்கப்படுவது மகா அரிதாய் இருக்கும். எனவே நாம் முழு நேரமாக ஊழியத்தைச் செய்ய வேண்டாம். எதாவது ஒரு அரசு உத்தியோகத்தை தேடிக் கொண்டு, நம்முடைய தேவைகளுக்காய் உத்தியோகம் பார்த்துக் கொண்டு அதோடு ஊழியத்தையும் செய்வோம் என்று சொன்னார். அவர் சொல்லும் போது அன்பான ஆலோசனை போல் தோன்றினாலும் அது பிசாசின் வஞ்சகமான ஆலோசனை என்று பரிசுத்த ஆவியானவர் என்னோடு தெளிவாக பேசினபடியாலே நான் அவருடைய சொல்லுக்கும் இணங்கவில்லை. நான் அவருடைய ஆலோசனையை மறுத்து விட்டேன். நான் அவருக்குச் சொன்ன மறுஉத்தரவு என்னவென்றால்,

நம்மை அழைத்தது வெளிநாடல்ல. நம்மை போஷிப்பது ஸ்தாபனங்களும் அல்ல. நம்மை ஊழியத்திற்கு அழைத்தவர் அநாதி தேவன். அவருக்கு நாம் ஊழியம் செய்யப் போகிறோம். ஆகவே வேலைக்காரன் கூலிக்கு பாத்திரவானாயிருக்கிறான். நமக்கு வேண்டிய நன்மைகளை அவர் சம்பூரணமாய்க் கொடுப்பார். ஒருநாளும் நாம் தாழ்ச்சியடையப் போவதில்லை என்று பதில் கொடுத்தேன்.

எனக்கு ஆலோசனை சொன்ன என்னுடைய மூத்த நண்பர் கர்த்தருடைய ஊழியத்தை விட்டு ஓடிப்போனார். உலக உத்தியோகத்தைத் தேடினார். ஆனால் நானோ கர்த்தருடைய ஊழியத்திலே முழுமனதாய் நின்று மனித ஆலோசனைகளை புறம்பே தள்ளி, ஆவியானவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்த படியினாலே இன்று உலகம் முழுவதிலும் கர்த்தர் என்னை சுமந்து செல்கிறார். பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமான ஊழியத்தைச் செய்யும்படி தேவனுடைய கிருபை வரங்களை கர்த்தர் சம்பூரணமாய் ஊற்றியிருக்கிறார். ஆகவே கர்த்தருடைய ஊழியக்காரன் வேதவசன வெளிச்சத்தின்படி மனித ஆலோசனையைக் கேட்கவே கூடாது. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று வெளி 2:7-ல் சொல்லுகிறபடி நாம் செய்ய வேண்டும்.

**4. கர்த்தரின் பாதத்தில் பயிற்சி எடுப்பவன்:-** நான்காவதாக ஊழியக்காரன் கர்த்தர் பயன்படுத்துவதற்கு முன்னே கர்த்தரின் பாதத்திலே பயிற்சி எடுக்கிறவனாக இருக்க வேண்டும். இன்றைக்கு தடி எடுத்தவன் எல்லாம் தண்டக்காரன், வேதத்தை எடுத்தவன் எல்லாம் ஊழியக்காரன் என்கிற மாயை அநேகரிடத்திலே காணப்படுகிறது. வேதம் முழுவதிலும் கவனித்துப் பார்த்தால் ஒரு ஊழியக்காரனுக்கு குறைந்த பட்சம் மூன்று வருட பயிற்சியாவது கொடுக்கப்பட வேண்டும்.

இயேசு கிறிஸ்து தாம் தெரிந்து கொண்ட ஊழியக்காரர்களுக்கு மூன்று வருட பயிற்சி கொடுத்தார். அதைத் தொடர்ந்து புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலன் பவுலும் தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்ட பிற்பாடு மூன்று வருடங்கள் அவர் கர்த்தரின் பாதத்திலே கற்றுக் கொண்டு பயிற்சி எடுத்தார்.

> **''எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்; அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப் போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பி வந்தேன். மூன்று வருஷம் சென்ற பின்பு, பேதுருவைக் கண்டு கொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன்''. (கலா 1:17, 18).**

அன்பானவர்களே! பவுலின் மூளை அறிவு மிகவும் விஸ்தாரமானது. அவர் ஏற்கனவே கமாலியன் என்று சொல்லக்கூடிய ஒரு மனிதனின் பாதத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற சர்வ கலா சாலையிலே நன்றாய்ப் படித்து, பல கலைகளிலே தேர்ச்சி பெற்றவர். ஆனால் அந்த உலக அறிவைக் கொண்டு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய அவர்

துணியவில்லை. கர்த்தருடைய ஊழியத்திற்கு கர்த்தருடைய வேதப்படிப்பு மிக அவசியமாய் இருக்கிற படியினாலே நமக்கு முன் மாதிரி காட்டக்கூடிய இந்த பவுல் அரபியாவின் வனாந்தரத்திலே ஜெபத்திலும், உபவாசத்திலும், வேத வசன தியானத்திலுமாக அவர் நேரத்தை பயன்படுத்திக் கொண்டு, கர்த்தருடைய ஊழியத்திற்காக ஆயத்தப்பட்டார்.

ஊழியத்திற்காய் அழைக்கப்படடவன் வேத கலா சாலைக்கு போக வேண்டிய அவசியமில்லை. ஒரு சிறிய பதினைந்து நாள் பயிற்சியோ மூன்று மாத பயிற்சியோ போதுமானது என்று சிலர் துணிகரமாய் போதிக்கிறார்கள். அது தவறான காரியம். அன்பானவர்களே நாம் கற்றது கைம்மண்ணளவு. கல்லாததோ உலகளவு. வேதாகமம் அது ஒரு களஞ்சியம். வேதாகமம் ஆழம் காண முடியாத ஒரு சமுத்திரம். நாம் எபிரெய, கிரேக்க, லத்தீன், அரமிய போன்ற வெளிநாட்டு மொழிகளிலே வேதாகமத்தை படிக்காவிட்டாலும் அவரவர் சொந்த தாய் மொழியிலே வேதாகமத்தின் அடிப்படை சத்தியங்களை தெளிவாக கற்றுக் கொள்ள வேண்டும்.

சமீபத்திலே ஒரு பட்டணத்திற்கு வேத பாடக் கூட்டங்கள் நடத்தும்படி நான் அழைக்கப்பட்டிருந்தேன். நான்கு நாட்கள் அந்த கூட்டங்கள் நடந்தது. தினமும் பகலில் மட்டும் நான் வேத பாட சத்தியங்களை வந்தவர்களுக்குக் கற்றுக் கொடுத்தேன். ஒவ்வொரு நாளும் அந்த பகல் கூட்டத்தில் 1500 பேர் கலந்து கொண்டார்கள். பகலெல்லாம் உபவாசத்தோடு கலந்து கொள்வார்கள். மாலை 6 மணிபோல அவர்களுக்கு ஒரு எளிமையான ஆகாரம் கொடுத்து அவர்களை வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள். நான் கூட்டங்களை முடித்த பிற்பாடு என் அறையிலே ஓய்வு எடுப்பதற்கு திரும்பி விடுவேன். அப்படி நான் வருகிற போது அந்த பட்டணத்தில் ஒரு பெரிய நற்செய்தி கூட்டம் நடப்பதாக விளம்பரத்தைப் பார்த்தேன். அந்த நற்செய்தி கூட்டத்திலே செய்தி கொடுக்க வருகிறவர் என்னுடைய நண்பராக இருந்தார். ஆகவே மாலை நேரங்களில் ஹோட்டல் ரூமில் சும்மா இருப்பதை விட அந்த நற்செய்தி கூட்டத்திலே கலந்து கொண்டு நம் நண்பரின் நற்செய்தி பிரசங்கத்தைக் கேட்போம் என்று நான் அங்கு போனேன். என்னைக் கண்ட என் நண்பரான நற்செய்தியாளர் மிக சந்தோஷப்பட்டார். வல்லமையாக தேவனுடைய வார்த்தைகளைப் பேசுவார். தெய்வீக சுகத்துக்காக அற்புத சுகமளிக்கும் வரத்தோடு ஊழியம் செய்வார். அந்த நாள் கூட்டம் மிக ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது. கூட்டம் முடிந்த பிற்பாடு நானும் என் நண்பரும் சாப்பிடுவதற்காக சென்று அமர்ந்தோம்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கிற வேளையிலே என் நண்பர் என்னோடு பேச ஆரம்பித்தார். அண்ணா! எனக்கு ஒரு அடிப்படை காரியத்தில் சந்தேகமிருக்கிறது. அதை எவரிடத்திலும் மனந்திறந்து பேச எனக்கு பயமாகவும், வெட்கமாகவும் இருக்கிறது. ஆனால் நீங்கள் என்னுடைய சகோதரர் போல் என் ஆருயிர் நண்பராக இருக்கிறபடியினால் உங்களிடத்திலே நான் என் உள்ளத்தைத் திறந்து சொல்கிறேன்.

இயேசுதான் தேவனா? அல்லது வேறு தேவனும் உண்டா? பரலோகம் செல்ல கிறிஸ்துவின் மார்க்கம் மட்டுமே ஒரே வழியா? அல்லது வேறு வழியாகவும் போக முடியுமா? என்கிற அடிப்படை உபதேசத்திலே எனக்கு சந்தேகமாய் இருக்கிறது என்று அவர் சொன்னார்.

அன்பானவர்களே! அவர் ஒரு ஊழியக்காரர். வல்லமையாய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ஜனங்கள் நூற்றுக்கணக்கிலே மனந்திரும்பினார்கள். அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள். ஒரு சிலர் தெய்வீக அற்புதத்தையும் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் அந்த ஊழியக்காரருடைய அடித்தள உள்ளத்திலே, அஸ்திபார உபதேசத்தில் குழப்பமிருந்தது. நல்ல வேளையாக அவர் என்னிடத்திலே தன் சந்தேகங்களை நிவிர்த்தி செய்யும்படியாக தன்னுடைய மனதை திறந்து பேசினதினால், அவரைக் குறித்து எனக்கு மிகுந்த பாரம் உண்டானபடியினாலே நான் தங்குகிற அறையில் நான்கு நாட்களும் என்னோடு தங்க வைத்து, பகலெல்லாம் நான் கூட்டங்களிலே பிரசங்கித்து விட்டு, இரவு நேரங்களில் நான் தூங்காமல் அந்த சகோதரனுக்கு இயேசு ஒருவரே தேவன், வேறொரு தேவன் இல்லை. பரலோகம் செல்ல இயேசுவின் வழியே ஒரே வழி, வேறொரு வழியில்லை என்கிற அடிப்படை சத்தியத்தை அவரோடு நான் தெளிவாய் போதித்தேன்.

என்னுடைய கூட்டமும் முடிந்தது. அவர் கூட்டமும் முடிந்தது. போகும் போது அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு தன் ஊருக்குப் புறப்பட்டார். போகும் போது அவர் சொன்னார் : அண்ணா! நான் இந்த பட்டணத்திற்கு வந்தது இந்த பட்டணத்திற்கு ஆசீர்வாதம். ஆனால் அதே வேளையிலே உங்களை நான் சந்தித்து உங்களோடு தங்கியிருந்தது என் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகுந்த ஆசீர்வாதம் என்று நன்றிப் பெருக்கோடு சொல்லி விட்டுச் சென்றார். நானும் கர்த்தருக்கு நன்றி சொன்னேன். 1500 பேருக்கு வேதாகமத்தை மைக்கிலே போதித்தாலும் ஒரு ஊழியக்கார சகோதரனுக்கு தனியே என் அறையிலே வைத்து நான்கு நாட்கள் போதித்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியும், ஆத்தும திருப்தியுமாயும் இருந்தது.

அன்பானவர்களே! ஏன் இந்த ஊழியக்காரனுக்கு இருபது வருட ஊழியத்திற்கு பின்பு அடிப்படை உபதேசத்திலே சந்தேகங்கள் வருகிறது என்றால் நன்றாய் இரட்சிக்கப்பட்ட அவர் தேவனால் அழைக்கப்பட்ட அவர் தேவனுடைய ஆவியின் வரங்களைப் பெற்ற அவர் உற்சாகத்தோடு உடனே மேடையிலே ஏறி விட்டார். ஆனபடியினாலே வருடங்கள் செல்ல செல்ல வசனத்தின் ஆழமும், வசனத்தின் அஸ்திபாரமும் உறுதியாய் அவருக்குள் இல்லாததினாலே உறுதியில்லாத கட்டடங்கள் ஆட்டம் காண்பது போல் அவருடைய விசுவாச ஜீவியம் அவருக்குள்ளே ஆட்டம் காண ஆரம்பித்தது.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை நண்பர்களே! இதிலிருந்து நாம் அறிகிற சத்தியம் என்னவென்றால் அழைக்கப்பட்ட ஊழியக்காரன் ஊழிய களத்திலே இறங்குவதற்கு முன்பாக குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளாவது அவர் அடிப்படை சத்தியங்களை தெளிவாய் கற்றுக் கொள்ள வேண்டும்.

சிலர் இப்படியாகச் சொல்வார்கள்! கர்த்தரின் வருகை சமீபமாகி விட்டது. ஆகவே சொற்ப காலமாக சில நாட்களுக்கோ அல்லது சில மாதங்களுக்கோ படித்தால் போதுமானது என்று சொல்வார்கள். அதன் பின்பு அனுதினமும் கர்த்தரின் பாதத்திலே படிக்கலாம் என்று சொல்லுவார்கள். அது எல்லாருக்கும் சாத்தியம் அல்ல. அடிப்படை சத்தியங்களை குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளாவது படித்துவிட்டு, அதன் பிறகு ஊழிய களத்திலே இறங்குவது அவருக்கும் நல்லது. அவுர் மூலம் நடத்தப்படுகிற ஜனங்களுக்கும் நல்லது என்று பவுலின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்கிறோம்.

**5. ஒப்புரவாகும் ஊழியக்காரன் :-** ஐந்தாவதாக கர்த்தருடைய ஊழியக்காரன் இரட்சிக்கப்பட்ட பிற்பாடு ஊழியத்திலே இறங்குவதற்கு முன்பாக அவர் யாருக்கெல்லாம் தீங்கிழைத்தாரோ, யாருக்கெல்லாம் இடையூறு செய்தாரோ, எவருடைய சொத்துக்களை யெல்லாம் திருடிக் கொண்டாரோ, யாருக்கெல்லாம் அநியாயம் செய்திருந்தாரோ அவர்களிடம் சென்று அவசியம் ஒப்புரவாக வேண்டும் என்கிற ஐந்தாவது சத்தியத்தை பவுலின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிகிறோம்.

**''எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்தில் எருசலேமுக்கு போகாமலும், அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப் போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பி வந்தேன்''. (கலா 1 : 17).**

இந்த வசனத்திலே பவுல் தமஸ்குவுக்கு திரும்பி வந்தார் என்று பார்க்கிறோம். அதாவது ஊழியத்தில் இறங்குவதற்கு முன்னதாகவே அவர் தமஸ்கு ஊருக்கு ஏன் திரும்பி வந்தார்?

**''சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும் படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்''. (அப் 9 : 1,2).**

அதைத் தொடர்ந்துள்ள வசனங்களில் ''அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்கு சமீபித்த போது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது'' என்று அப் 9 : 3-ல் பார்க்கிறோம். எனவே கர்த்தரால் சந்திக்கப்படுவதற்கு முன்பாக இந்த சவுல் தமஸ்குவில் ஜெப ஆலயங்களிலிருக்கிற விசுவாசிகளை, ஜெப வீடுகளிலிருக்கிற கர்த்தருடைய பிள்ளைகளை துன்பப்படுத்தினார். கயிறுகளினால் கட்டி இழுத்தார். வீடுகள் தோறும் நுழைந்து சபைகளை பாழாக்கினார்.

இப்பொழுது இவர் தேவனால் சந்திக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டு, ஊழியத்திற்கு போகிறார். அவருக்குள்ளே ஒரு கூரிய மனச்சாட்சி அவரை உறுத்துகிறது. உன்னால் தீங்கிழைக்கப் பட்டவர்களுக்கு நீ ஆறுதலும் சமாதானமும் செய்து ஒப்புரவாக வேண்டும் என்று கர்த்தர் பேசினார். ஏனென்றால் ஊழியக்காரன் யாவரோடும் ஒப்புரவாகி இருக்க வேண்டும்.

**''அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து''. (மத் 5 : 23)**

என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிற அந்த ராஜரீக பிரமாணத்தை நிறைவேற்றுதற்காக தான் தமஸ்குவில் இருக்கிற கர்த்தருடைய பிள்ளைகளை சந்திக்க அவர் புறப்பட்டுப் போகிறார். சகேயு இரட்சிக்கப்பட்ட போது அவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி தன் ஒப்புரவாகுதலைக் குறித்து சொல்லுகிறார்.

**''சகேயு நின்று, கர்த்தரை நோக்கி : ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்''. (லூக்கா 19 : 8).**

எனவே கர்த்தருடைய ஊழியக்காரன் ஊழியக்களத்திற்குள் இறங்கும் முன்பாக பிறரோடும் யாவரோடும் ஒப்புரவாக வேண்டும் என்ற சத்தியத்தை இங்கே நாம் கவனிக்கிறோம். இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை நண்பர்களே! ஒப்புரவாகும் போது என்ன

நடக்கும்? அதினால் என்ன பிரயோஜனம்? என்று சொன்னால் ஒப்புரவாகிற போது அந்த ஒப்புரவாகுதலின் எதிர் தளத்திலே இருக்கிறவர்கள் நம்முடைய தெய்வீக மாற்றத்தைக் குறித்த சாட்சியைக் கேள்விப்படுகிற பொழுது ஒருவேளை அவர்கள் விசுவாசிகளா யிருந்தால் இன்னும் கர்த்தரை துதிப்பார்கள். ஒரு வேளை புறமார்க்கத்தாராயிருந்தால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பக்தியிலே இவ்வளவு மேன்மையான அனுபவங்கள் இருக்கிறதா? என்று அறிந்து அவர்களும் பின்னாட்களிலே ஆண்டவரை ஏற்றுக் கொள்வதற்கும், கர்த்தரை இரட்சகராய் பின்பற்றுவதற்கும் அது ஒரு சந்தர்ப்பமாக மாறும். எனவே ஒப்புரவாகுதல் கர்த்தருடைய ஊழியக்காரனுக்கு மிக மிக முக்கியம்.

**6. காத்திருக்கும் ஊழியக்காரன் :-** ஒரு வாலிபரை கர்த்தர் தமது கனமான ஊழியத்திற்கு அழைக்கிற போது இந்த ஐந்து அனுபவங்கள் வழியாக வழிநடத்திக் கொண்டு வந்தாலும் உடனே அவர் தமது கரத்தில் எடுத்து பயன்படுத்தி உயர்த்தி விடுவதில்லை. அவருடைய உயர்வுக்காகக் குறித்த காலத்தை கர்த்தர் வைத்திருக்கிறார். இந்த சவுலை இரட்சித்து பவுலாக மாற்றிய கர்த்தர் அவரை தமது கனமான ஊழியத்திலே கனப்படுத்துவதற்கு அதிக வருடங்கள் பிடித்தது என்று நாம் பார்க்கிறோம்.

**''மூன்று வருஷம் சென்ற பின்பு, பேதுருவைக் கண்டு கொள்ளும் படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன்'' (கலா 1 : 18).**

**''பதினாலு வருஷம் சென்ற பின்பு, நான் தீத்துவைக் கூட்டிக் கொண்டு பர்னபாவுடனே கூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்''. (கலா 2 : 1)**

அப்போஸ்தலனாகிய பவுல் மூன்று வருடம் என்றும், பதினாலு வருடம் என்றும் சொல்லிய இந்த கால கணக்கைக் கவனிக்கிற போது பதினேழு வருஷங்களுக்கு அப்புறம் தான் பவுல் அகில உலக சுவிசேஷகனாக கர்த்தரால் பிரித்தெடுக்கப்பட்டு, அவருடைய கனமான ஊழியத்திற்கு அனுப்பப்பட்டார்.

அப் 13 : 1,2 வசனங்களிலே அந்தியோகியா சபையில் கொஞ்ச நாள் அந்த இடைபட்ட காலத்திலே அவர் தரித்திருந்தார் என்று நாம் பார்க்கிறோம். பின்பு தான் கர்த்தர் நான் அழைத்த ஊழியத்திற்காய் பிரித்து விடுங்கள் என்று சொல்லி இந்த பவுலையும் பர்னபாவையும் பிரித்து விட்டார்.

இவ்விதமாய் பிரித்து விடுவதற்கு முன்பாக அவர் தன்னுடைய ஊழியத்தைக் குறித்து சொல்கிற வார்த்தை என்ன?

**''மேலும் யூதேயா தேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன்''. (கலா 1 : 22)**

**''நான் தேவ அறிவிப்பினாலே போய், புற ஜாதிகளிடத்தில் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண பித்தேன்; ஆயினும் நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாத படிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்''. (கலா 2 : 2)**

இங்கே சபைகளுக்கு முகமறியாதவர், எண்ணிக்கையுள்ள வர்களுக்கு விவரித்துக் காண்பித்தவர், தனிமையாய் என்று அவர் சொல்லுகிற இந்த அனுபவங்களை எல்லாம் நாம் கவனிக்கிற போது ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து 17 வருடங்கள் ஒரு சிறிய ஊழியக்காரனாய், உலகத்தாரால் அறியப்படாத ஒரு ஊழியக்காரனாய், எளிமையாக, தனிமையாக, கர்த்தர் தன்னை உயர்த்தும் வரை பொறுமையாய்க் காத்திருந்தார் என்று நாம் கவனிக்கிறோம்.

அருமை நண்பர்களே! ஊழியத்திற்காய் வந்திருக்கிற புதிய சகோதரர்களே! தெய்வீக மாற்றத்தால் தொடப்பட்ட பவுலுக்கே கர்த்தருடைய ஆசீர்வாதமான கரம் அவரை எடுத்து பயன்படுத்த 17 வருடங்கள் பிடித்தது என்றால் நீங்கள் ஏன் அவசரப்பட வேண்டும்?

ஊழியத்திற்கு வந்த உடனேயே ஹோண்டா பைக்கிலே போய் விட வேண்டும். வந்த கொஞ்ச நாட்களிலேயே ஜெப வீடு கட்ட இடம் வாங்கி விடவேண்டும். ஊழியத்திற்கு வந்த சில வருடத்திற்குள் சொந்த வீடு வாங்கி விடவேண்டும். காரிலே பவனி வரவேண்டும் என்ற ஆசை கனவுகளை ஊழியர்கள் சுமந்து கொண்டு சுற்றுகிற பரிதாபமான நிலைமையை மாற்றிக் கொள்ளுங்கள்.

''ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' என்று தான் வேதம் சொல்கிறது. (I பேதுரு 5 : 6).

**7. ஊழிய ஓட்டத்தைப் பற்றிய தெளிவு உள்ளவன் :-** முதலாவதாக ஊழியக்காரன் கர்த்தருடைய கனமான ஊழியத்திற்காக அழைக்கப்படுகிறார். அது பொதுவான அழைப்பு. ஆனால் அதைத் தொடர்ந்து இந்த ஆறு அனுபவங்களிலும் வந்த பிற்பாடு தேவன்

அவருடைய ஊழியத்திலே எந்த விதமான ஊழியத்திலே தன்னைப் பயன்படுத்தப் போகிறார், எந்த விதமான ஊழியத்திற்காக கர்த்தர் தன்னை பிரித்தெடுத்திருக்கிறார் என்ற தெளிவை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த தெளிவு இன்று அநேக ஊழியருக்கு இல்லை.

பாடல் பாடி கேசட் போடுவதற்கு என்று தேவன் சிலரை விசேஷமாக அபிஷேகித்திருக்கின்றார். ஆனால் பாடுவதற்கு கிருபை இல்லாமல் பாடல் இயற்றுவதற்கு வரம் இல்லாமல் கேட்பதற்கு இனிமையாய்ப் பாடத்தக்க குரல் வளம் இல்லாமலேயே மயில் ஆடுகிறதென்று வான் கோழியும் ஆடத் தொடங்கினால் அது எவ்வளவு சிரிப்புக்குரியதாய் இருக்கும்.

குயில் கூவுகிறது என்று நம் வீட்டுக்கு முன்னால் இருக்கிற சேவலும் கூவினால் அது எவ்வளவு கேலிக் கூத்தாகி விடும். இன்று கர்த்தருடைய ஊழியத்திலே இலட்சக்கணக்கான பணங்களும், ஆயிரக்கணக்கான பேரின் ஆயுசு நாட்களும் வீணடிக்கப்படுகிறது. தங்களுடைய ஊழிய ஓட்டத்தைப் பற்றிய தெளிவு இல்லாதது தான் இதற்குக் காரணம்.

சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தியிருக்கிறார். இந்த ஊழியத்திலே தன்னுடைய அழைப்பு எப்படிப்பட்டது என்ற தெளிவு பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். இதை பவுலின் வாழ்க்கையிலிருந்து நாம் அறியலாம்.

**''அதுவுமல்லாமல், விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால்,**

**''விருத்த சேதனமுள்ளவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்கு கையளிக்கப்பட்டது போல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டார்கள்''. (கலா 2:7, 8).**

அன்பானவர்களே! கர்த்தருடைய ஊழியம் கனத்திற்குரியது. ஆனால் அதை கேலிக் கூத்தாக மாற்றி விடக்கூடாது. பத்திரிக்கை ஊழியம் செய்வதற்கென்றே சிலரை தேவன் விசேஷமாக அபிஷேகிக்கிறார். அவர்கள் பத்திரிக்கை ஊழியம் நடத்தினால் அவர்களுடைய பத்திரிக்கை ஊழியத்தின் தேவைகள் நிச்சயமாய் அவர்களுக்கு சந்திக்கப்படும். கர்த்தர் அவர்களுக்குத் தேவையானதைக் கொடுப்பார்.

சிலருடைய பத்திரிக்கை ஊழியம் ஆசீர்வாதமாயிருப்பதைக் கண்டதும் தங்களுடைய போட்டோவையும், தங்களுடைய ஊழியங்களைப் பற்றிய விளம்பரங்களும் புத்தகங்களிலே வரவேண்டும்

என்று ஆசைப்பட்டு அவசரப்பட்டு பத்திரிக்கை துவங்கி விடுவார்கள். பின்பு மூன்று மாதம் நான்கு மாதங்களுக்குப் பிறகு பல ஆயிரம் கடன்களோடு பத்திரிக்கையை நிறுத்தி விடுவார்கள். அப்படி ஏன் இந்த அவல நிலை? தங்களுடைய ஊழிய ஓட்டம் எப்படிப்பட்டது என்ற தெளிவை பெற்றுக் கொள்ளாதது தான் காரணம்.

சிலரை தேவன் பெரிய அளவிலான படைமுயற்சிக் கூட்டங்கள் நடத்தும்படி அழைத்திருப்பார். அதற்கான ஞானத்தையும், கிருபையையும் கர்த்தர் தருவார். அதை பார்க்கிற போது சில ஊழியக்காரர்களுக்கு சோதனையாகிப் போகிறது. நானும் பெரிய கூட்டங்களை நடத்த வேண்டும் என்று சொல்லி பெரிய பிரசங்கியார்களை அழைத்து ஆயிரக்கணக்கான வால்போஸ்ட் அடித்து இலட்சக்கணக்கான சிறு நோட்டீஸ் அடித்து விநியோகம் செய்து கூட்டங்களை பெரிதாய் நடத்தி முடிப்பார்கள். கூட்டம் முடிந்த பிற்பாடு இலட்சக்கணக்கான பணம் கடனாகி விடும். அன்பானவர்களே! உங்கள் ஊழிய ஓட்டத்தில் வீண் பிரயாசம் வராதபடி உங்களுக்கு சரியான ஆசீர்வாதமும் பிரதிபலனும் வரவேண்டுமென்று சொன்னால் உங்கள் ஊழிய அழைப்பைக் குறித்த தெளிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் தன் ஊழிய ஓட்டத்தின் அழைப்பை தெளிவாய் அறிந்திருந்தார். பேதுருவை யூதருக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி தேவன் தெரிந்திருக்கிறார். ஆனால் அதே வேளையிலே பவுலையோ புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி தேவன் தெரிந்தெடுத்திருக்கிறார். இதை பவுலும் தெளிவாக அறிந்திருந்தார். மற்ற அப்போஸ்தலர்களும் இவருடைய அழைப்பை தெளிவாய் அறிந்து அங்கீகரித்தார்கள். அந்நியோன்ய ஐக்கியத்திற்கு அடையாளமாக வலக்கரம் கொடுத்து அவரை பலப்படுத்தினார்கள்.

கிருபையாக புத்தகம் எழுதுகிற ஊழியத்தைக் கர்த்தர் எனக்குத் தந்திருக்கிறார். எழுத்து ஊழியத்திற்காகவே சிலரை தேவன் அபிஷேகம் பண்ணுகிறார். வேதாகமத்தில் ஆண்டவர் ஒரு சில ஊழியக்காரர்களைப் பார்த்து தான் எழுது என்று சொல்கிறார். ஆயிரக்கணக்கான தீர்க்கதரிசிகளும், பல்லாயிரக்கணக்கான அப்போஸ்தலர்களும் இதுவரை தோன்றியிருந்தாலும் எழுது என்று ஒரு சிலருக்கு மாத்திரமே கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். எல்லோரையும் அவர் எழுது என்று சொல்வதில்லை.

எழுத்து ஊழியம் உங்களுக்கு இருக்கிறதா? அந்த ஓட்டத்தில் நீங்கள் ஓடும்படி கர்த்தர் உங்களை அழைத்திருக்கிறார் என்கிற தெளிவை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த தெளிவு எனக்கு இருக்கிற படியினாலே கர்த்தர் எழுத்து ஊழியத்தை ஆசீர்வதித்து அதன்

தேவைகளை சந்தித்து ஒவ்வொரு புத்தகமும் சிறப்பாய் வெளியிடக்கூடிய தேவ ஞானத்தை படிப்படியாய்க் கொடுக்கிறார். இன்று 52-வது புத்தகமாக இப்புத்தகம் வெளி வருகிறது என்று சொன்னால் ஆண்டவர் என்னை போதித்து, அவர் ஆலோசனை கொடுத்து, ஒவ்வொரு புத்தகம் வெளியிட வேண்டிய பணத்தையும் அவர் சந்திக்கிறார். நான் எவரிடத்திலும் போய் நன்கொடை கொடுங்கள் என்று கேட்பதில்லை. ஆனால் தாங்களாகவே முன் வந்து எழுத்து ஊழியத்திற்காகக் கொடுக்கிற ஒரு சிலரை கர்த்தர் எழுப்பி இந்த ஊழியத்தைத் தாங்குகிறார். ஏனென்றால் என் ஊழிய ஓட்டம் எந்த விதமானது என்கிற தெளிவு எனக்கு இருக்கிறது.

இதனை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை நண்பர்களே! உடன் ஊழியர்களே! தேவ பிள்ளைகளே! உங்கள் ஓட்டம் எந்த விதமானது என்ற தெளிவைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம் என்று எபி 12 : 3-ல் சொல்லப்பட்டுள்ளது. நமக்கு தேவன் நியமித்திருக்கிற ஓட்டத்தை விட்டு விட்டு நம் அருகில் இருக்கிற இன்னொரு சகோதரனுடைய ஓட்டத்திலே நாம் கால் வைக்கக்கூடாது. அப்படி போனால் அது நமக்கு ஆசீர்வாதமாய் இருக்காது.

பவுல் அப்போஸ்தலன் கூட ஊழிய ஆரம்பத்திலே அப்படியும் இப்படியுமாக பல்வேறு ஊழியங்களை தனக்கு சமயம் கிடைத்ததற்கு தக்க வண்ணம் செய்து கொண்டு வந்தார். அப்பொழுது அவருடைய ஊழியமெல்லாம் தனிமையிலும் எண்ணிக்கையுள்ள மக்களிடத்தில் மட்டுமே இருந்தது. (கலா 2 : 6). ஆனால் தன்னுடைய ஊழிய ஓட்டத்தைப் பற்றிய தெளிவை அவர் பெற்ற பிற்பாடு பல ஆயிரங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கும்படி கர்த்தர் அவரை பயன்படுத்தினார். அதை நீங்கள் தெளிவாய் அறிந்து கொள்ள அப் 18 : 6-ல் காணலாம்.

**“அவர்கள் எதிர்த்து நின்று தூஷித்த போது : அவன் தன் வஸ்திரங்களை உதறி : உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இது முதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேனென்று அவர்களுடனே சொல்லி...” (அப். 18 : 6).**

இந்த இடத்தில் தான் பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய ஊழிய அழைப்பின் தெளிவைப் பெற்றுக் கொண்டார். இதுவரை அவர் யூதருக்கும் தன் கண்களுக்கு எதிர்ப்பட்ட சகல ஜனங்களுக்கும் ஊழியம் செய்தார். ஆனால் 17 வருடங்களுக்குப் பிறகு தன் ஊழிய ஓட்டத்தைப் பற்றிய தெளிவோடு யூதர்களை விட்டுப் பிரிந்து புறஜாதியார்

களிடத்திற்கு ஓடுகிறார். ஓடிய பிற்பாடு என்ன நடக்கிறது? ஐந்து வசனங்களுக்குப் பின்பு கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகிறார்.

**''இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி : நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனே கூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கை போடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்''.** (அப் 18 : 9,10).

அன்பானவர்களே! எண்ணிக்கையுள்ளவர்களுக்கு விவரித்துக் காண்பித்த இந்த பவுல் இப்பொழுது அநேக ஜனங்களுக்கு ஊழியக்காரனாக எப்படி உயர்த்தப்படுகிறார் என்றால் ஊழிய ஓட்டத்தின் தெளிவை அவர் பெற்றுக் கொண்டு அந்த ஓட்டத்திலே ஓட உட்பட்ட போது தேவன் அவருடைய பிரயாசத்தையும் அவருடைய ஊழியத்தையும் ஆசீர்வதித்தார். அப்பொழுது ஒருவனும் உனக்குத் தீங்கு செய்ய முடியாது என்று ஒரு தெய்வீக பாதுகாப்பையும் கர்த்தர் அவர் மேல் வைக்கிறார்.

இதிலிருந்து நாம் அறிகிற உண்மை என்னவென்றால் கர்த்தர் உங்களுக்காய் வைத்திருக்கிற ஊழிய ஓட்டத்தில் மட்டும் நின்று நீங்கள் அவருக்கு ஊழியம் செய்தால் ஒரு தெய்வீக பாதுகாப்பு உங்களை சூழ இருக்கும். தெய்வீக ஆசீர்வாதம் உங்கள் ஊழியத்தில் இருக்கும்.


கர்த்தருடைய கிருபையினாலே ஊழியத்திற்காக அழைக்கப்பட்டு வெளி தேசங்களுக்கு சில வேளைகளிலே நான் செல்வதுண்டு. ஆனால் அங்கு நான் கேள்விப்படுகிற அதிர்ச்சி தரும் செய்திகள் வேதனையானது. ஐயா, உங்கள் தேசத்தைச் சேர்ந்த பிரபல பிரசங்கியார் இங்கு வந்து ஒரு மாதமாகிறது. அவருக்கு ஒருநாள் கூட கூட்டத்தில் பிரசங்கிக்க சந்தர்ப்பம் கொடுக்க முடியவில்லை. காரணம் நாங்கள் அழைக்காமலேயே அவராகவே டிக்கெட் போட்டு வந்துவிட்டார். ஆகவே பிரசங்கம் பண்ண அவருக்கு வாய்ப்பு இல்லை என்று சொல்வார்கள்.

இது போன்ற அவல நிலை உலகத்தின் பல இடங்களிலும் நடைபெறுகிறது. ஏன் இந்த ஊழியர்கள் அழைப்பு இல்லாமலேயே அங்கும் இங்கும் சுற்றி அலைகிறார்கள்? இவர்களைக் கர்த்தர் வெளி தேசங்களிலே வெளி நாட்டிலே ஊழியம் செய்யும்படி அழைத்தாரா? அழைத்தார் என்றால் அழைத்த தேவன் அதற்கு வேண்டிய டிக்கெட்டையும் தருவார். பிரசங்கம் பண்ண மைக்கும் தருவார். கேட்கிற ஆட்களையும் தருவார். தேவையான காணிக்கையும் தருவார். அவர்களுடைய ஓட்டத்திலே தெய்வீக பாதுகாப்பும் இருக்கும்.

அன்பானவர்களே! நம்முடைய ஊழிய ஓட்டத்தில் எத்தன்மையோடு ஊழியம் செய்ய கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார் என்கிற தெளிவைப் பெற்றுக் கொள்வோமானால் நம்முடைய ஊழியத்திலே திருப்தியாய் இருப்போம்! நமது ஊழியத்திலே மகிழ்ச்சியாய் இருப்போம். நம்முடைய ஊழியத்திலே ஆத்தும அறுவடை இருக்கும். நமது ஊழியத்திலே தெய்வீக பாதுகாப்பும் இருக்கும்.

போதகர் பால் யாங்கிச் சோ ஊழியத்தில்கூட இரண்டு வாலிப ஊழியர்கள் சோதிக்கப்பட்டு விட்டார்கள். இவர் கர்த்தரால் கட்டளை பெற்று பல லட்சம் பேர் உட்காரக்கூடிய ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டி ஊழியத்தை வல்லமையாய் செய்து கொண்டு வருகிற போது இவரோடிருந்த உடன் ஊழியர்களில் இரண்டு வாலிபர்கள் இவரை விட்டுப் பிரிந்து சென்று, அரசு வங்கியிலே கடன் வாங்கி, பிரம்மாண்டமான ஆலயத்தை கட்டியெழுப்பினார்கள். ஆனால் ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட பிற்பாடு அங்கே ஆத்துமாக்களும் வரவில்லை. இவர்களால் கடனையும் ஒவ்வொரு மாதமும் திருப்பி செலுத்த முடியவில்லை. வெட்கத்தோடும் துக்கத்தோடும் பின்பு அவர்கள் தங்கள் போதகரிடத்திலே மன்னிப்புக் கேட்டு, அந்தக் கட்டடத்தையும் அவர்கள் போதகரிடமே ஒப்படைத்து மீண்டும் அதே ஐக்கியத்திலே சாதாரண ஊழியக்காரர்களாய்ச் சேர்ந்து தன் மூத்தப் போதகர் தங்களுக்குக் கொடுத்த ஊழியத்தை பின்பு ஒழுங்காய்ச் செய்தார்கள்.

அன்பு தேவ பிள்ளைகளே! உங்கள் ஓட்டம் எத்தன்மை உள்ளது? தேவன் நியமித்த ஓட்டத்தில் தான் ஓடி ஊழியம் செய்கிறீர்களா? அல்லது தேவன் சொல்லாத ஊழியங்களை செய்து கொண்டு, ஐயோ! ஏன் இந்த வேதனை? ஏன் இந்த பாரம்? ஏன் இந்த துக்கம்? ஏன் இந்த கடன்? ஏன் சந்தோஷமில்லாத ஊழியத்தை வனாந்திர அலைச்சலாக நான் செய்து கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் துக்கப்படுகிறீர்களா? பரிசுத்த ஆவியானவர் இந்த செய்தியின் மூலம் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். ஜெபித்து, முழங்கால் படியிட்டு உபவாசித்து கர்த்தர் பாதத்தில் காத்திருங்கள். அப்பொழுது கர்த்தர் உங்கள் ஊழிய ஓட்டத்தைத் தெளிவாய்க் காண்பிப்பார். அப்பொழுது உங்களுடைய பிரயாசம் மிகுந்த ஆசீர்வாதமாய் இருக்கும். கர்த்தர் உங்களை இந்த சத்தியத்தால் ஆசீர்வதிப்பாராக!



# 5

# நியாயப்பிரமாணமா ? சிலுவையின் பிரமாணமா ?

(கலா 2 : 11 - 2 : 22)

கலாத்திய நாட்டு சபைகளுக்கு இந்நிருபத்தை எழுதக்கூடிய அப்போஸ்தலனாகிய பவுல் தொடர்ந்து வரும் வசனங்களிலே மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணத்தையும் இயேசு கிறிஸ்து மூலமாய் வந்த சிலுவையின் பிரமாணத்தையும் ஒப்பிட்டு ஐந்து சத்தியங்களை அவர் எழுதிக் கொண்டு போகிறார். யோவான் அப்போஸ்தலன் தன்னுடைய சுவிசேஷத்தில் மோசேயின் ஊழியத்தையும், இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தையும் ஒப்பிட்டுச் சொல்லும் போது மோசேயின் ஊழியத்தைவிட இயேசு கிறிஸ்துவின் ஊழியம் மகா மேன்மையானது என்பதை திட்டமும் தெளிவுமாக எடுத்துரைக்கிறார்.

**''எப்படியெனில் நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின''. (யோவான் 1 : 17)**

இதே வெளிப்பாட்டோடு தான் அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு நியாயப் பிரமாணத்தையும் சிலுவையின் பிரமாணத்தையும் ஒப்பிட்டு பின்வரும் வசனங்களில் ஐந்து குறிப்புகளை எழுதுகிறார்.

**1. பின் மாற்றக்காரரை உடனே திருப்ப வேண்டும் :-** பின்மாற்றம் என்பது பழைய ஏற்பாட்டு சபையிலும் உண்டு. புதிய ஏற்பாட்டு சபையிலும் உண்டு. அப்போஸ்தலர்கள் ஆவியின்

வரங்களோடும் கனிகளோடும் ஊழியம் செய்த அக்கினி மயமான அந்த காலத்திலும் பின்மாற்றம் நடந்திருக்கிறது. இந்த கடைசி காலத்திலும் பின்மாற்றம் நடந்து கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவோடு இருந்த அப்போஸ்தலர்கள் 12 பேரில் ஒருவன் பின்மாற்றத்துக்குள் சென்றான். எனவே பின்மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் அதே வேளையிலே கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்குக் கர்த்தர் கொடுத்திருக்கிற பொறுப்பு என்னவென்றால் கர்த்தரை விட்டும் கர்த்தருடைய சபையை விட்டும் சத்தியத்தை விட்டும் பின்மாற்றத்திற்குள் போகிறவர்களை உடனடியாய் சென்று திருப்பிக் கொண்டு வரவேண்டும் என்று ஆவியானவர் இந்த கலாத்திய நிருபத்தின் மூலமாக நமக்கு எழுதிக் கொண்டு போகிறார்.

**"மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்த போது, அவன் மேல் குற்றஞ்சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன்".** (கலா 2:11).

கர்த்தருடைய ஊழியக்காரரில் பிரதான அப்போஸ்தலன் பேதுரு புறஜாதிகளுக்கு ஊழியம் செய்கிறபோது வேத சத்தியத்தின் உண்மைகளை விட்டு வழி விலகி பின்மாற்றத்துக்குள் சென்றார். இதை மற்ற அப்போஸ்தலர்கள் கண் சாடையாய் விட்டாலும் பவுல் அப்போஸ்தலன் முகமுகமாக பேதுருவுக்கு எதிர்த்து நிற்கிறார். பின்மாற்றக்காரர்களை உடனடியாக சந்தித்து அவர்களை சீர்பொருந்த பண்ணாவிட்டால் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆத்துமாவில் மரணம் சம்பவிக்கும் என்பது அவருக்குத் தெரியும்.

எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போனவன் கள்ளர் கையில் அகப்பட்ட போது அவர்கள் அவனை அடித்து காயப்படுத்தி குற்றுயிராய் விட்டுப் போனார்கள் என்று நாம் பார்க்கிறோம். ஆங்கில வேதாகமத்திலே half-dead என்று போட்டிருக்கிறது. அதனுடைய சரியான அர்த்தம் என்னவென்றால் பாதி மரித்துப் போனான். மீதி மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உடனடி அவசர நிவாரணம் அவனுக்குக் கொடுக்காவிட்டால் அவன் சரீர பிரகாரம் மரித்துப் போவான். நல்ல சமாரியன் உடனடியாய் அவனை சந்தித்து, அவன் காயங்களிலே எண்ணெயும் திராட்ச ரசமும் வார்த்து, அவனை தன் தோளின் மேல் தூக்கி எடுத்து சுமந்து, சத்திரத்திலே போய் விட்டு, அவனுடைய ஜீவன் மறுபடியும் அவனுக்குள்ளே வரும்படியான ஊழியத்தைச் செய்தார்.

இந்த உதாரணத்தை சுவிசேஷத்தில் வாசிக்கிற நாம் படிக்கிற ஒரு

சத்தியம் என்னவென்றால் பின்மாற்றக்காரர்களை உடனடியாய் சந்தித்து நாம் திருப்ப வேண்டும்.

**"சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன். (யாக். 5 : 19, 20).**

என்று வேதம் திட்டவட்டமாய் சொல்லுகிற படியினாலே பின்மாற்றக்காரர்களை உடனடியாகத் திருப்பி தேவன் பக்கமாய்க் கொண்டு வந்தால் ஆத்துமாக்களை நாம் காப்பாற்ற முடியும்.

**2. தேவ ஊழியர்கள் வேடம் போடக்கூடாது :-** கலாத்திய நிருபத்தின் சத்தியங்களை எழுதிக் கொண்டு வருகிற பவுல் இந்த வசனங்களிலே ஊழியக்காரர்களுக்கு மிக அவசியமான சத்தியங்களை எழுதிக் கொண்டு போகிறார். ஊழியக்காரன் பின்மாற்றத்துக்குள் போவது மட்டுமல்ல, ஊழியக்காரர்கள் வேடதாரிகளாயும் இருக்கவும் கூடாது என்று அவர் எச்சரிக்கிறார். ஊழியக்காரர்கள் வேடம் போடுவார்களா? என்று அதிர்ச்சி அடைய வேண்டாம். பிரதான அப்போஸ்தலன் பேதுரு கூட வேஷம் போடுகிறவராக இருந்தார் என்று நாம் பார்க்கிறோம்.

**"எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்கு முன்னே அவன் புற ஜாதியாருடனே சாப்பிட்டான். அவர்கள் வந்த போதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான்". (கலா 2 : 12).**

அப்போஸ்தலனாகிய பேதுரு அந்தியோகியாவை மையமாக வைத்து பல்வேறு பட்டணங்களில் இயங்கிக் கொண்டிருக்கிற புறஜாதி சபையாருக்கு ஊழியம் செய்த போது, புற ஜாதியார் கொடுத்த உணவை அவர் சந்தோஷமாய் சாப்பிட்டார். புறஜாதியார் கொடுத்த உணவை உண்ணக்கூடாது என்பது நியாயபிரமாணத்தின் திட்ட வட்டமான சட்டம். ஆனால் சிலுவையின் பிரமாணத்தை விசுவாசித்த இந்த பேதுரு யூதருக்கும் புறஜாதியாருக்கும் யாதொரு வித்தியாசமில்லை, இரு திறத்தாரும் ஒன்றாக்கப்பட்டிருக்கிறார்கள். இரு திறத்தாரும் ஒரே ஆவியினாலே தேவனிடத்திலே சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம் என்ற புதிய ஏற்பாட்டின் பிரமாணத்தை அவர் விசுவாசித்து செயல்பட்டார். (எபே. 2 : 14-18).

எனவே சிலுவையின் பிரமாணத்தினால் புதிய ஏற்பாட்டு ஊழியத்தைச் செய்த பேதுரு அந்தியோகியாவிலிருந்து வந்த யூதரோடு சேர்ந்து கொண்டு யூத மார்க்கத்துக்கு இசைந்தபடி புறஜாதியாரை விட்டு விலகிப் பிரிந்தார் என்று நாம் பார்க்கிறோம். அப்படியானால் புறஜாதி சபையாரிடத்திற்கு வருகிற போது அவர்களுக்கேற்ற படியும் பேதுரு நடந்து கொள்கிறார். யூத மார்க்கத்தார் வந்த போது அவர்களுக்கேற்ற படியும் தன்னை மாற்றிக் கொள்கிறார். இதுபோன்று ஊழியக்காரர் இரட்டை வேடம் போடக்கூடாது என்பதற்கு இது ஒரு எச்சரிப்பான சம்பவமாகும்.

இன்றும் கர்த்தருடைய ஊழியக்காரர்களில் சிலர் சில பெயர் கிறிஸ்தவ சபைகளுக்குப் போனால் பிரசங்க பீடத்திலே அல்லேலூயா என்ற கோஷம் எழுப்ப மாட்டார்கள். அங்கு ஜெப வேளையில் அந்நிய பாஷைகளைப் பேசமாட்டார்கள். ஆனால் அதே ஆட்கள் ஆவிக்குரிய சபைக்கு வந்தால் அல்லேலூயா கோஷம் வானத்தைப் பிளக்கும் அளவுக்கு எழுப்புவார்கள். ஜெப வேளைகளில் அந்நிய பாஷைகளை முழு பெலத்தோடு பேசுவார்கள். அன்பானவர்களே! ஊழியக்காரன் யூத மார்க்கத்திற்கு ஏற்றபடியும், புறஜாதி கிறிஸ்தவ மார்க்கத்திற்கு ஏற்றபடியும் வேஷம் போடுகிறது போல இன்றைக்கு பெயர் கிறிஸ்தவ சபைகளுக்கு ஏற்றபடியும் பெந்தெகோஸ்தே சபைகளுக்கு ஏற்றபடியும் மாறி மாறி வேஷம் போடக்கூடாது. அப்போஸ்தலனாகிய பவுல் இந்த சத்தியத்தின் மூலம் திட்டவட்டமாக நமக்கு எச்சரிப்புக் கொடுக்கிறார்.

**3. ஊழியக்காரர்கள் மாய்மாலம் செய்யக்கூடாது:-** கலாத்திய நாட்டு சபைகளுக்கு ஊழியம் செய்த கர்த்தருடைய ஊழியக்காரர்களில் சிலர் மாய்மாலம் பண்ணுகிறவர்களாகக் காணப் பட்டார்கள் என்று பிரதான அப்போஸ்தலர்கள் சிலருடைய பெயரை பவுல் பட்டியலிடுகிறார்.

''மற்ற யூதரும் அவனோடே கூட மாயம் பண்ணினார்கள். அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்''. (கலா 2 : 13)

இங்கே பர்னபா பவுலோடு சேர்ந்த மகா பெரிய அப்போஸ்தலன். இவரும் யூதமார்க்கத்தாரோடு சேர்ந்த பொழுது இழுப்புண்டு போனார் என்று நாம் பார்க்கிறோம். மாயம் பண்ணினான் என்றும் நாம் பார்க்கிறோம். அன்பானவர்களே! ஊழியக்காரர்கள் மாய்மாலம் பண்ணக்கூடாது. உள்ளத்திலே கசப்பை வைத்துக் கொண்டு வாயிலே Praise the Lord. Brother! என்று சொல்லக்கூடாது. இருதயத்திலே கோபம்

வைராக்கியத்தை வைத்துக் கொண்டு பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்தக்கூடாது. உண்மை ஐக்கியம் இல்லாத சூழ்நிலையிலே கர்த்தருடைய பந்தியிலே துணிகரமாய் கலந்து கொள்ளக்கூடாது. இங்கே பர்னபா மற்ற அப்போஸ்தலரோடு சேர்ந்து இழுப்புண்டான், மாயம் பண்ணினான் என்று பார்க்கிறோம். இந்த காலத்திலே நமக்கு ஒரு பெரிய எச்சரிப்பைக் கொடுக்கிறார்.

உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள். ஏரோது ராஜாவாயிருந்தாலும் அந்த நரிக்குப் போய்ச் சொல்லுங்கள் என்று யூதா கோத்திரத்துக்கு சிங்கமாம் கர்த்தராகிய இயேசு மாய்மாலம் இல்லாமல் பேசுகிறது போல நாமும் நடந்து கொள்ள பழகவேண்டும்.

**4. சிலுவையின் மூலமாகவே நீதிமானாக்கப்படுகிறோம் :-** புறஜாதியாரில் பிறந்த பாவிகள் இயேசு கிறிஸ்துவின் சிலுவை இரத்தத்தின் மூலமாகவே பாவங்கள் மன்னிக்கப்பட்டு நீதிமானாய் மாற்றப்படுகிறோம். யூத மார்க்கத்தின் போதனை என்ன வென்றால் கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாய் இரட்சிக்கப்படுகிற புறஜாதிகள் யூத மார்க்கத்தின் சடங்குகளையும், யூத மார்க்கத்தின் பிரமாணங்களையும் சேர்த்து பின்பற்ற வேண்டும் என்று போதித்தார்கள். எல்லாவற்றிற்கும் முக்கியமாக புறஜாதிகளா- யிருந்தாலும் யூதர்களைப் போல அனைவரையும் விருத்தசேதனத்தின் மூலமே இந்த மார்க்கத்தில் சேர்க்கப்படுகிறார்கள் என்று யூதர்கள் போதித்தார்கள். இந்த போதனை சிலுவையிலிருந்து வந்த சுவிசேஷத்திற்கு முற்றிலும் முரணானது என்று பவுல் தீர்க்கமாகப் பிரசங்கித்தார்.

ஒருவன் மாம்சீகமான அடையாளங்களினாலோ சடங்குகளினாலோ அல்லது நியாயப் பிரமாணத்தைப் பின்பற்றும் தன்னுடைய சொந்த திறமையினாலோ ஒழுங்குகளினாலோ விதிகளினாலோ இரட்சிக்கப்படுவதில்லை. ஒருவன் இரட்சிப்பை சம்பாதித்துக் கொள்ளவோ போராடிப் பெறவோ முடியாது. தன்னை இரட்சித்துக் கொள்வதற்கான எதையும் எந்த மனிதனும் செய்ய முடியாது. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதின் மூலமே இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். (கலா 2 : 16). ஒரு மனிதனால் இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள முடியுமே தவிர இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது. இரட்சிப்பை சிலுவையிலே இயேசு சம்பாதித்தார். அதை ஒவ்வொரு மனிதனும் விசுவாசித்து ஏற்றுக் கொண்டு கிறிஸ்து தருகிற இரட்சிப்புக்காக தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இது சிலுவையின் மூலம் வருகிறதான இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதமாகும்.

அப்போஸ்தலனாகிய பவுலோடு ஊழியம் செய்த உதவி ஊழியக்காரனாகிய தீத்து யூதன் அல்ல. அவன் புறஜாதி மார்க்கத்தான். ஆனாலும் தீத்துவை விருத்தசேதனம் பண்ணும்படி ஒருவரும் கட்டாயப்படுத்த வில்லை. ஆனால் பிந்திய காலத்திலே புறஜாதியில் இருந்து வருகிற விசுவாசிகள் அனைவரையும் விருத்தசேதனம் பண்ண வேண்டும் என்று அந்த யூதமார்க்கத்தார் கட்டாயப்படுத்தினார்கள். அவர்களை கள்ள சகோதரர்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அழைக்கிறார். (கலா 2:4)

**''நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே''. (கலா 2:16)**

**''நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப் படுவதில்லையென்று அறிந்து, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்''. (கலா 2:15).** என்று பவுல் குறிப்பிடுகிறார்.

**5. கிறிஸ்துவைப் பின்பற்றுபவன் தவறுவதில்லை:-** கலாத்திய நாட்டு சபைகள் மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் பின்பற்றுவதா? அல்லது சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதா? என்ற குழப்பத்தில் இருந்த போது, இந்த நிருபத்தை எழுதுகிற பவுல் நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றினால் தவற மாட்டீர்கள். மீண்டும் பாவத்துக்குள்ளாக மாட்டீர்கள் என்று சொல்லி அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

**''நான் இடித்துப் போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால், பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன்''. (கலா 2:18)**

**''தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப் பிரமாணத்தினாலே நியாயப் பிரமாணத்திற்கு மரித்தேனே''. (கலா 2:19).**

கிறிஸ்து சிலுவையிலே மரித்ததுபோல கிறிஸ்துவைப் பின்பற்று-கிறவனும் நியாயப் பிரமாணத்திற்கு மரித்துப் போனான் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். வேத புத்தகத்திலே நாம் சரியாக வாசித்துப் பார்த்தால் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் முதலாவதாக பாவத்திற்கு மரிக்கிறான். பின்பு தேவனுக்காக ஜீவிக்கிறான் என்று பார்க்கிறோம்.

★ நாம் பாவத்திற்கு மரித்தோம். (ரோமர் 6:2)

★ நியாயப் பிரமாணத்திற்கு மரித்தோம். (கலா 2 : 19)

★ சுயத்திற்கு மரித்தோம். (கலா 2 : 20).

இவ்விதமாக ஒருவன் பாவத்திற்கு மரித்து, நியாயப் பிரமாணத்திற்கு மரித்து, சுயத்திற்கு மரித்து கிறிஸ்துவைப் பின்பற்றுபவன் தவறுவதில்லை. ஆனால் நியாயப் பிரமாணத்தைப் பின்பற்றுகிறவனோ ஒவ்வொரு நாளும் தவறுகிறான். பாவங்கள் உண்டென்று உணர்த்தக்கூடிய குற்றமுள்ள மனச்சாட்சி அனுதினமும் மனிதனுக்கு இருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்.

**6. சிலுவையினால் மட்டுமே நீதிமானாக்கப் படுகிறான் :-** ஒரு ஜெய ஜீவியமுள்ள வாழ்க்கைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு ஒரு வழி நடத்துதலும் முன் மாதிரியும் காட்டுகிறார்.

**''கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக் கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து, எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்''. (கலா 2 : 20).** என்று எழுதுகிறார்.

கிறிஸ்து சிலுவையிலே மரித்தது மனுக்குலத்தின் ஒவ்வொருவருக்காகவும் மரித்தார் என்பதே புதிய ஏற்பாட்டின் வேத சத்தியம். இதை ஆவியிலே விசுவாசிக்கிற எவனும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தோடு தன்னையும் இணைத்துக் கொள்கிறான். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு தன்னையும் சேர்த்துக் கொள்கிறான். எனவே கிறிஸ்துவின் சிலுவை மரணத்தோடு தன்னை இணைத்துக் கொண்ட மனிதன், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் விசுவாசத்தால் ஜீவிக்கிற மனிதன் அடுத்து நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதை பவுல் கலாத்திய சபைகளுக்கு எழுதுகிறார்.

நியாயப் பிரமாணமானது மனிதனுடைய நீதியுள்ள வாழ்க்கையிலே எங்கெங்கே தவறுகிறான் என்பதை மட்டுமே சுட்டிக் காட்டுகிறது. நீதியிலே தவறின மனிதன் திரும்ப எழும்பி நடப்பதற்கு நியாய பிரமாணம் உதவி செய்வதில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மேல் வைக்கிற விசுவாசமானது இயேசு கிறிஸ்து சிலுவையிலே சம்பாதித்த நீதியிலே இணைத்துக் கொண்டு அந்த நீதியிலே வாழ மனிதனைத் தூக்கி விடுகிறது.

''ஏனென்றால் எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது''. (II கொரி 3 : 6).

அதாவது நியாயப் பிரமாணமானது மனிதனைக் கொல்லுகிறது. கிறிஸ்துவின் சிலுவையின் பிரமாணமோ பாவம் செய்து மரித்துக் கொண்டிருக்கிற மனிதனை உயிர்ப்பித்து தூக்கி விடுகிறது. எனவே கலாத்திய நாட்டு சபை விசுவாசிகள் நியாயப்பிரமாணத்தை நம்பினால் அவர்களால் நீதிமான் என்கிற உயர்ந்த நிலையிலே ஜீவிக்க முடியாது. ஆனால் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையும், அவர் சிந்திய இரத்தத்தினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதையும் விசுவாசிக்கிறவனோ ஒரு வேளை தன் நீதியுள்ள வாழ்க்கையிலே வீழ்ச்சிகள் வந்தாலும் கிறிஸ்துவின் இரத்தத்தால் மீண்டும் கழுவப்பட்டு, கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்பட்டு, கிறிஸ்துவின் நீதியிலே நடக்கிறோம். இப்படியிருக்க பாவத்தை அறிகிற அறிவு நியாயப் பிரமாணத்தினால் வருகிறபடியால் எந்த மனுஷனும் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமான்களாவதில்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றிய விசுவாசத்தினாலேயே மனிதன் நீதிமானாக்கப்படுகிறான்.

**7. கிருபையை வீணாக்கக் கூடாது :-** யூத மார்க்கத்தார் கலாத்திய நாட்டு சபைகளை நியாயப் பிரமாணத்தின் சடங்குகளைச் செய்யச் சொல்வதின் மூலம் இயேசு கிறிஸ்து சிலுவையிலே சம்பாதித்த தேவனுடைய கிருபையை வீணாக்குகிறார்கள் என்று பவுல் எழுதுகிறார்.

**''நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே''. (கலா 2 : 21).**

நாம் ஏற்கனவே பார்த்தபடி நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்து மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபை என்பது பாவத்திலே விழுகிற மனிதனை பாவத்தில் விழுந்து போகாதபடிக்குத் தாங்குகிறது.

''என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும் போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது''. (சங் 94 : 18) என்று சங்கீதக்காரனாகிய தாவீது கூறுகிறார்.

எனவே கால் சறுக்குகிற மனிதனை கிறிஸ்துவின் கிருபை தாங்குகிறது. அதற்காக காலமெல்லாம் ஒருவன் பாவத்திலே சறுக்கிக் கொண்டே இருப்பான்; தேவனுடைய கிருபை இவனைத் தாங்கிக்

கொண்டேயிருக்கும்; என்பது கிருபைக்கு அர்த்தமல்ல. இயேசு கிறிஸ்து கிருபையை மாத்திரம் கொடுக்கவில்லை. சத்தியத்தையும் கூட கொடுத்திருக்கிறார். சத்தியத்தின் ஆசீர்வாதம் என்ன? ''சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' என்று யோவான் 8 : 32-ல் இயேசு சொல்லியிருக்கிறார்.

ஆகவே கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக கிருபையும், சத்தியமும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற படியால் விழுகிற மனிதனை கிருபைத் தாங்குகிறது. தாங்குகிற தேவ கிருபையோடு அவரை மீண்டும் விடுதலையாக்குகிற தேவ சத்தியம் அவரை திரும்ப நீதிமானாக்குகிறது. இப்படிப்பட்ட சிலுவையின் பிரமாணத்தை புறஜாதியார் விசுவாசித்து அனுதினமும் நீதிமான்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் நியாயப் பிரமாணத்திற்குத் திரும்பினால் கிறிஸ்துவின் கிருபையை வீணாக்குகிறார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்.

கிறிஸ்துவின் சிலுவையிலே சம்பாதித்த கிருபையை நாம் வீணடிக்க முடியுமா? நிச்சயமாக வீணாக்க முடியும் என்று பவுல் இங்கே எச்சரிக்கிறார்.

**★ கிருபையை போக்கடிக்கிறவர்கள் உண்டு. (யோனா 2 : 8)**
**★ கிருபையை வீணாக்குகிறவர்கள் உண்டு. (கலா 2 : 21)**
**★ கிருபையை இழந்து போகிறவர்களும் உண்டு. (எபி 12 : 15)**

ஒரு வாலிபன் தன் வாழ்க்கையிலே வந்த காதல் தோல்வியினால் வாழ்க்கை வெறுப்புற்று பைத்தியக்காரனானான். ஐசுவரியமான தன் குடும்பத்தையும் அன்பான பெற்றோரையும் விட்டுப் பிரிந்து தெரு தெருவாக அலைந்தான். வாயிலே உமிழ் நீரை வடிய விட்டுக் கொண்டு அசிங்கமான தோற்றத்தோடும் கிழிந்த சட்டையோடும் தெரு தெருவாய் அலைந்து கொண்டிருக்கிற போது ஒருநாள் இரவு ஒரு ஆவிக்குரிய சபையின் வாசற்படியிலே படுத்து அவன் தூங்கினான்.


மறுநாள் காலை ஞாயிற்றுக்கிழமையில் சபை ஆராதனைக்காக ஆலயம் திறக்கப்பட்டது. இந்த பைத்தியக்காரனான வாலிபன் அந்த ஆராதனையின் முடிவிலே ஊழியக்காரரிடத்தில் அழைத்துச் செல்லப்பட்டான். என் நண்பரான ஊழியக்காரர் அந்த பைத்தியக்காரனுக்காய் ஜெபித்தார். அசுத்த ஆவி அவனை விட்டு விலகியது. புத்தி தெளிந்தது. மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டான்.

அங்கு நடந்த வேதாகப் பாடசாலையில் சிலமாதங்களாக வேதாகமத்தைக் கற்றுக் கொண்டான். நானும் அந்த இளைஞனுக்கு

பாடம் சொல்லிக் கொடுத்தேன். கர்த்தர் தன்னை இரட்சித்து, தெளிந்த புத்தியைக் கொடுத்து மனிதனாக தலை நிமிர்ந்து நடக்க வைத்தபடியால் நன்றியுடன் கர்த்தரின் ஊழியத்துக்கு வந்தார்.

ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் அவரை ஊழியத்தில் பாஸ்டராக நியமித்தோம். பாடல் பாடவும், துதி ஆராதனை நடத்தவும், பிரசங்கம் செய்யவும் வரம் பெற்றிருந்தார். ஆனால் இவர் ஊழியக்களத்தில் தங்காமல் மீண்டும் தன் சொந்த ஊருக்கு அதிகமாக சென்றார். ஊழியம் வேண்டாம் என்று உதறிவிட்டு உலக சிநேகத்துக்குள் சென்றுவிட்டார். தனக்கு கர்த்தர் கொடுத்த கிருபையை வீணாக்கினார்.

இன்று அதே இடத்தில் வேறொரு சகோதரனை ஊழியத்துக்கு நியமித்தோம். இன்று அங்கு அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். சொந்த இடம் வாங்கி, சொந்த ஜெபவீடு கட்டி விட்டோம். ஊழியத்தில் தேவ கிருபை பொழியப்படுகிறது. அவரோ கர்த்தர் கொடுத்த கிருபையை வீணடித்துவிட்டார். எனவே கிருபையை ஒருவரும் வீணாக்கக் கூடாது என்று கலாத்திய நிருப சத்தியம் நமக்கு விளம்புகிறது.



# 6

# விசுவாசமா? கிரியையா?

(கலாத்தியர் 3:1-5)

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய நாட்டு சபைகளுக்கு இந்நிருபத்தை எழுதும் போது கிரியைகளினால் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறோமா? அல்லது விசுவாசத்தினால் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறோமா? என்ற சத்தியத்தை நிருபிப்பதற்காக இந்த ஐந்து வசனங்களிலும் ஐந்து மேற்கோள்களை எடுப்பித்துக் காட்டுகிறார். புதிய ஏற்பாட்டு விசுவாசி தேவனிடமிருந்து தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அதையும் இதையும் செய்து நிறைவேற்ற வேண்டும் என்று நம்முடைய கிரியைகளைக் குறித்துச் சொன்னால் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளத் தக்கதாக நம்மால் எதையும் கிரியை செய்ய முடியாது? ஆனால் சிலுவையிலே கிறிஸ்து சம்பாதித்த தேவனுடைய ஆசீர்வாதத்தை விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ள முடியும் என்பதற்கு இந்த ஐந்து வசனங்களிலும் ஐந்து சத்தியங்களைப் பவுல் எடுப்பித்துக் காண்பிக்கிறார்.

## 1. விசுவாசத்தினால் தவறுகளைத் திருத்திக் கொள்கிறோம் (3:1) :-

''புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டிருந்தாரே'' (கலா. 3:1).

ஒரு விசுவாசி மயக்க நிலைமைக்குக் கொண்டு செல்லப்படுகிற இரண்டு காரியங்கள் உண்டு.

★ **பாவத்தினால் வருகிற மயக்கம். (II தீமோ 2 : 26)**

★ **உபதேச குழப்பங்களினால் உண்டாகிற மயக்கம். (கலா. 3 : 1)**

ஒரு விசுவாசி பாவம் செய்யும் போது ஆவிக்குரிய வாழ்க்கையிலே மயக்க நிலைமைக்குத் தள்ளப்படுகிறார். உபதேசத்தில் குழப்பங்களுக்கு இடங்கொடுக்கிற போதும் ஆவிக்குரிய வாழ்வில் மயக்க நிலைக்குத் தள்ளப்படுகிறார். மயக்க நிலையும் மரித்த நிலைமையும் ஏறக்குறைய தோற்றத்தில் ஒரே மாதிரி தான் இருக்கும். மயக்க நிலையைக் கவனித்து மயக்கத்திலிருந்து எழும்புவதற்கு ஆவிக்குரிய ஊழியக்காரர்கள் ஊழியம் செய்யாத பட்சத்தில், மயக்க நிலை தொடர்ந்து நீடிக்குமானால் அங்கு மரணமும் சம்பவிக்கக் கூடும்.

எனவே விசுவாசிகளுக்கு பாவத்தினால் வருகிற மயக்கமானாலும், உபதேச குழப்பங்களினால் வருகிற தவறுகளானாலும் திருத்திக் கொள்ளப்பட வேண்டும் என்று பவுல் இந்த வசனத்திலே குறிப்பிடுகிறார்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை நண்பரே! நீங்கள் மயக்க நிலையில் இருக்கிறீர்களா? அல்லது ஆவிக்குரிய ஜீவியத்திலே மரித்து போய் விட்டீர்களா? அல்லது விசுவாச ஜீவியத்திலே ஜீவனுள்ள விசுவாசிகளாய் இருக்கிறீர்களா?

## 2. விசுவாசத்தினால் ஆவியைப் பெற்றோம். (3 : 2) :-

விசுவாசம் என்பது தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வாய்க்காலாய் இருக்கிறது. விசுவாசம் என்பது மனித கண்களுக்குப் புலப்படாத ஆவி மண்டல ஆசீர்வாதத்தோடு தொடர்பு கொள்ளக் கூடியது. இரட்சிப்பையும் விசுவாசத்தினால் தான் பெற்றுக் கொள்கிறோம்.

**''கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; (எபே 2 : 8)** என்று பவுல் குறிப்பிடுகிறார்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதும் விசுவாசித்தினால் பெற்றுக் கொள்கிறோம். இதை கலாத்திய நாட்டு சபைகளுக்குப் பவுல் அப்போஸ்தலன் நினைவுப் படுத்துகிறார்.

**''ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ? விசுவாச கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்.'' (கலா 3 : 2)**

நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதினாலே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. தேவனுடைய ஈவகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஏழு மலைகள் ஏறி, ஏழு எலுமிச்சம் பழத்தின் மேல் ஏழு ஊசிகளைக் குத்தி, அந்த ஊசியின் மேல் ஒற்றைக் காலில் நின்று தவம் புரிந்தால் தேவனுடைய அருள் கிடைக்கும் என்று மற்ற மார்க்கங்கள் கிரியைகளை முக்கியத்துவப்படுத்துகிறது.

நம்மால் ஏழு மலை ஏறவும் முடியாது. ஏழு எலுமிச்சம் பழத்தின் மேல் ஏழு ஊசிகளைக் குத்தி ஒற்றைக் காலில் நின்று நம்மால் தவம் புரியவும் முடியாது. ஆனால் உன்னதத்திலிருந்த இயேசு கிறிஸ்து பிதாவினிடத்திலிருந்து வரங்களைப் பெற்றுக் கொண்டு நமக்கு அந்த வரங்களைக் கொடுக்கும்படி இந்த பூலோகத்திற்கு இறங்கி வந்திருக்கிறார். அந்த வரங்களை நாம் பெற்றுக் கொள்ள விசுவாசம் மட்டும் இருந்தால் போதுமானது.

**''வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்''. (யோவான் 7 : 38, 39)**

எனவே கலாத்திய நாட்டு சபை எதையாவது ஒன்று செய்து தேவனுக்காய் பக்தியாய் கிரியை செய்து ஆவியைப் பெற்றுக் கொள்ளவில்லை. விசுவாசத்தினாலேயே பெற்றுக் கொண்டது. ஆகவே நியாயப்பிரமாணத்தின் கிரியைக்கு நீங்கள் திரும்ப வேண்டாம். அது பின்மாற்றம். அதினாலே எந்த ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் விசுவாச கேள்வியை நீங்கள் வளர்த்துக் கொண்டால் தேவ ஆவியைப் பெற்றுக் கொண்டது மட்டுமல்ல. இன்னும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைவுபடுத்துகிறார்.

## 3. விசுவாசத்தினால் ஆவியிலே வளர்கிறோம் (3 : 3) :-

அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசமா? கிரியையா? எதை நீங்கள் சார்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கு விசுவாசம் தான் என்பதை திட்டமும் தெளிவுமாய் நினைப்பூட்டுகிறார்.

**''ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?'' (கலா 3 : 3)** கலாத்திய நாட்டு சபைகள் ஆவியானவருடைய கிரியைகளை விசுவாசத்தினால் துவங்கியது. ஆனால் இப்பொழுதோ நியாயப்பிரமாணத்திற்குத் திரும்புகிற போது ஆவிக்குரிய வளர்ச்சி தடைபடுகிறது.

★ விசுவாசத்தில் ஆரம்பமும் உண்டு. (எபி 12 : 1)

★ **விசுவாசத்தில் வளர்ச்சியும் பூரணப்படுதலும் உண்டு.** (எபி 12 : 1)

எனவே விசுவாச வாழ்க்கையில் ஆரம்பம் இருக்கிறதைப் போல அந்த விசுவாசத்தில் வளர்ந்து வளர்ந்து பூரணப்படுதலும் இருக்கிறபடியினாலே அது விசுவாசத்தினால் தான் வளரவேண்டுமே தவிர கிரியைகளினால் வளர முடியாது. ஏனென்றால் நம்முடைய கிரியைகள் குறையுள்ளது என்று வேதம் திட்டவட்டமாய்ச் சொல்லுகிறது. நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்க தரிசனம் உரைத்தலும் குறைவுள்ளது. ஆனால் நிறைவு வரும் போது குறைவானது ஒழிந்து போகும். எனவே நிறைவாகிய பூரணத்தை நோக்கி செல்வதற்கு விசுவாசமே தேவன் நியமித்த பாதை என்று அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே எடுத்துச் சொல்கிறார்.

**4. விசுவாசத்தினால் பாடுகளை சகிக்கிறோம் (3 : 4) :-** அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய நாட்டு சபைகளிலே ஊழியம் செய்த போது ஊழியக்காரனாகிய பவுலுக்கும் பாடுகள் வந்தது. அந்த ஊழியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கும் பாடுகள் வந்தது. பாடுகளின் உச்சக்கட்டம் கல்லெறிதலாக இருந்தது என்று நாம் கலாத்திய நாட்டு சபைகளின் சரித்திரத்திலே பார்க்கிறோம்.

அப் 14 : 5-ல் யூத மார்க்கத்தார் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் விசுவாசிகள் மீது கல்லெறிந்து கொல்வதற்கும் துணிந்தார்கள். அப் 14 : 19, 14 : 20 ஆகிய வசனங்களிலே ஊழியக்காரர் மீது கல்லெறிந்து கொன்று பட்டணத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டு வந்து போட்டார்கள் என்று நாம் பார்க்கிறோம். இத்தனை பாடுகளையும் அவர்கள் விசுவாசத்தினாலே பாடுபட்டு சகித்தார்கள்.

''நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது'' என்று மத் 5 : 10ல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிற ராஜரீக பிரமாணத்தை நிறைவேற்றும்படி விசுவாசத்தினால் அவர்கள் பாடுகளை சகித்தார்கள்.

**''இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப் போயிற்றே''. (கலா 3 : 4).**

எனவே விசுவாச மார்க்கத்துக்கு வந்ததினாலே எவ்வளவோ பாடுகளை சகித்த அவர்கள் இப்பொழுது விசுவாசத்தை விட்டு விட்டு நியாய பிரமாணத்தின் கிரியைக்குத் திரும்புவார்கள் என்று சொன்னால் நீங்கள் விசுவாசத்தினால் பட்ட பாடுகளெல்லாம் வீணாய்ப் போகிறதே என்று அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே எடுத்துரைக்கிறார்.

## 5. விசுவாசத்தினால் அற்புதங்கள் நடக்கிறது (3 : 5) :-

கலாத்திய நாட்டு சபைகள் நியாயப் பிரமாணத்தின் கிரியைக்குத் திரும்ப வேண்டிய அவசியமில்லை. நியாயப் பிரமாணத்தின் நீதியின் படிக்கிரியை செய்கிற போது அதினால் நமக்கு ஒரு அற்புதங்களும் நடைபெறாது. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கிற போது நமக்கு ஒவ்வொரு நாளும் அற்புதங்கள் நடந்து கொண்டேயிருக்கிறது என்று பவுல் இங்கே நினைப்பூட்டுகிறார்.

**''அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப் பிரமாணத்தின். கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?'' (கலா 3 : 5).**

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக, பட்சபாதமில்லாதவராக எல்லோருக்கும் அற்புதங்களைச் செய்கிறார். ஆனால் அந்த அற்புதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நமக்கு விசுவாசம் மட்டுமே தேவை. எனவே தேவனுடைய சபையானது நியாயப்பிரமாணத்தின் பாரம்பரியங்களைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலே முழு இருதயத்தோடு விசுவாசம் வைத்தால் நமக்கு அற்புதங்கள் நடக்கும். விசுவாசிப்பவர்களுக்குத் தான் அற்புதங்கள் நடக்கிறது. அற்புதங்கள் நடப்பதற்கு விசுவாசமே பிரதானமான தேவை.

விசுவாசம் என்பது நமக்கும் தேவனுக்கும் இடையிலே உள்ள ஒரு பாலமாக இருக்கிறது. தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்க்கால் தான் தேவன் பேரில் நாம் வைக்கிற விசுவாசம். விசுவாசமானது ஆவி உலகத்தோடு தொடர்பு கொள்ளக் கூடியது. விசுவாசமானது காணப்படாத தேவ ஆசீர்வாதத்தோடு தொடர்புடையது. கோடான கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கிற தேவனோடு ஒரு இமைப்பொழுதில் தொடர்பு கொள்ள வேண்டுமானால் விசுவாசத்தினால் மட்டுமே தொடர்பு கொள்ள முடியும். எனவே இன்று விசுவாசிகள் விசுவாசத்தில் வளர்ந்தாலே போதும் அற்புதங்கள் நடந்து கொண்டே இருக்கும். கலாத்திய நாட்டு சபை ஸ்தாபிக்கப்பட்ட அந்த நாளிலே அந்த ஊர் சபைக்கு தேவன் பெரிய அற்புதத்தைச் செய்து தான் அங்கே சபை உருவாயிற்று. (அப். 14 : 8).

லீஸ்திராவிலே தாயின் வயிற்றில் பிறந்தது முதல் சப்பாணியாய் இருந்தவன் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டான். பவுல் அவனை உற்றுப் பார்த்து : நீ எழுந்து காலூன்றி நில் என்று உரத்த சத்தத்தோடே

சொன்னார். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான். அன்பானவர்களே! இவ்வளவு பெரிய அற்புதத்தைக் கண்ட பிற்பாடு தான் ஜனங்கள் மனந்திரும்பி கர்த்தரை ஏற்றுக் கொண்டு அங்கே கலாத்திய நாட்டு சபைகள் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த சபைகள் ஸ்தாபிக்கப்படுகிற போது அதன் ஆரம்பம் என்ன? பிறவி சப்பாணி எழும்பி நடந்தான். இந்த அற்புதம் நடந்ததற்கு காரணம் என்ன தெரியுமா?

பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவன் இரட்சிப்புக் கேற்ற விசுவாசத்தோடு கேட்டுக் கொண்டிருக்கிறான். (அப். 14:9) எனவே விசுவாசமே பிறவி சப்பாணிக்கு அற்புதத்தைக் கொண்டு வந்தது. அவன் எழும்பி நடந்தான். நியாயப் பிரமாண கிரியைகளினால் அற்புதம் நடைபெறவில்லை. எனவே இந்த நாட்களிலும் இனி வரும் நாட்களிலும் தேவன் புதிய ஏற்பாட்டு சபைக்குக் கொடுக்கப்போகிற பின்மாரி கால எழுப்புதலுக்கு தேவை விசுவாசமே. இதை வாசித்துக் கொண்டிருக்கிற கர்த்தருடைய பிள்ளைகளே! உங்களுக்கு இருக்கிற விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இவ்விதமாக இந்த வேதபகுதியில் கிரியைகளை விட விசுவாசமே முக்கியம் என்று பவுல் கலாத்திய சபைக்கு எழுதுகிறார்.



# 7

# விசுவாசமா? நியாயப்பிரமாணமா?

(கலாத்தியர் 3 : 6-29)

இந்த பகுதியிலே நியாயப் பிரமாணம் என்கிற வார்த்தை 11 முறையும், விசுவாசம் என்ற வார்த்தை 14 முறையும் வருகிறது. இந்த வசனங்களிலெல்லாம் நியாயப் பிரமாணத்தையும் விசுவாசத்தையும் ஒப்பிட்டு அதில் நியாயப்பிரமாணம் பழமையானது. விசுவாசமே புதுமையானது என்று பவுல் எடுத்துக் காண்பிக்கிறார். நியாயப் பிரமாணம் நம்மை விசுவாசத்துக்கு நேராய் வழி நடத்துகிற உபாத்தியாய் இருக்கிறது என்று பவுல் சொல்லுகிறார். இந்த தியானத்தின்படி நியாயப் பிரமாணம் என்பது பாரம்பரியத்துக்குட்பட்டது. விசுவாசம் என்பது பரிசுத்த ஆவியானவருக்குட்பட்டது. நாம் பாரம்பரிய சபைகளிலிருந்து பாரம்பரிய சடங்காச்சாரங்களைக் கைக்கொள்ளும் வரைக்கும் நமக்கு தேவனுடைய ஆசீர்வாதம் கிடையாது. ஆவிக்குரிய ஜீவியத்திலும் விருத்தியடைய முடியாது. ஆனால் விசுவாசத்துக்குள் வந்து விட்டால் நாம் ஆவிக்குரிய ஜீவியத்திலும் விருத்தியடைவோம். தேவனுடைய ஆசீர்வாதத்தையும் நிறைவாய் பெற்றுக் கொள்வோம் என்று நாம் அறிகிறோம்.

இந்த வேத பகுதிகளிலே அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய நாட்டு சபைகளுக்கு முற்பிதாவாகிய ஆபிரகாமை முன் உதாரணமாக எடுத்துரைக்கிறார். அந்த ஆபிரகாமின் ஜீவியத்திலே விசுவாசம் முந்தியதா? விருத்தசேதனம் முந்தியதா? என்பதை கவனியுங்கள் என்று சொல்கிறார். ஆபிரகாமின் ஜீவியத்திலே விசுவாசமே முந்தியது. விருத்தசேதனம் பிந்தியது என்று எழுதுகிறார். யூத மார்க்கத்தாரின் முற்பிதா ஆபிரகாம் தானே. இந்த ஆபிரகாம் மூலம் தான் யூத மார்க்கம் தோன்றியது. ஆகவே இந்த யூத மார்க்கத்தாருக்கு ஆபிரகாமை முன்

உதாரணமாய் எடுத்துக்காட்டி அவர் வாழ்க்கையிலே பாரம்பரியம் முக்கியமல்ல. பரிசுத்த ஆவியானவருடைய சத்தியங்களே பிரதானமாய் இருந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

**''உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப் பாருங்கள்; அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப் பண்ணினேன்''. (ஏசாயா 51 : 2)**

எனவே முற்பிதாவாகிய ஆபிரகாம் அழைக்கப்பட்டார், ஆசீர்வதிக்கப்பட்டார், அவர் நட்சத்திர கூட்டமாய்ப் பெருகினார். இவர் ஆசீர்வதிக்கப்பட்டதற்கும், பெருகினதற்கும் காரணம் விருத்த சேதனமல்ல, விசுவாசமே என்பதை பவுல் தெளிவாய் எடுத்துக் காண்பிக்கிறார். ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்'' என்று ஆதி 15 : 6-ல் சொல்லப் பட்டுள்ளது. ஆனால் ஆதி 17 : 10-ல் அந்த ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் கர்த்தர் விருத்தசேதன உடன்படிக்கையைக் கொடுத்தார். எனவே ஆபிரகாமின் ஜீவியத்திலே விசுவாசம் முந்தியதா? அல்லது விருத்தசேதனம் முந்தியதா? எனக் கவனித்தால் விசுவாசமே முந்தியது. விருத்தசேதனம் பிந்தியது. அப்படியானால் ஆபிரகாமின் சந்ததிகளாயிருக்கிற யூத மார்க்கத்தாருக்கும், விசுவாசத்தினாலே ஆபிரகாமின் பிள்ளைகளாயிருக்கிற புதிய ஏற்பாட்டு சபையாருக்கும் இந்த ஆபிரகாமின் முன் உதாரணங்களை எடுப்பித்துக் காண்பித்து, நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் சந்ததிகளாயிருந்தால் பாரம்பரியமான விருத்தசேதனத்தை நீங்கள் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆபிரகாமை நீதிமானாக்கினது விருத்தசேதனமல்ல. அவர் கர்த்தர் மேல் வைத்த விசுவாசமே. நீங்களும் அதே விசுவாசத்தைப் பின்பற்றினால் போதுமானது என்று சொல்லி இந்த சத்தியத்திலே ஏழு குறிப்புகளை ஆபிரகாமின் வாழ்க்கையோடு ஒப்பிட்டு புதிய ஏற்பாட்டு சபைக்கு சத்தியத்தை எழுதுகிறார்.

**1. ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானானான் :-** நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதினால் எந்த மனிதனும் நீதிமானாக முடியாது. நியாயப்பிரமாணம் கொடுத்த பத்து கட்டளைகளில் முதல் ஒன்பது கட்டளைகளை பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் எல்லோரும் கைக்கொள்ள முடிந்தது. ஆனால் நியாயப் பிரமாணத்தின் 10-வது கட்டளையாகிய பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்ற கட்டளையை நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேராலே கைக்கொள்ள முடியவில்லை. பரிசுத்தத்தில் மிக உன்னத அனுபவங்களில் இருந்த பரிசுத்தவான்கள் கூட நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றி நீதிமானாக முடியவில்லை. உதாரணமாக தாவீது ராஜா கண்களின் இச்சையிலே

தவறுகிறவராக இருந்தார். சாலொமோன் ராஜாவும் கண்களின் இச்சையிலே தவறுகிறவராக இருந்தார். நியாயாதிபதியாகிய சிம்சோன் கண்களின் இச்சையிலே தவறுகிறவராக இருந்தார். இப்படி பல பரிசுத்தவான்கள் நியாயப்பிரமாணத்தின் நீதியை முழுமையாய் நிறைவேற்ற முடியாமல் போனார்கள். ஆனால் விசுவாசத்தில் ஜீவித்த ஆபிரகாமையோ அவர் நீதிமான் என்று வேதம் சொல்கிறது. ஆதி 15:6-ல் ''அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்'' என்று சொல்லுகிறது. (கலா 3:6)

ஆகையினாலே புதிய ஏற்பாட்டு விசுவாசிகளும் நீதிமானாக வாழ்வதற்கு கலா 3:8-யை கவனியுங்கள். ''மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமானாக்குகிறார்'' என்று வேதம் சொல்கிறது. எனவே கலாத்திய நாட்டு சபையார் நீதிமான்களாவதற்கு பாரம்பரியமான விருத்தசேதனத்தைக் கைக்கொள்ள வேண்டியதில்லை. அதற்கு முந்தியதும், பிந்தியதுமான விசுவாசத்தினாலே தான் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம்.

''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்'' என்று II கொரி 5:21-ல் சொல்லப்பட்ட படி கிறிஸ்துவுக்குள் வருகிற அத்தனை பேரும் நீதிமான் என்கிற பட்டியலிலே கொண்டு வரப்படுகிறார்கள். இது கிறிஸ்துவின் இரத்தத்தின் மேல் வைக்கிற விசுவாசத்தினால் கிடைக்கிற நீதியாகும். எனவே பாரம்பரியத்தைக் கைக்கொள்கிற எவரும் நீதிமானாக முடியாது. பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றி விசுவாசிக்கிறவர்களே நீதிமான்களாக ஜீவிக்க முடியும்.

**2. ஆபிரகாமின் சுவிசேஷம் விசுவாசம்:** ஆபிரகாமின் ஆரம்பத்திலிருந்து ஆபிரகாமின் இறுதி வரை ஆபிரகாமுக்கு தேவன் பிரசங்கித்த சுவிசேஷமே விசுவாசம் தான். அந்த விசுவாசத்தை ஆரம்பம் முதல் கடைசி வரைப்பற்றிக் கொண்ட ஆபிரகாம் நீதிமானாக மாறியது மாத்திரமல்ல. அவர் விக்கிரகத்தை விட்டு ஜீவனுள்ள தேவனுக்கு நேராக திரும்பி இரட்சிக்கப்படவும் அந்த விசுவாசம் போதுமானதாக இருந்தது.

**''மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னதாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வாதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு சுவிசேஷமாய் முன்னறிவித்தது''. (கலா 3:8)** எனவே விசுவாசம் என்ற சுவிசேஷத்தை இன்றைக்கும் ஏற்றுக் கொள்கிறவர்கள் அந்த விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்று கலா 3:9-ல் நாம் பார்க்கிறோம்.

அன்பானவர்களே! நீங்கள் கேட்கிற சுவிசேஷம் விசுவாசமா? அல்லது பாரம்பரியமா? நீங்கள் பாரம்பரியங்களைத் தூக்கியெறிந்து

விட்டு பரிசுத்த ஆவியானவர் இன்று கற்றுக் கொடுக்கிற தேவன் பேரில் இருக்கிற விசுவாசத்துக்கு நீங்கள் வருவீர்களானால் இந்த விசுவாசமே உங்களுக்கு சுவிசேஷமாகவும் உங்களுக்கு ஆசீர்வாதத்தின் மூலக்காரணமாகவும் மாறி விடுகிறது.

**3. விசுவாசமே சாபத்திலிருந்து விடுதலை தருகிறது :-** நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்துக்குட்பட்டிருக்கிறார்கள். நியாயப் பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று கலா 3:10ல் எழுதியிருக்கிறது.

**''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்''. (கலா 3:13.)**

இந்த வசனங்களை நாம் கூர்ந்து கவனித்தால் நியாயப் பிரமாணத்துக்கு உட்பட்ட அனைவரும் சாபத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள்.

நீங்கள் ஆசீர்வாதத்தின் பக்கம் வர வேண்டுமானால் கெர்சீம் மலையிலே நிற்க வேண்டும். கெர்சீம் மலையிலிருந்து வருகிற இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும். இந்த ஏபால் மலையிலிருந்து வருகிற சாபங்கள் தான் நியாயப்பிரமாணத்தின் சாபங்கள். ஆனால் கெர்சீம் மலையிலிருந்து வருகிற ஆசீர்வாதங்களெல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து வருகிற ஆசீர்வாதங்களாகும். எனவே பாரம்பரியத்துக்கு உட்பட்டு நீங்கள் பாரம்பரிய சபைகளிலிருந்து பாரம்பரிய ஆராதனை முறைகளைக் கைக்கொள்ளும் வரைக்கும் நியாயப் பிரமாணத்தின் சாபம் உங்களை மேற்கொள்ளும். ஆனால் அவற்றிலிருந்து விடுதலையாகி கெர்சீம் மலைக்குத் திரும்புங்கள். கிறிஸ்துவின் சிலுவைக்கு நேராய் திரும்புங்கள். கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து உங்கள் மேலிருக்கிற அனைத்து சாபங்களிலிருந்தும் ஆண்டவர் விடுதலைக் கொடுக்கிறார்.

சாபங்கள் நான்கு விதமானவை.

a) ஆதாமினால் உண்டான சாபம்
b) நியாயப் பிரமாணத்தினால் உண்டான சாபம்
c) முற்பிதாக்களால் வருகிற சாபம்
d) நமது பாவத்தினால் வருகிற சாபம்

இந்த நான்கு விதமான சாபங்களிலிருந்தும் விடுதலையைப் பெற்றுக் கொள்ள விருத்தசேதனம் பண்ணுவதினால் பிரயோஜனமில்லை.

நியாயப் பிரமாணத்தைப் பின்பற்றுவதினாலும் பயனில்லை. பாரம்பரிய ஆராதனை முறைகளைக் கைக்கொள்வதினாலும் பிரயோஜனமில்லை. உங்கள் கண்களும், இருதயமும் விசுவாசத்தோடு சிலுவைக்கு நேராய்த் திருப்பப்படுமேயானால் சிலுவையிலிருந்து சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் உங்களுடைய எல்லா சாபங்களிலிருந்தும் விடுதலையாக்கி உங்களை மீட்டுக் கொள்கிறது.

**4. விசுவாசமே ஆசீர்வாதத்திற்கு வழி :-** ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதத்தை நாம் வேதப்புத்தகம் முழுவதும் தியானிப்போமானால் ஆபிரகாம் சகல நிலைமைகளிலும் அவன் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான். ஆபிரகாமுக்கென்று ஒரு தேசத்தைக் கொடுத்தார். ஆபிரகாமுக்கென்று நட்சத்திரக் கூட்டமான ஒரு சந்ததியைக் கொடுத்தார். ஆபிரகாமை வெள்ளியும் பொன்னும் கொண்ட சீமானாயிருக்கும்படி ஆசீர்வதித்திருந்தார். ஆபிரகாமுக்கும் அவன் மனைவிக்கும் கர்த்தர் நீடித்த ஆயுசு நாட்களைக் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்தார். ஆபிரகாமின் மனைவி மரித்த போது புறம்போக்கு நிலத்தில் தூக்கியெறிந்து விடவில்லை. எபிரோன் என்ற நிலத்தை மக்பேலா என்கிற குகையை பணம் கொடுத்து பட்டாவிற்கு கிரயத்துக்கு வாங்கினார். அது மட்டுமல்ல. பரலோகம் முழுவதையுமே பட்டா போட்டு ஆபிரகாமுக்கு தேவன் ஆசீர்வாதமாய்க் கொடுத்தார். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் யார் மரித்தாலும் ஆபிரகாமின் மடியில் தான் போய் உட்கார வேண்டுமென்று வேதம் திட்டவட்டமாய்ச் சொல்லுகிறது.

**''ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும் படியாகவும் இப்படியாயிற்று''. (கலா 3 : 14)**

எனவே இன்றைக்கும் புதிய ஏற்பாட்டு சபை தேவனால் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால், ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குள்ளே நாம் வரவேண்டுமென்று சொன்னால் அந்த ஆபிரகாமின் விசுவாசத்திற்குள் நாம் வரவேண்டும். ஏனென்றால்,

**''அந்தப்படி விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப் படுகிறார்கள்''. (கலா 3 : 9)**

**என்று சொல்லப்பட்டுள்ளது.**

**5. விசுவாச சந்ததியே புதிய ஏற்பாட்டு சபை :- (3 : 16-19) :-** ஆபிரகாமின் ஆரம்ப நாட்களில் பிள்ளைகளில்லை. ஆனால் பிந்திய நாட்களில் ஆபிரகாமுக்கு ஆகார் மூலமாய் இஸ்மவேல் என்ற ஒரு பிள்ளைப் பிறந்தது. கேத்தூராள் என்ற மறுமனையாட்டியின் மூலமாக மேலும் ஆறுபிள்ளைகள் பிறந்தது. (ஆதி 25 : 1,2). ஆபிரகாமின் மனைவியாகிய சாராளிடத்தில் ஈசாக்கு என்ற பிள்ளையும்

பிறந்தது. இந்த ஏழு பிள்ளைகளிலும் ஈசாக்கு என்ற பிள்ளையே ஆபிரகாமின் சந்ததியாக தேவனாலும், தேவனுடைய வேதத்தாலும் அங்கீகரிக்கப்பட்டான். மற்ற ஆறு பேரையும் தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை. காலாகாலமாய் யுகாயுகமாய் இந்த ஈசாக்கின் சந்ததியோடு தான் கர்த்தர் தொடர்பு கொண்டாரே தவிர மற்ற ஆறுபேரையும் தேவன் தம்முடைய பட்டியலுக்குள்ளோ ஆசீர்வாதத்திற்குள்ளோ கொண்டு வரவில்லை.

**''ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி கிறிஸ்துவே.'' (கலா 3 : 16).**
எனவே இன்றைக்கும் சபைகள் பல இருந்தாலும் நியாயப் பிரமாணமாகிய பாரம்பரியத்தைக் கைக்கொள்கிற அனைவரையும் கர்த்தர் புறக்கணித்துத் தள்ளுகிறார். அவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவதில்லை. பரிசுத்த ஆவியானவரின் கிருபை வரங்களும் அவர்களோடு சம்பந்தப்படுவதில்லை. அந்த ஒரு சந்ததி கிறிஸ்துவாய் இருக்கிற படியினால் பாரம்பரியங்கள் அத்தனையும் தள்ளிவிட்டு, நியாயப்பிரமாணங்கள் எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு கிறிஸ்துவையும், கிறிஸ்துவின் உபதேசங்களையும், அவர் மூலம் வருகிற வாக்குத்தத்தங்களையும் பற்றிக் கொள்கிறவர்களே புதிய ஏற்பாட்டு சபையாக இருக்கிறார்கள். எனவே கலாத்திய நாட்டு சபைகள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நியாயப் பிரமாணத்தின் பக்கம் திரும்ப வேண்டிய அவசியமில்லை.

ஈசாக்கைக் குறித்து தேவன் வாக்குத்தத்தமாக சொல்லிய பிற்பாடு 430 வருஷத்துக்கு பின்பு தான் நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டது. எனவே நியாயப் பிரமாணம் பிந்தியதாயிருக்கிறது. வாக்குத்தத்தம் முந்தியதாய் இருக்கிறது. பாரம்பரியங்களும் மனுஷ கற்பனைகளும் பிந்திய காலத்தில் தான் உண்டானது. பரிசுத்த ஆவியானவரோ உலக சிருஷ்டிப்பின் காலமுதல் இன்றைக்கு வரைக்கும் சபைகளிலும் உலகத்திலும் அசைவாடிக் கொண்டிருக்கிறார். எனவே முந்திய கிரியையாகிய பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தையும் அவருடைய போதகத்தையும் ஏற்றுக்கொண்டு பின்பு வந்த சடங்காச்சாரங்களையும் நியாயப் பிரமாணங்களையும் பாரம் பரியங்களையும் களைந்து விடுவோமானால் நாம் மெய்யான புதிய ஏற்பாட்டு சபையாக விளங்குவோம். பரிசுத்த ஆவியானவர் நம் மத்தியிலே உலாவி நம்மை ஆசீர்வதிப்பார்.

**6. விசுவாசத்தினால் தேவ புத்திரராகிறோம் :- (3 : 20-26) :-** இந்த வசனங்களிலே அப்போஸ்தலனாகிய பவுல் நியாயப் பிரமாணங்களையும் வாக்குத்தத்தங்களையும் ஒப்பிட்டு எழுதுகிறார்.

நியாயப் பிரமாணத்தையும் விசுவாசத்தையும் ஒப்பிட்டு எழுதுகிறார். இவ்விதமாய் ஒப்பிடும் போது நியாயப்பிரமாணத்தை ஒரு வகுப்பறையில் இருக்கிற உபாத்தியாருக்கு ஒப்பிடுகிறார். ஆனால் உபாத்தியார் கற்றுக் கொடுக்கிற பாடத்தை கிறிஸ்துவுக்கு ஒப்பிடுகிறார்.

நீங்கள் பரீட்சை எழுதப் போகும் போது உபாத்தியாரின் தடிமன் என்ன? அவருடைய உயரம் என்ன? அவர் நிறம் என்ன? அவருடைய கண்கள், மூக்கு, காதுகள், உடைகள் எப்படியிருக்கிறது என்று உபாத்தியாரைக் குறித்து பதில் எழுதுவீர்கள் என்று சொன்னால் நீங்கள் பரீட்சையிலே தேர்ச்சிப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் அந்த உபாத்தியார் வழி நடத்திக் கொடுத்த, அவர் பாடம் நடத்தின பாடங்களைக் குறித்து எழுதினால் நீங்கள் பரீட்சையிலே தேர்ச்சி பெறுவீர்கள். வாழ்க்கையிலே உயர்வு அடைவீர்கள்.

**''இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப் பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது''. (கலா 3 : 24)**
**''விசுவாசம் வந்த பின்போ நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே'' (3 : 25)**

ஆகவே பழைய ஏற்பாடு முழுவதும் சொல்லப்பட்ட நியாயப்பிரமாணமானது அல்லது இன்று புதிய ஏற்பாட்டு சபைகளிலிருக்கிற பாரம்பரியச் சடங்காரச்சாரங்களும் கூட நம்மை அவற்றிலேயே தரித்திருக்கச் சொல்லவில்லை. அவைகள் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற வழிநடத்துதலாய் இருக்கிறது. எனவே நீங்கள் இனிமேல் உபாத்தியாரை விட்டு விடுங்கள். உபாத்தியார் சொல்லிக் கொடுத்தப் பாடத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். நியாயப்பிரமாணத்தையும் பாரம்பரியங்களையும் விட்டு விடுங்கள். அவைகள் நமக்கு வழிகாட்டிக் கொடுக்கிற கிறிஸ்துவையும் கிறிஸ்துவினுடைய விசுவாசத்தையும் பற்றிக் கொள்ளுங்கள். இவ்விதமாய் நீங்கள் விசுவாசத்தைப் பற்றிக் கொண்டால்,
**''நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே''. (கலா 3 : 26).**

இப்படி நாம் விசுவாசத்தில் வளரும் போது கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு, கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டு அவைகள் மேல் விசுவாசம் வைத்து தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறோம். தேவனுடைய பிள்ளைகளானால் சுதந்தரருமாமே.

**7. விசுவாசமே நம்மை உயர்த்துகிறது. (3 : 27-29) :-** நியாயப் பிரமாணங்களையும், பாரம்பரியங்களையும் களைந்து விட்டு கிறிஸ்துவினிடம் வந்து விடுகிறவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய

முதல் காரியமே முழுக்கு ஞானஸ்நானம் தான்.

**''ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே''. (கலா 3 : 27)**


எனவே குழந்தை ஞானஸ்நானம் பாரம்பரியமான மனுஷ கற்பனை தான். திடப்படுத்தல் என்பதும் பாரம்பரியமான மனித கற்பனை தான். ஆனால் முழுக்கு ஞானஸ்நானமும் கர்த்தருடைய பந்தியும் புதிய ஏற்பாட்டு சபையின் மாறாத சத்தியம். இதற்கு நீங்கள் கீழ்ப்படிந்து மனந்திரும்பி முழுக்கு ஞானஸ்நானம் எடுத்து, கர்த்தருடைய பந்தியிலே நீங்கள் கலந்து கொள்கிற போது நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாய் மாறுவது மட்டுமல்ல. தேவனுக்குள்ளாக உயர்த்தப்படுகிறீர்கள்.

**''யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்''. (கலா 3 : 28)**

எனவே பாரம்பரியங்களும் மனுஷ கற்பனைகளும் சபைகளைத் துண்டாடுகிறது. கிறிஸ்தவர்களை பங்கு போட்டு கூறுபோடுகிறது. ஆனால் பரிசுத்த ஆவியானவருடைய சத்தியம் சகல மனிதனையும் ஆசீர்வதித்து உயர்த்தி விடுகிறது. அங்கே ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசயில்லை. முதலாளி, தொழிலாளி, என்ற பாகுபாடு இல்லை. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற இழிநிலையில்லை. எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். இதுதான் பரிசுத்த ஆவியானவருடைய புதிய ஏற்பாட்டு சத்தியம். எனவே பவுலின் இந்த கலாத்திய நிரூப சத்தியங்களை பரிசுத்த ஆவியானவருடைய துணையோடு கற்று அதற்கு நம்மை முழுவதும் ஒப்புக் கொடுப்போமானால் நம்மை இந்த விசுவாசம் உயர்த்தி விடுகிறது.

**''நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாயும், வாக்குத்தத்தத்தின் படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்''. (கலா 3 : 29).**

இப்படிப்பட்ட பரிசுத்த ஆவியானவருடைய உபதேசங்களுக்கு நாம் கீழ்ப்படிகிற போது நாம் ஆபிரகாமின் பிள்ளைகளாய் மாறி ஆபிரகாமுக்கு உண்டான அத்தனை ஆசீர்வாதங்களையும் ஆபிரகாமின் வழியாய், கிறிஸ்து இயேசுவின் வழியாய் நாம் பெற்றுக் கொள்கிறோம். அந்தப்படி விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்று கர்த்தருடைய வார்த்தை இந்த அதிகாரத்தை முடிக்கிறது.



# 8

# அடிமைத்தனமா ? சுயாதீனமா ?

(கலாத்தியர் 4ம் அதிகாரம் முழுவதும்)

கலாத்தியர் 4ஆம் அதிகாரம் முழுவதிலும் அப்போஸ்தலனாகிய பவுல் சபையாருக்குச் சொல்கிற ஆலோசனை என்னவென்றால் அங்கே சபையிலிருக்கிற மக்களை இரண்டு விதமாகப் பிரிக்கிறார்.

(1) கிறிஸ்துவுக்குள் சிறுபிள்ளைகள் (4 : 1)
(2) கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய வாழ்க்கையிலே வளர்ந்தவர்கள்.

பவுல் அப்போஸ்தலன் கலாத்திய நாட்டு சபைகளிலிருக்கிற அத்தனை விசுவாசிகளையும் சிறுபிள்ளைகள் என்றே திரும்ப திரும்ப அழைக்கின்றார். ஏனென்றால் ஒரு எஜமானுடைய வீட்டிலே சிறு பிள்ளைகளுடைய செயல்களை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அந்த எஜமானின் வீட்டில் இருக்கிற ரிக்ஷா ஓட்டுநர்கள், கார் டிரைவர்கள், வீட்டு வேலை செய்கிறவர்கள், சந்தைக்குப் போகிறவர்கள், சாமான் வாங்குகிறவர்கள் இப்படிப்பட்ட அடிமை வேலைக்காரரோடு இந்த சிறுபிள்ளைகளும் சேர்ந்து விளையாடிக் கொண்டும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டும் இருப்பார்கள். பழக்கவழக்கத்தில் பார்த்தால் அந்த எஜமானின் வீட்டிலிருக்கும் அடிமைகளுக்கும், எஜமானின் பிள்ளை களுக்கும் யாதொரு வித்தியாசமும் இருக்காது.

''பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும், அவன் சிறுபிள்ளையா-யிருக்குங்காலமளவும், அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை.'' (கலா 4 : 1).

**''தகப்பன் குறித்த காலம் வரைக்கும் அவன் காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்கிறான்''. (கலா 4 : 2).**

என்று பவுல் எழுதுகிறார். புதிய ஏற்பாட்டு சபைகளிலும் கூட சபையில் இருக்கிற மக்களை இப்படி இரண்டு விதமாகப் பார்க்க முடியும். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறவர்களும் உண்டு. கிறிஸ்துவுக்குள் புருஷர்களாயிருக்கிறவர்களும் உண்டு. பவுல் அப்போஸ்தலன் சபைக்குச் சொல்லுகிற ஆலோசனை என்னவென்றால் நீங்கள் காலமெல்லாம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கக் கூடாது. வளர்ந்து வளர்ந்து புருஷர்களாக வளர்ந்து விடவேண்டும் என்று சொல்லுகிறார்.

**''விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்''. (I கொரி 16 : 13).**

எனவே சபையார் இன்றைக்கு வேத வசனமாகிய பாலைப் பருகி பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று அந்நிய பாஷைகளைப் பேசி ஆவிக்குரிய ஜீவியத்திலும், பக்தி வாழ்க்கையிலும் வளர்ந்து வளர்ந்து கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கொப்பாக வரும் போது அவர்கள் புருஷத்துவ நிலைமையை அடைகிறார்கள். ஆனால் வளர்ச்சியில்லாதவர்கள் எந்நாளும் குழந்தைகளைப் போலிருப்பார்கள்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற நமக்கு மகா பெரிய போதனை வருகிறது. இன்றைக்கு புதிய ஏற்பாட்டு சபையிலே எங்கு பார்த்தாலும் கூட்டங்கள் நிரம்பி வழிகிறது. ஆனால் அந்த கூட்டத்திலிருக்கிற ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் வளர்ந்த புருஷத்துவமுடையவர்களா? அல்லது கிறிஸ்துவுக்குள் குழந்தைகளா?

என்னுடைய வீட்டிற்கு பாஸ்டர் வீடு சந்திக்க வரவில்லை. நான் வியாதியாயிருந்தேன், நான் ஏழையாயிருந்தபடியால் என்னைப் பாஸ்டர் கண்டு கொள்ளவே இல்லை. நான் தசமபாகம் கொடுக்காத படியால் பாஸ்டர் என்னை நேசிப்பதில்லை. இந்த மாதிரியான குறைகள் பேசி, குற்றங்கள் கண்டு பிடித்து, தூற்றித் திரிகிறவர்கள் கிறிஸ்தவர் களாயிருந்தாலும் சபையின் விசுவாசிகளா யிருந்தாலும் குணத்திலே அவர்கள் குழந்தைகள் தான். எந்நேரமும் அழுதுகொண்டு, ஏதாவது நோய் வாய்ப்பாட்டு, எந்நேரமும் படுக்கையில் கிடக்கிற பிள்ளைகளைக் குறித்து எவ்வளவு வேதனையான காரியம்.

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய நாட்டு சபைகளில் இருக்கிற விசுவாசிகள் அனைவரையும் பிள்ளைகள் என்றே அழைக்கிறார் (4 : 19) ''என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்'' என்று அவர் சொல்லுகிறார்.

இந்த நான்காம் அதிகாரத்திலே அடிமைத்தனம் என்ற வார்த்தை 12 முறை வருகிறதைப் பார்க்கிறோம். 4 : 1, 4 : 3, 4 : 7, 4 : 8, 4 : 9, 4 : 22, 4 : 23, 4 : 24, 4 : 25, 4 : 30, 4 : 30, 4 : 31, இவ்விதமாக 12 இடத்தில் அடிமைத்தனம் என்கிற வார்த்தை வருகிறது.

நாம் இரட்சிக்கப்படும் முன்னே சத்தியத்தை அறியுமுன்னே அடிமைகளாயிருந்தோம்.

**''பாவம் செய்கிற எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்'' (யோவான் 8 : 34)**

**''முதிர் வயதுள்ளவர்கள் மதுபானத்துக்கு அடிமையாகாத படிக்கு அவர்களுக்கு புத்திச் சொல்லு.'' (தீத்து 2 : 3)**

இவ்விதமாக இரட்சிக்கப்படுமுன்னே நாம் அநேகே காரியத்துக்கு அடிமைகளாயிருந்தோம்.

- ★ **குமாரனாகிய இயேசு நம்மை விடுதலையாக்கினார். (யோவான் 8 : 36)**
- ★ **பரிசுத்த ஆவியானவர் நம்மை விடுதலையாக்கினார். (II கொரி 3 : 17)**
- ★ **சத்தியம் நம்மை விடுதலையாக்கிற்று. (யோவான் 8 : 32).**

இவ்விதமாக பிதாவாகிய தேவனுடைய சத்தியம் நம்மை விடுதலையாக்கிற்று. குமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த பூலோகத்துக்கு இறங்கி வந்து நம்மை விடுதலையாக்கினார். பரிசுத்த ஆவியான வருடைய அபிஷேகத்தின் மூலம் நாம் விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம். இப்படியிருக்க மீண்டும் நாம் அடிமைத்தனத் திற்குட்பட்டால் எதன் மூலம் அடிமைத்தனத்திற்கு உட்படுகிறோம்? என்பதற்கு நான்கு சத்தியங்களை இந்த அதிகாரத்தில் அப்போஸ்-தலனாகிய பவுல் எழுதிக் கொண்டு போகிறார்.

**1. வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டிருந்தோம் :- (4 : 1-6) :** இன்றைக்கு அபிஷேகம் பெற்ற பெந்தெகோஸ்தே சபைகளில் கூட சில விஷயங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிற பெலவீனமான காரியங்களை நாம் பார்க்கிறோம். அதாவது நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக நல்ல நாள், கெட்டநாள் பார்த்தோம். நட்சத்திரங்களைப் பார்த்து வாழ்க்கையை நடத்தினோம். முகூர்த்த நேரம் பார்த்து திருமணம் வைத்தோம். அநேக பாரம்பரியமான சடங்குகளுக்கு நாம் அடிமைகளாயிருந்தோம். இதை பவுல் தெளிவாக எழுதுகிறார்.

**''அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களா-யிருந்தோம்''. (கலா 4 : 3)**

இன்றைக்கு கிறிஸ்தவர்கள் கொண்டு வருகிற கல்யாண பத்திரிகளைப் பார்த்தால் முகூர்த்த நாள் பார்த்து முகூர்த்த நேரம் பார்த்து திருமணம் வைக்கிறார்கள். மரக்கறிகளின் விலைகளும் கூடி விடுகிறது. மண்டபத்தின் வாடகையும் பெருகி விடுகிறது. அந்த நாளில் நாம் பயணம் செய்து போனால் பேருந்துகள் முழுவதிலும் கூட்டம் நிரம்பி வழிகிறது. பயணமே நமக்கு சலித்து களைத்து போனது போல் ஆகி விடுகிறது. ஏன் இந்த அவல நிலை என்று கவனித்துப் பார்த்தால், ஏன் தெருக்களிலும், பஸ்களிலும் கூட்டம் அலைமோதுகிறது என்று கேட்டால் இன்று முகூர்த்த நாள், உங்களுக்குத் தெரியாதா? ஆகவே மண்டபங்களிலும், பேருந்துகளிலும் கூட்டம் அலைமோதுகிறது என்று சொல்லுகிறார்கள். அதிர்ச்சி தரக்கூடிய உண்மைகளை இதிலிருந்து நாம் உணருகிறோம்.

ஆவிக்குரிய மக்களும் அபிஷேகம் பெற்ற ஜனங்களும் கூட இப்படி முகூர்த்த நாள் பார்ப்பதற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். பெயர் ராசி, ஜோசியம், பொருத்தம் போன்றவற்றை பார்க்கிறார்கள். கர்த்தர் நம்மை சந்தித்து அவர் இரத்தத்தால் விடுதலையாக்கியது மெய்யானால் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு நாம் விடுதலையாகி இருக்கிறோம் என்று பரிசுத்த ஆவியானவர் திட்டவட்டமாய்ச் சொல்லியிருக்கிறார். இதை வாசித்துக் கொண்டிருக்கிற நண்பர்களே! நீங்கள் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைகளாயிருக்கிறீர்களா? அல்லது முழுமையான சுயாதீனத்தை உங்கள் குடும்பத்திலே உங்கள் ஆவி ஆத்துமா சரீரத்திலே பெற்றுக் கொண்டிருக்கிறீர்களா? அது மட்டுமா பார்க்கிறார்கள்? ஜாதி பார்க்கிறார்கள். அந்த ஜாதிக்குள்ளே வம்சம் பார்க்கிறார்கள். எத்தனை பயங்கரமான வழிபாடுகளுக்கு இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகள் அடிமைகளாய் கிடக்கிறார்கள்! குமாரன் உங்களை விடுதலையாக்கியது உண்மையானால் நீங்கள் இவ்வுலகத்தின் வழிபாடுகளிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளுங்கள்.

**2. தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தோம். 4:7-21) :-** இரட்சிக்கப்பட்டு மனந்திரும்பின தேவனுடைய பிள்ளைகளுக்குள்ளே பரிசுத்த ஆவியானவரைக் கர்த்தர் ஊற்றியிருக்கிறார். இப்பொழுது நம்முடைய ஆண்டவரைப் பார்த்து அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக பிதாவின் ஆவியானவர் நமக்குள் இருக்கிறார்.

**"ஆகையால் இனி நீ அடிமைகளாயிராமல் புத்திரனாயிருக்கிறாய், நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய். நீங்கள் தேவனை அறியாமலிருந்த போது, சுபாவத்தின் படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள். இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான**

அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?'' (கலா 3 : 7, 8,9)

அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே கிறிஸ்தவ சபைகளுக்குள் இருக்கிற பயங்கரமான அடிமைத்தனத்தை அவர் சுட்டிக் காட்டுகிறார். இரட்சிக்கப்படுவதற்கு முன்னே தேவர்களல்லாதவர்களுக்கு நாம் அடிமைப்பட்டிருந்தோம். இப்பொழுதோ அவைகள் எல்லாவற்றிலு மிருந்து விடுதலை பெற்று தேவனை அப்பா பிதாவே என்று அழைக்கும்படியான புத்திர சுவிகாரத்தின் ஆவியைக் கர்த்தர் நம் உள்ளத்திலே ஊற்றியிருக்கிறார். இப்படியிருக்கிற போது இயேசுவைத் தவிர எந்த அப்போஸ்தலர்களையோ, எந்த தீர்க்கதரிசிகளையோ, எந்த முற்பிதாக்களையோ நாம் நோக்கி விண்ணப்பம் பண்ணக்கூடாது. ஜெபம் பண்ணக்கூடாது. அவர்களுடைய பெயர்களைச் சொல்லி எந்த திருநாளோ பண்டிகையோ ஆசரிக்கக்கூடாது. ஏனென்றால் தேவர்களல் லாதவர்களுக்கு இனி நாம் அடிமைகள் அல்ல.

கலாத்திய நாட்டு சபைகள் இப்பொழுது விருத்தசேதனத்திற்கு திரும்புகிற போது மீண்டுமாக அடிமைத்தனத்திற்குத் திரும்புகிறார்கள் என்று அவர்களைப் பவுல் எச்சரிக்கிறார். அன்பானவர்களே! பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரா? என்ற இந்த பாடத்தின் சத்தியத்தை நீங்கள் படிக்கிற போது நீங்கள் பாரம்பரியங்களுக்குத் திரும்பினால் பாரம்பரியம் எஜமானாக உங்களை அடிமைப்படுத்தி விடும். இன்றைக்கு இந்த பாரம்பரியத்தின் பெயராலே அநேக கோடிக்கணக்கான பணச்செலவும், வீண் பிரயாசங்களும் விரயமாகிக் கொண்டிருக்கிறது. பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொண்டு கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்கு ஆயத்தப்படுவோமாக!

**3. நியாயப் பிரமாணத்துக்கு நாம் அடிமைகளல்ல : -(4 : 22-25) :-** கலாத்திய நாட்டு சபை இரட்சிக்கப்பட்டு அபிஷேகம் பெற்ற பிற்பாடு கள்ளப்போதர்களால் வஞ்சிக்கப்பட்டு இப்பொழுது நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படியாய் போய் விட்டார்கள். நியாயப்பிரமாணத்துக்கு ஒருவர் திரும்புகிறபோது அந்த நியாயப் பிரமாணம் அவரை அடிமைப்படுத்துகிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் திட்டமாய் சொல்லுகிறார்.

**''நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப் பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள்''. (கலா 4 : 21)**

புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் நியாயப்பிரமாணத்திற்கு அடிமைப்படக்கூடாது என்பதற்கு இங்கே ஒரு உதாரணத்தை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. ஒருவன் அடிமையானவளிடத்தில்

பிறந்தவன். ஒருவன் சுயாதீனமுள்ளவனிடத்தில் பிறந்தவன். அடியானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின் படி பிறந்தான். சுயாதீனமுள்ளவனிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்ததின் படி பிறந்தான். இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்.

அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய் மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது, அது ஆகார் என்பவன் தானே. மேலான எருசலேமா சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள். அந்த ஆகார் தன் பிள்ளைகளோடேகூட அடிமைப்பட்டிருக்கிறதைப் போல நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்கிற அத்தனை பேரும் அந்த நியாயப் பிரமாணத்துக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் திட்டமும் தெளிவுமாய் சொல்லுகிறார். எனவே பாரம்பரியத்துக்கும் நியாயப்பிரமாணத்தின் பழைய ஏற்பாட்டு சட்டங்களுக்கும் கொஞ்சம்கூட நாம் செவி கொடுக்கவே கூடாது.

**4. பாவத்துக்கு அடிமை :- (4:30-32)** கடைசியாக பரிசுத்த ஆவியானவர் சொல்கிறார்: விசுவாசிகளுக்கு வருகிற நான்காவது அடிமைத்தனம் பாவத்துக்கு அடிமைப்படுகிற அடிமைத்தனம்.

**''அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயாயிருப்பதில்லை; ஆகையால் அடிமையான வளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு என்று சொல்லுகிறது'' (கலா 4:3)** குறித்த காலம் வந்தபோது ஆகாரும் இஸ்மவேலும் ஈசாக்கை விட்டுப்பிரிக்கப்பட்டார்கள். சாராளை விட்டுத் தள்ளப்பட்டார்கள். ஆபிரகாமின் பிள்ளையாக இருந்தாலும் ஆபிரகாமின் சொத்திலே சரிபங்கு அவனுக்கு கொடுக்கப்படவில்லை. சில அப்பங்களும் ஒரு துருத்தி தண்ணீருமாக பெயர்செபாவின் வனாந்தரத்திலே துரத்தப்பட்டான். ஏனென்றால் அடிமை ஆபிரகாமின் வீட்டிலே நிலைத்திருக்க முடியாது. அடிமை ஆபிரகாமின் ஆசீர்வாதத்திலே பங்கு பெற்றுக் கொள்ள முடியாது. இதே போலவே தான் இரட்சிக்கப்பட்டிருந்தாலும் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தாலும் பாவத்துக்கு அடிமையாக அந்தரங்க வாழ்க்கையிலே ஏதாவது ஒரு பாவத்துக்கு அடிமையாயிருந்தாலும் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு புறம்பாக நாம் தள்ளப்படுகிறோம்.

**''இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்''. (கலா 4:31)**

இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை நண்பர்களே! உங்கள் இரகசிய வாழ்க்கையிலும் வெளியரங்கமான வாழ்க்கையிலும் ஏதாவது பாவம் இருக்கிறதா? பாவத்தின் அடிமைத்தனம் இருக்கிறதா? குறிப்பிட்ட இடத்திலே நீங்கள் கட்டுண்டு கிடக்கிறீர்களா?



# 9

# மாம்சமா ? ஆவியா ?

(கலா 5 : 1-26) வரை

கலாத்தியர் 5-ஆம் அதிகாரத்திலே நியாயப் பிரமாணத்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலைப் பெற்றிருக்கிற புதிய ஏற்பாட்டு சபை எப்படிப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்கு ஏழு குறிப்புகளை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிக் கொண்டு போகிறார்.

**1. கிறிஸ்தவ வாழ்க்கை அது சுதந்தரமானது (5 : 1-6) :**

ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்''. (கலா 5 : 1)

என்று அப்போஸ்தலனாகிய பவுல் சபைக்கு எழுதுகிறார்.

ஏனென்றால் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அது சுயாதீனமுள்ளது. ரோமப் பேரரசு ஒரு முறை தன்னுடைய தேசத் துரோகி ஒருவனைத் தண்டிக்கும் படியாக தூக்குத் தண்டனை கொடுக்கும் படியாக சிறையில் இருந்து அவனை அழைத்து வர இரண்டு காவலர்களை அனுப்பினார்கள். இரண்டு காவலர்களிலே ஒருவனுடைய கையிலே அந்தக் கைதியை விலங்கிட்டுக் கொண்டு வரக்கூடிய விலங்கு இருந்தது. அந்த இரண்டு காவலர்களும் போய் சிறையைத் திறந்தார்கள். அவனை அழைத்துக் கொண்டு வருவதற்காக போய்க் கொண்டிருந்தார்கள். கைதியை விலங்கிட்டு பூட்ட வேண்டிய இந்த போலீஸ்காரர் தன் கையிலிருந்த விலங்கை விளையாட்டுத் தனமாக வைத்து விளையாண்டு கொண்டிருந்தார். அந்த விலங்கை கையில் வைத்து அதை தொட்டுக்

கொண்டும் விளையாடிக் கொண்டும் இருந்தார். அந்த விலங்கு எப்படியிருக்கும்? அதை தன் கைகளிலே மாட்டிக் கொண்டால் எப்படியிருக்கும்? என்று விளையாட்டுத் தனமாக அந்த போலீஸ்காரர் நினைத்து அந்த விலங்கை தன் கைகளிலே சொருகி அதையும் இதையும் தொட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று விலங்கினுடைய தானியிங்கி பொத்தானை தொட்டு விட்டார். அந்த விலங்கு உடனே அந்த காவாலாளர் கையை பூட்டி விட்டது. இப்பொழுது குற்றவாளியைக் கைது செய்ய வேண்டிய போலீஸ்காரரே குற்றவாளி போல விலங்கிலே மாட்டிக் கொண்டார்.

அன்பானவர்களே! இன்று கிறிஸ்தவ ஊழியர்களும் விசுவாசிகளும் பாவத்தோடும் பாவத்தினால் வருகிற தேவ சாபம், தேவ கோபம், தேவ தண்டனையோடும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். சிறிய பாவமானாலும் பெரிய பாவமானாலும் விளையாட்டுத்தனமாக தேவனுடைய வார்த்தையோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். பிற்பாடு என்ன நடந்தது தெரியுமா? சிறைக்குள்ளிருந்த கைதி விடுதலையாக்கப்பட்டான். சுயாதீனமாய் இருந்த அந்த போலீஸ்காரரோ அந்த தூக்கு தண்டனையில் தண்டிக்கப்பட்டார். அப்போஸ்தலனாகிய பவுல் இதைத்தான் புதிய ஏற்பாட்டு சபைக்கு எழுதுகிறார். கிறிஸ்து உங்களை பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும், வியாதியிலிருந்தும் விடுதலை செய்திருக்கிறார். ஆகவே நீங்கள் திரும்பவும் அடிமைத்தனத்திற்கு உட்படாமல் கிறிஸ்து உங்களுக்குக் கொடுத்த சுயாதீனத்திலே நிலை கொண்டிருங்கள். கிறிஸ்து உங்களுக்குக் கொடுத்த சுயாதீனத்தைக் காத்துக் கொள்ளுங்கள்.

**2. கிறிஸ்தவ வாழ்க்கை அது ஒரு ஓட்டப்பந்தயம் :- (5 : 7) :-** கிறிஸ்தவ வாழ்க்கை ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பானது. ரோமாபுரி பேரரசர்கள் மத்தியிலே மார்ஸ் மேடையிலே ஓட்டப்பந்தயம் நடக்குமாம். அவ்விதமாய் நடந்து கொண்டிருக்கிற ஓட்டப்பந்தயத்திலே ஆரம்பமும் உண்டு. முடிவும் உண்டு. ஒரே நேரத்தில் பத்து பேர் ஓடத்துவங்குவார்கள். வெற்றியாய் ஓடி வருகிற முதல் மனிதனுக்கு பரிசு கிடைக்கும். முடிசூட்டுவிழா நடக்கும்.

பத்து பேரும் அந்த பந்தய ஓட்டத்திலே ஓடுகிற போது இவர்களுடைய உறவினர்களும் நிற்பார்கள். இவர்களுடைய எதிரிகளும் நிற்பார்கள். அங்கே உறவினர்கள் என்ன செய்வார்கள் என்றால் நீ நன்றாய் ஓடுகிறாய், உனக்குத் தான் வெற்றி, உனக்கு தான் பரிசு கிடைக்கப்போகிறது என்று சொல்லி உற்சாகப்படுத்திக் கொண்டிருப்பார்கள். ஆனால் அதே வேளையிலே ஓடுகிறவனின் எதிரிகள் ஓடுகிறவனுக்கு எதிராக அந்த ஓட்டப்பந்தய

மைதானத்துக்குள்ளே ஆப்பிள் போன்ற தோற்றத்தில் உள்ள பொன் உருண்டைகளை உருட்டி விடுவார்கள். ஓட்டப்பந்தயத்தில் ஓடிக் கொண்டிருக்கிறவன் இலக்கை நோக்கி ஓடுகிறவன் பரிசு பெற்று விடுவான். ஆனால் தன் கண்களுக்கு முன்னால் தரையிலே ஓடிக் கொண்டிருக்கிற பொன் உருண்டைகளை எடுக்கும்படி அவன் குனிந்து எடுத்தால் பரிசு பொருளையும் இழந்து விடுவான். எடுக்கிற பொருளும் உண்மையான பொன் அல்ல. மேலே முலாம் பூசப்பட்ட பொன்னாக இருக்கும். உள்ளே இரும்புக் குண்டாக இருக்கும். இவ்விதமாக கண்ணால் கண்ட பொன்னும் மாயையாகி போய் விடும். தூரத்திலிருக்கிற இலக்கையும் தவற விடுவார்கள்.

இதை வைத்து தான் அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்குச் சொல்கிறார்.

**"நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போக உங்களுக்குத் தடை செய்தவன் யார்"? (கலா 5 : 7)**

கள்ளப் போதனை என்று சொல்லக்கூடிய நியாயப் பிரமாணத்தையும், விருத்த சேதனத்தையும் உங்கள் கண்களுக்கு முன்பாக நிறுத்திவிட்டு உங்கள் ஓட்டப்பந்தயத்தின் இலக்கைத் தவற விடவும், அதே வேளையில் தற்காலிகமாய் தோன்றுகிற மின்மினிப் பூச்சு போன்ற கவர்ச்சிகரமான கள்ளப் போதனைகளை நீங்கள் நம்பி பந்தயப் பொருளை இழக்கக்கூடாது. உங்கள் ஓட்டப்பந்தயத்தில் நன்றாகவே ஓடுங்கள் என்று பவுல் கலாத்திய சபைக்கு எழுதுகிறார்.

### 3. கிறிஸ்தவ வாழ்க்கை அது பிசைந்த மாவு (5 : 8,9) :-

நம்முடைய வீடுகளிலே அப்பம் செய்வதற்காக மாலை வேளையிலே அரிசி மாவையோ, உளுந்த மாவையோ, கோதுமை மாவையோ அரைத்து ஒரு பாத்திரத்திலே வைத்திருப்பார்கள். சப்பாத்தி, புரோட்டா போன்ற பதார்த்தங்களை செய்வதற்கு மாவு புளிக்க வேண்டிய அவசியமில்லை. புளிப்பில்லாத அந்த பிசைந்த புதிய மாவைக் கொண்டு சப்பாத்தி, புரோட்டா, ரொட்டி போன்ற நல்ல பதார்த்தங்களைச் செய்வார்கள்.

பிசைந்த மா என்பது பரிசுத்த ஜீவியத்தைக் குறிக்கிறது. புளித்த மா என்பது பரிசுத்தத்தைக் கெடுக்கிற அசுத்தத்தைக் குறிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது கள்ளப்போதனைகள் புளித்த மாவிற்கு ஒப்பாயிருக்கிறது. தவறான உபதேசங்களை நாம் ஏற்றுக் கொள்ளும் போது நம்முடைய பரிசுத்த ஜீவியம் குழம்பி விடும். பரிசுத்தத்தோடு அசுத்தம் கலக்கும்போது இனி மீண்டும் பரிசுத்தம் எது அசுத்தம் எது எனப்பிரிக்க முடியாத அளவுக்கு

சுயநீதி பெருகி இருதயக் கடினம் உண்டாகி முடிவிலே கிறிஸ்தவ வாழ்க்கையின் உன்னத பரிசுத்தத்தை இழந்து போக வேண்டியதாகும். இதை அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு எச்சரிக்கிறார்.

கலாத்திய சபையை குழப்பியடித்த புளித்த மா என்பது விருத்தசேதனம் என்கிற உபதேசமாகும். இந்த விருத்தசேதனம் செய்தலைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது.

**''கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதன மில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்''. (கலா 5 : 6).**
**''கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்'' (கலா 6 : 15).**

எனவே உபதேசத்தின் புளித்த மாவு எந்த விதத்திலும் சபைக்குள்ளே நுழைய நாம் அனுமதிக்கவே கூடாது. இந்த கடைசி கால சபையை கர்த்தர் தமது வசனத்தைக் கொண்டே கட்டியெழுப்புகிறார். ஆனால் வசனத்தைக் கொண்டு கட்டப்படுகிற சபையிலே வசனத்தை அசட்டை பண்ணிவிட்டு ஆவியானவருடைய பெயராலே அநேக குழப்பமான கள்ளத்தீர்க்கதரிசனங்களும், முகஸ்துதியான வெளிப்பாடுகளும், அந்நிய மார்க்கத்தாரைப் போல குறிசொல்லுதலும், ஜனங்களை உற்சாகப்படுத்துவதற்காக உலக ஞானத்தோடு கூடிய பிரசங்கங்களும் போன்ற புளித்த மாவு இந்த கடைசி காலத்திலே தாராளமாக சபைக்குள்ளே புகுந்து விடுகிறது.

இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களிலே வேதபாரகர், பரிசேயர் என்பவர்களின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று ஆண்டவர் ஏற்கனவே சொல்லியிருக்கிறார். அப்போஸ்தலர்கள் நாட்களிலும் அதே புளித்த மாவு கலாத்திய நாட்டு சபைகளை குழப்பியடித்தது. இந்த கடைசி காலத்திலே உங்களுக்கும் எனக்கும் கூட கள்ளப்போதனைகளும், கள்ளத்தீர்க்க தரிசனங்களும், புளித்த மாவாக பெலவீனமான விசுவாசிகளை, சத்தியத்தில் பெலப்படாத ஆத்துமாக்களை குழப்பக்கூடும். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கொரு தெளிவைக் கொடுத்து புதிய ஏற்பாட்டு சத்தியங்களிலும், உபதேசங்களிலும் ஸ்திரமாய் இருக்கும்படி கர்த்தர் உங்களுக்கு தெளிந்த புத்தியைக் கொடுப்பாராக.

**4. கிறிஸ்தவ வாழ்க்கையில் கலக்கம் கூடாது (5 : 10-12) :-** அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய நாட்டு சபைகளுக்கு எச்சரிப்புக் கொடுத்த போது தெளிந்த நீரோடை போல் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் ஜீவிக்க வேண்டும் என்று சொல்கிறார்.

ஏனென்றால் தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே நமக்குக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பமே தெளிந்த புத்தி தான். (லூக்கா 15 : 17, லூக்கா 8 : 35, II தீமோ 1 : 7). இப்படியிருக்க கிறிஸ்தவ ஜீவியத்திலே கலக்கம் கூடவே கூடாது என்று எழுதுகிறார்.

**''உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்''. (கலா 5 : 10)**

**''உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும்'' (கலா 5 : 12)**

அன்பானவர்களே! கிறிஸ்தவ வாழ்க்கையில் கலக்கம் கூடவே கூடாது. நம்முடைய தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். இதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது கலக்கம் வருவது கள்ளத்தீர்க்கதரிசியின் ஆவியாகும். சமாதானம் வரும் என்று சொன்னால் அது பரிசுத்த ஆவியானவரின் ஊழியம். I கொரி 14 : 31, I தெச 5 :23. எனவே உங்களுக்கு கலக்கம் தேவையேயில்லை. யாருடைய உபதேசங்களையும், பிரசங்கங்களையும் கேட்கும் போது உங்கள் ஆவியிலே கலக்கம் வரும் என்று சொன்னால் அது கள்ளப்போதனை என்பதை திட்டவட்டமாய் தெரிந்து கொள்ள வேண்டும். உங்களைக் கலக்கும் படியாக பிசாசு ஏற்படுத்தியிருக்கிற கள்ள உபதேசங்களாகும். நீங்கள் உடனே அந்த இடத்தை விட்டு எழும்பி ஓடிச் சென்று உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் கலங்க வேண்டிய அவசியம் வராது.

**5. விசுவாசியின் உன்னத பிரமாணம் அன்பு (5 : 13-15) :-** பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணமானாலும் புதிய ஏற்பாட்டு இயேசு கிறிஸ்துவின் பிரமாணமானாலும் அவை எல்லாவற்றிலும் மேலான ஒரு பிரமாணம் சகோதர அன்பு.

**''சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்''. (கலா 5 : 13)**

**''உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்''** (கலா 5 : 14)

**''நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள்,**

அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கை-யாயிருங்கள்''. (கலா 5 : 15).

நியாயப் பிரமாணத்தின் பத்து கட்டளைகளில் முதல் நான்கு கட்டளைகள் நாம் தேவனிடத்தில் அன்பு கூருவது எப்படி என்று சொல்கிறது. அடுத்த ஆறு கட்டளைகளும் நம் அருகில் இருக்கிற சகோதரர்களிடத்திலே அன்பு கூறுவதைப் பற்றி சொல்லியிருக்கிறது. ஆகவே தேவனிடத்தில் அன்பாயிருக்கிற முதல் நான்கு கட்டளைகளைச் சொல்லி விட்டு நம் சகோதரர்களிடத்தில் அன்பாயிருக்கிற ஆறு கட்டளைகளைக் கர்த்தர் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் தேவன் நம்மிடத்தில் எதிர் பார்க்கிற நியாயப்பிரமாண காரியம் என்னவென்றால் தேவனை நாம் நேசிப்பதை விட ஒன்பது மடங்கு நம் அருகில் இருக்கிற சகோதரரையும் நாம் நேசிக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால் யூதேயா தேசத்திலிருந்து வந்த யூத மார்க்கத்தார்கள் கலாத்திய சபையை ஊக்குவித்து, அப்போஸ்தலனாகிய பவுலின் மேன்மையான அழைப்பையும் ஊழியத்தையும் அசட்டை செய்துவிட்டு பவுல் ஒரு தேவ மனிதனல்ல என்று தங்கள் போதனைகளால் ஆரம்ப விசுவாசிகளான கலாத்திய சபை விசுவாசிகளை குழப்பியடித்தார்கள். ஒருவரையொருவர் கடித்து பட்சித்தார்கள். பரிசுத்த ஆவியானவர் இந்த வசனம் மூலம் நம்மோடு பேசிக் கொண்டிருக்கிறார். நம் அருகில் இருக்கிற சகோதரர்களிடத்திலே அன்பு கூர்ந்து அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களை தூக்கி விடுவது தான் நியாயப்பிரமாணம் சொல்லுகிற பழைய ஏற்பாட்டு உபதேசமும் இயேசு கிறிஸ்து சொல்லுகிற புதிய ஏற்பாட்டு உபதேசமாகும்.

## 6. விசுவாசியின் மிகப்பெரிய எதிரி மாம்சம் (5 : 16-21)

அப்போஸ்தலனாகிய பவுல் நியாயப் பிரமாணத்தின் விருத்தசேதன உபதேசத்தைக் கொண்டு வருகிற கள்ளப் போதகர்களைக் குறித்துச் சொல்லும் போது இந்த உபதேசங்கள் எல்லாமே மாம்சத்தின் கிரியைகளாயிருக்கிறது, ஏனென்றால் விருத்தசேதனம் என்பது மாம்சத்தை வெட்டி சுத்திகரிப்பது தான். இந்த மாம்சத்தின் கிரியை விசுவாசியின் மிகப்பெரிய சத்துரு என்று சொல்கிறார். தொடர்ந்து மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து பதினேழு காரியங்களை அவர் எழுதிக் கொண்டு போகிறார். மாம்சத்தின் கிரியைகள் ஒழிந்து கொண்டிருக்க முடியாது. மாம்சத்தின் கிரியை ஒருவருக்குள் இருக்கும் வரைக்கும் அது வெளியரங்கமாகவே இருக்கும்.

''மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காம விகாரம்,

**விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்கும் சொல்லுகிறேன்.'' (கலா 5 : 19-21)**

அன்பானவர்களே! பரிசுத்த ஆவியானவர் பவுல் மூலமாய் நமக்குச் சொல்லுகிறார். நாம் மாம்சத்திற்கு ஏற்றபடி நடப்போம் என்று சொன்னால் ஆவியானவரால் நடத்தப்பட முடியாது. ஏனென்றால் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும், மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. விருத்தசேதனம் மாம்ச உபதேசம். கிறிஸ்துவின் உபதேசம் பரிசுத்த ஆவியானவருடைய உபதேசம். நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டால் அது மாம்சத்தின் கிரியை. பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிற புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு நீங்கள் கீழ்ப்படிய முடியாது. எனவே பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரா? மாம்சத்தின் கிரியையா? அல்லது ஆவியின் கனியா என்று வருகிறபோது நீங்கள் உரத்த சத்தமிட்டு : எனக்கு மாம்சத்தின் கிரியை வேண்டாம். ஆவியானவருடைய வழி நடத்தலே எனக்கு வேண்டும் என்று சொன்னால் உங்களுக்குள்ளே ஆவியின் கனிகள் தழைத்து பூத்து செழித்து காய்த்து கனியாக மாறும். **''கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்''. (கலா 5 : 24). எனவே சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவோடு உங்கள் சரீரத்தையும், உங்களுடைய ஆசை இச்சைகளையும் அறைந்து விடுங்கள். அப்பொழுது உங்களுக்குள்ளே ஆவியானவருடைய கனிகள் தழைத்து துளிர்க்கும்.**

**7. தேவனுடைய குணம் ஆவியின் கனிகள் (5 : 23-26) :-** அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு எழுதுகிற போது மாம்சத்தின் உபதேசங்களாகிய பழைய ஏற்பாட்டு உபதேசங்களையும் நியாயப்பிரமாணங்களையும் விருத்த சேதனத்தையும் விட்டு விட்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று அந்த ஆவியானவர் உங்களுக்குள்ளே துளிர்விட இடங்கொடுத்தால் ஆரோனுடைய பட்டுப்போன அந்த குச்சி ஒரே நாள் இரவிலே துளிர்த்து பூத்து காய்த்து வாதுமை கனிகளை கொடுத்தது போல உங்களுடைய ஜீவியம் ஒருவேளை கர்த்தருக்குள் வருவதற்கு முன்னால் பட்ட மரம் போல இதயத்திலே ஈரமில்லாமல் வார்த்தையிலே கனியில்லாமல் எப்போதும் கோபமும் மூர்க்கமும் முன் கோபமாய் இருந்தாலும் பரிசுத்த

ஆவியின் அபிஷேகம் உங்களுக்குள்ளே வருகிற போது நீங்கள் ஆவியின் கனியுள்ளவர்களாய் மாறுவீர்கள்.

**''ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை''. (கலா 5 : 22, 23)**


இந்த ஆவியின் கனி ஒன்பதையும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) மேல் நோக்கிய கனி. அதாவது நாமும் நம் தேவனும் ஐக்கியமாயிருக்கிறபோது அங்கே நம் இதயத்தில் அன்பு, சந்தோஷம், சமாதானம் ஆகிய மூன்று கனியின் சுவை இருக்கும்.

(2) இரண்டாவதாக ஆவியின் கனி வருகிற போது நமக்கு வலப்புறமும், இடப்புறமும் இருக்கிற சகோதரரோடு பழக நீடிய பொறுமை, தயவு, நற்குணம் என்கிறதான கனிகள் காணப்படும்.

(3) மூன்றாவதாக நம்முடைய இருதயத்திற்குள்ளே மறைந்திருக்கிற கடைசியான மூன்றாவது கனி விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இந்த மூன்று கனிகளும் நம் இதயத்துக்குள்ளே மறைந்து நமக்கு சுவை கொடுத்துக் கொண்டேயிருக்கும்.

இப்படிப்பட்ட ஆவியின் கனிகளைக் கொடுத்து புதிய ஏற்பாட்டு சபையில் மணம் வீசும் படியாக கர்த்தர் விரும்புகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாட்களிலே அவர் சபைக்கு வருகிற போது சபையிலே என்னத்தைத் தேடி வருகிறார்? நம்மிடத்திலே ஆவியின் கனியைத் தேடி வருகிறார்.



# 10

# மாம்சமா? சிலுவையா?

(கலாத்தியர் 6ம் அதிகாரம்)

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய நாட்டு சபைகளுக்கு எழுதும் போது இந்த 6-ஆம் அதிகாரத்திலே தலைமையுரையாக புதிய ஏற்பாட்டு சபை எப்படியாக நடந்து கொள்ள வேண்டுமென்று எட்டு சத்தியங்களை வரிசையாக எழுதுகிறார். அதை நாம் இந்த அத்தியாயத்தில் தியானிக்கப் போகிறோம்.

இராணுவ உயர் அதிகாரி ஒருவர் அளித்த விருந்தொன்றிலே நீண்ட அனுபவமிக்க படைவீரர் அன்றைய பேச்சாளரில் ஒருவராக அறிமுகப்படுத்தப்பட்டார். அந்த விருந்துக்கு தலைமை தாங்கிய இராணுவ அதிகாரி தன் அறிமுக உரையில் பேசும் போது இன்று இந்த நன்நாளிலே வெற்றியைக் கொண்டாடக்கூடிய இச்சிறப்பு நாளிலே உங்களுக்கு நான் ஒரு வீரனைப் பற்றிக் குறிப்பிடப் போகிறேன். நம் நாட்டுக்காக நடந்த போரிலே அந்த வீரன் தன்னுடைய ஒரு காலை இழந்தவர் என்று தன் உரையிலே அந்த அதிகாரி பேசினார்.

அடுத்த நிமிடம் இராணுவ வீரர்கள் மத்தியிலிருந்து ஒரு வீரன் எழும்பினான். தன் இருக்கையை விட்டு எழுந்து மேடையை நோக்கி நடந்து வந்தான். செயற்கைக் கால் பொருத்தப்பட்ட அவன் மெதுவாக நடந்து வந்தான். இராணுவ அதிகாரிகளும் இராணுவ வீரர்களும் பலத்த கை தட்டலோடு அந்த வாலிபனை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். அந்த வாலிபன் ஒலிபெருக்கியின் மைக் முன்பாக போய் நின்றபோது தன்னை வாழ்த்திப் பேசிய வாழ்த்துரையை ஏற்றுக்கொள்ளும் படியான ஏற்புரை செய்ய வாயைத்திறந்தான். வாயைத் திறந்து அவன்

சொல்லக்கூடிய வார்த்தைகள் அதிர்ச்சி தரக்கூடியதாயிருந்தது. தலைமை தாங்கிய இராணுவ உயர் அதிகாரி என்னைப் புகழ்ச்சியாய்ச் சொல்லும்போது நான் போரிலே ஒரு காலை இழந்தேன் என்று சொன்னார். அது தவறு. முழுக்க முழுக்க சுத்தப் பொய் என்று அவன் சொன்னான்.

நம் நாட்டிற்காக நடந்த போரிலே நான் எதையும் இழக்க வில்லை. ஏனெனில் நாங்கள் போர்வீரர்களாகச் சேர்ந்து போர்க்களம் சென்றோம். ஆனால் போர்க்களம் செல்வதற்கு முன்பதாக நாங்கள் எங்களையும், எங்களுக்குண்டான எல்லாவற்றையும் நம் நாட்டிற்காகக் கொடுத்து விட்டோம், இழந்து விட்டோம். அப்படியிருக்கிற போது போரிலே நான் எப்படி காலை இழக்க முடியும்? நான் என்னையே ஏற்கனவே இழந்து விட்டேன். ஆனால் நான் இப்பொழுது ஜீவிப்பது நம் நாட்டின் மேல் கொண்ட அன்பினாலே இருக்கிறேன் என்று சொன்ன போது கூட்டத்தின் மத்தியிலே எல்லா வீரர்களுக்கும் எழுச்சிப் பொங்க கரவொலி ஓங்க பலத்த கை தட்டலோடு அந்த இராணுவ முகாம் மிகச் சிறப்பாக நடந்தது.

மெய்யாகவே ஒரு கிறிஸ்தவன் சிலுவையிலே தன்னை அறைய ஒப்புக்கொடுத்தவன் இப்படிப்பட்ட அர்ப்பணிப்போடு தான் காணப்படவேண்டும். தன்னையும் தனக்குண்டான எல்லாவற்றையும் தேவனுக்காகக் கொடுத்த பிற்பாடு கிறிஸ்துவைப் பின்பற்றி ஜீவிக்கும் போது அவன் இழந்து போவதற்கு ஒன்றுமேயில்லை. இந்த ஆறாம் அதிகாரத்திலே அப்போஸ்தலனாகிய பவுல் புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் ஒவ்வொருவரும் இப்படித்தான் ஜீவிக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்கிறார்.

**1. ஆவிக்குரியவர்களாக நடந்து கொள்ளுங்கள் :- (6 : 1)** **"சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள், நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு". (கலா 6 : 1)**

இங்கே சபையிலிருக்கிற மற்றவர்களை சீர்பொருந்தப் பண்ணுங்கள் என்று சொல்லுகிற இடத்திலே அதற்கு சரியான விளக்கமாக வேதப்பண்டிதர்கள் என்ன சொல்கிறார்கள். எலும்பு முறிந்த போது முறிந்த எலும்புகளை எடுத்து கட்டுவிப்பது போல ஊழியம் செய்யப்படவேண்டும் என்று சொல்லுகிறார்கள். சீர் பொருத்தப் பண்ணுங்கள் என்றால் முறிந்த எலும்புகளை திரும்ப எடுத்து கட்டுவதாகும். எலும்பு முறிந்தவனுக்கு அந்த வேளையிலே தாங்க முடியாத ரண வேதனை எடுக்கும். எலும்பை எடுத்துக் கட்டுகிறவன் மிகுந்த தேவ ஞானத்தோடு எடுத்துக் கட்டவேண்டும். இல்லாவிட்டால்

சரியாக எலும்புகள் பொருத்தப்படாத பட்சத்திலே தவறாய் பொருத்தப்படும் என்று சொன்னால் கைகள் வளைந்திருக்கும் அல்லது கால்கள் நெளிந்திருக்கும். நடக்கும் போது சாய்த்து நடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். எனவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் கை ஒடிந்தவனுக்கு, கால் ஒடிந்தவனுக்கு சாந்தமுள்ள ஆவியோடு ஊழியம் செய்யுங்கள். பிற சகோதரர் ஏதோ ஒரு விஷயத்தில் சோதிக்கப்பட்டால் அதே சோதனையால் நீங்களும் சோதிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள் என்று சொல்லுகிறார்.

தென் தேசத்து பிரசங்கியார்களில் புகழ்பெற்ற ஒருவர் தான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக பயங்கர குடிகாரனாக இருந்தார். அவர் குடிபோதையிலிருந்து ஆச்சரியமாக மனந்திரும்பினார். இரட்சிக்கப் பட்டு, ஊழியத்திற்காய் அழைக்கப்பட்டு, ஊழியப் பயிற்சியும் பெற்று ஒரு நல்ல ஊழியக்காரனாய் மாறினார்.

ஒருமுறை அவர் பாவ சோதனையினால் நெருக்கடிக்குள்ளாகி ஒரு இரவிலே மதுவை அருந்தும் சோதனைக்கு உட்பட்டார். மறுநாள் தன் செயலைக் குறித்து மிகவும் வருத்தப்பட்டார். துக்கப்பட்டார், அவர் தன் சபையின் மூப்பர் சங்கத்தைக் கட்டி தன் ஊழியத்திலிருந்து தான் விலகிக் கொள்வதாக அவர் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார். மூப்பர் சங்கம் அவரைப் பார்த்து வியப்படைந்தனர். ஏன் என்று அவரிடம் ஒன்றுமே கேட்கவில்லை. அவர் தன் மனந்திறந்து அவர்களிடம், நான் நேற்று இரவு மது அருந்தி விட்டேன். ஒரு பிரசங்கியார் இப்படிச் செய்யக்கூடாது. ஆகவே நான் ஊழியத்தை விட்டு ராஜினாமா செய்கிறேன் என்று சொன்னாராம்.

அவர் வெட்கத்துக்குள்ளானது எல்லாருக்கும் தெரிந்தது தான். ஆனால் அந்த மூப்பர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? சூழ வட்டமாய் நின்று அவர் தோளில் கைகளை வைத்து நாம் அனைவரும் ஜெபிப்போம் என்று கூறி எல்லா மூப்பரும் அந்த ஊழியக்காரருக்காய் ஜெபித் தார்களாம். அவருடைய ராஜினாமாவை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் தங்களுடைய ஊழியத்திலே தொடர்ந்து இருக்கும்படி அவரைக் கேட்டுக் கொண்டார்களாம்.

ஞாயிற்றுக்கிழமை ஆராதனை சபையில் வழக்கம் போல் நடந்தது. அந்த ஊழியக்காரன் செய்தி கொடுத்தார். செய்தியின் முடிவிலே ஒரு மனிதன் எழும்பிச் சொன்னானாம்: என் வாழ்க்கையில் இந்த மனிதர் பிரசங்கித்த பிரசங்கத்தைப் போல ஒரு சிறந்த பிரசங்கத்தை இது வரை நான் கேட்டதேயில்லை என்று கூறினானாம்.

அந்த மூப்பர்கள் மெய்யாகவே முறிந்து போன எலும்பை ஒட்ட வைத்தனர். ஒடிந்து போன கைகளை மீண்டும் சீர்பொருந்த பண்ணினார்கள். பாவத்தில் விழுந்து போன குற்ற மனச்சாட்சியால்

முறிந்து போன அந்த ஊழியக்காரனை சாந்தமுள்ள ஆவியோடு சீர் பொருந்த பண்ணினார்கள். அவரை ஊழியத்திலிருந்து தள்ளி விடுவதற்காக ஒருவரும் யோசிக்கவில்லை. ஆனால் அந்த மூப்பர்களோ தங்கள் பிரசங்கியாரை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்து, ஜெபித்து அவரை தைரியப்படுத்தினார்கள்.

பிந்திய காலங்களிலே அந்த ஊழியக்காரனைப் போல ஒரு வல்லமையான ஊழியக்காரர் எவரும் எழும்பவில்லை என்று சொல்லும் அளவுக்கு அகில உலக பிரசித்தப் பெற்ற பிரசங்கியாராகவும், வல்லமையாக தேவனால் பயன்படுத்தப்படுகிற ஊழியக்காரனாகவும் காணப்பட்டார்.

**2. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமருங்கள்:- (6:2)** புதிய ஏற்பாட்டு கர்த்தருடைய சபையிலே நம் அருகில் இருக்கிற சகோதரனுக்கோ சகோதரிக்கோ தாங்க முடியாத குடும்ப பாரங்களும் சரீரத்தில் வியாதியின் வேதனைகளும், பொருளாதார கஷ்டங்களும் இருக்கும். ஆகவே கிறிஸ்துவின் அன்பை உள்ளத்திலே கொண்டவர்கள் நாவினாலும் வசனத்தினாலும் மட்டுமல்ல. கிரியைகளினாலும் உண்மையினாலும் அன்பு கூறவேண்டும். பலவிதமாக பாரங்களினால் வேதனைப்படுகிற விசுவாசிகளுடைய பாரங்களை அருகில் இருக்கிறவர்கள் கொஞ்சமாகிலும் அவர் இறக்கி வைப்பதற்கு உதவியாக ஒரு சுமை தாங்கியாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சபையானது மிக வேகமாக வளரும்.

**''மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்''** (எபி 10:24,25)

எனவே தேவனுடைய சபையிலே நாம் கூடிவருகிற போது பாடுவதற்கும், ஜெபிப்பதற்கும், துதிப்பதற்கும், தேவ செய்தி கேட்பதற்கும் மட்டுமல்ல. மற்றவர்களுடைய பாரத்தை பகிர்ந்து கொள்வதற்காகவும் நாம் கூடி வருகிறோம். அப்படிப்பட்டது தான் புதிய ஏற்பாட்டு சபை என்று அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே எடுப்பித்துக் காண்பிக்கிறார்.

**''ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்''.** (கலா 6:2)

**3. பெருமை பாராட்டாதிருங்கள்:- (6:3-5)** கர்த்தருடைய சபையிலே இப்படிப்பட்ட நற்கிரியைகளை நாம் செய்து கொண்டு வருகிற போது நற்கிரியை செய்தவர்கள் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணினால் அபாயம் உண்டாகிறது.

**"ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத் தானே வஞ்சிக்கிறவனாவான்". (கலா 6 : 3)**

அன்பான கர்த்தருடைய ஜனமே! இரட்சிக்கும் கர்த்தர் கிருபை உள்ளவர். அபிஷேகிக்கும் கர்த்தர் அன்புள்ளவர். அவர் சிறுமை யிலிருந்தும், எளிமையிலிருந்தும் நம்மை தூக்கி எடுத்து, சுத்த ஜலத்தால் கழுவி, பரிசுத்த இரத்தத்தால் நம்மை பரிசுத்தப்படுத்தி, பிறருக்கு ஊழியம் செய்யவும், உதவி செய்யவும் நம்மை ஆசீர்வதித்து கனப்படுத்துகிறார்.

இவ்விதமாய் கர்த்தர் நம்மை பிறருக்கு ஆசீர்வாதமாய் வைக்கிற போது நாம் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணக்கூடாது. நம்மை ஒரு பொருட்டாகவும் நினைக்கக்கூடாது என்று பவுல் எழுதுகிறார்.

தன்னை ஒரு பொருட்டாக எண்ணும் படியான சோதனையை சத்துருவாகிய பிசாசு உங்களுக்கு உண்டாக்குவான். அந்த வேளையிலே நீங்கள் உங்களை அதிகமாய் தாழ்த்தி நான் ஒரு பொருட்டல்ல, எல்லா மகிமையும் இயேசுவுக்கே என்று சொன்னால் சாத்தானுடைய வஞ்சகத்திற்கு நீங்கள் தப்புவீர்கள். உங்களை ஒரு பொருட்டாக எண்ணினால் பிசாசு வஞ்சித்து விடுவான் என்று சபையிலே நாம் நடக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

**"அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது : உங்களில் எவனாகிலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின் படியே, தெளிந்த எண்ண-முள்ளவனாய் எண்ண வேண்டும்" (ரோமர் 12 : 3).**

**4. ஆவிக்கென்று விதையுங்கள் : - (6 : 6-8)** கர்த்தருடைய சபையிலே நாம் தொடர்ந்து எவ்விதமாய் நடக்க வேண்டுமென்று அவர் சொல்லுகிற போது விதைக்கும் பிரமாணத்தையும், அறுக்கும் பிரமாணத்தையும் ஆண்டவர் நமக்கு போதிக்கிறார்.

**"மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்?". (கலா 6 : 7)** விதைப்பும் அறுப்பும் தேவனுடைய சபையிலே மாறாத பிரமாணமாகும். எனவே நாம் எதை விதைக்கிறோம், எப்படி விதைக்கிறோம் என்பதைக் குறித்து மிகக் கவனமுள்ளவர்களாய் இருந்தால் நம்முடைய அறுவடை நமக்கு ஆசீர்வாதமாய் இருக்கும். எதை விதைக்க வேண்டும் என்று கவனிக்கிற போது வசனத்தை விதைக்க வேண்டும். விசுவாச வார்த்தைகளை விதைக்க வேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற பணத்தையும் பொருளையும் கர்த்தருடைய ஊழியத்திற்காய் கொடுக்கவேண்டும்.

எப்படி விதைக்க வேண்டும் என்று சொன்னால் நாம் மாம்சத்திற்கென்று விதைக்கக் கூடாது. ஆவிக்கென்று விதைக்க வேண்டும். ஆவிக்கென்று விதைத்தால் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்போம் என்று கர்த்தருடைய வார்த்தை நமக்கு தெளிவாய்ச் சொல்கிறது. தேவனுடைய சபையிலே தற்புகழ்ச்சி, சுய விளம்பரங்கள், மனுஷர் முன்பாக மேன்மை பாராட்டுதல் போன்றவற்றை நாம் எதிர்பார்த்தோமானால் நாம் மாம்சத்திற்கென்று விதைக்கிறோம். ஆனால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும். இயேசு கிறிஸ்துவின் நாமம் உயர்த்தப்பட வேண்டும். தேவனின் சுவிசேஷம் தாராளமாய் அறிவிக்கப்படவேண்டும் என்கிற பரந்த நோக்கத்தோடு நாம் சபையிலே நடந்து கொண்டால் நாம் செய்கின்ற அத்தனையும் ஆவிக்கென்று விதைக்கின்றோம். ஆவிக்கென்று விதைக்கின்ற நாம் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்போம் என்று ஆவியானவர் நமக்குச் சொல்லுகிறார்.

**5. சபைக்கு நன்மை செய்யுங்கள் :- (6 : 10)** இன்று சபைக்கு உள்ளேயும், சபைக்கு வெளியேயும் ஏராளமான ஊழியங்கள் நடக்கின்றது. கர்த்தருடைய சபையார் யாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதைக் குறித்த தெளிவில்லாமல் சில இடங்களிலே இருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் சபைக்குச் சொல்லும் போது,

**''ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் (Faith home) நன்மை செய்யக் கடவோம்''.**

அன்பானவர்களே! கர்த்தருடைய சபையின் மூலமாக அப்போஸ்தல ஊழியம், தீர்க்க தரிசன ஊழியம், சுவிசேஷ ஊழியம், மேய்ப்பரின் ஊழியர், போதக ஊழியம், மிஷனெரி ஊழியம், விதவைகளுடைய பராமரிப்பு, அனாதை பிள்ளைகளின் ஆதரிப்பு, ஏழைகளுடைய துயர் துடைப்பு போன்ற எத்தனையோ ஊழியங்கள் நடந்து கொண்டிருக்கிறது. எல்லா நற்கிரியைகளும், ஊழியங்களும் சபையின் மூலமாகவே செய்யப்பட வேண்டும். எனவே கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெறுகிற போது யாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற தெளிவோடும், மன உறுதியோடும் இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு தாராளமாக இனங்காட்டிச் சொல்கிறார் : தேவனுடைய சபை என்று சொல்லக்கூடிய விசுவாசத்தில் பிழைக்கக்கூடிய விசுவாச வீட்டாருக்கு நீங்கள் நன்மை செய்யுங்கள் என்று சொல்கிறார்.

பரலோக கணக்கிலே ஜீவ புஸ்தகத்திலே உங்களுக்கு பலன் பெருக வேண்டுமானால் கர்த்தருடைய வசனம் சொல்லுகிறபடி நாம் நமது

நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது? விசுவாச வீட்டாருக்கு நீங்கள் நன்மை செய்யுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**6. மாம்சத்தை மேன்மை பாராட்டாதிருங்கள் : - (7 : 11-18)** சபையில் நடந்து கொள்ளும் விதத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது நம்மை அறியாமலேயே நம்முடைய மாம்சத்தைக் குறித்த மேன்மை பாராட்டல் நமக்குள்ளே துளிர் விடும். அதை குறித்து எச்சரிக்கையாய் இருக்கும்படி பவுல் எழுதுகிறார்.

**''விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள். அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மை பாராட்டும் படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள்''. (கலா 6 : 18).**

பொதுவாக நமக்கு மாம்சத்தைக் குறித்த மேன்மை பாராட்டல் நம்மை அறியாமலேயே வரும். சீஷர்கள் ஏரோதின் தேவாலயத்தைக் குறித்து மேன்மை பாராட்டினார்கள். ஆண்டவர் அதற்குச் சொன்ன பதில் என்ன? இந்த ஆலயம் ஒரு கல்லின் மேல் இன்னொரு கல் இராதபடி எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வருமென்று சொன்னார். மனிதன் கிறிஸ்துவின் சிலுவையைத் தவிர வேறு ஒன்றையும் குறித்து மேன்மை பாராட்டக்கூடாது. மனிதனுடைய மேன்மை பாராட்டலைக் கர்த்தர் உடைக்கின்றார்.

**''சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம். அவர்கள் முறிந்து விழுந்தார்கள். நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்''. (சங் 20 : 7,8).**

என்று சங்கீதக்காரனாகிய தாவீது கூறுகிறார். சவுல் ராஜாவும், அப்னேரும் தங்களுடைய சரீர பெலன், தங்களுக்கு இருக்கிற குதிரைகள் இரதங்கள் ஆகியவற்றைக் குறித்து மேன்மை பாராட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் தாவீதோ கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டினார். அவர் தன் வாழ்நாளெல்லாம் ஜெயம் எடுத்தார்.

அன்பானவர்களே! நீங்கள் உங்கள் நெருங்கிய நண்பரோடு தனிமையில் பேசிக் கொண்டிருக்கிற போது உங்களை அறியாமலேயே உங்களுடைய சரீர அழகு, உங்கள் குடும்ப பிறப்பு, உங்கள் பாரம்பரிய

கௌரவம், உங்களுக்கு இருக்கிற படிப்பு பட்டங்கள் இவைகளைக் குறித்து மேன்மை பாராட்டினால் நீங்கள் இரகசியத்தில் பேசுகிற காரியத்தையும் உன்னிப்பாய்க் கவனித்துக் கேட்கிற பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாய் அவைகளைக் குறித்து வைத்து உங்கள் மாம்ச மேன்மை பாராட்டலைக் கர்த்தர் உடைத்து நொறுக்கக் கூடியவராயிருக்கிறார். ஆகவே மாம்சத்தைக் குறித்து நீங்கள் மேன்மை பாராட்டாதிருங்கள்.

அன்பானவர்களே! மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்டாத படிக்கு பெலவீனமானவர்களையும், இழிவானவர்களையும், அற்பமாய் எண்ணப்பட்டவர்களையும், ஒன்றுமில்லாதவர்களையும் தேவன் தெரிந்து கொண்டார். இந்த நிலைமையிலே தேவன் நம்மை பெலவானாக மாற்றியிருக்கிறார். கனத்திற்குரியவர்களாக உயர்த்தியிருக்கிறார். ஐசுவரியத்தினால் ஆசீர்வதித்திருக்கிறார். சிறப்பாய் சம்பாதிக்கும்படி தேவன் ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். இவை எல்லாவற்றின் மகிமை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவைக்கு வரவேண்டுமே தவிர உங்களுக்கு நீங்கள் மகிமை எடுத்து விடக்கூடாது.

**7. சிலுவையைக் குறித்தே மேன்மைபாராட்டுங்கள் :-** புதிய ஏற்பாட்டு சபையின் விசுவாசிகள் மீண்டுமாக எச்சரிக்கப் படுகிறார்கள். விருத்தசேதனத்தைக் குறித்தோ அல்லது நமது ஊழியத்திலிருக்கிற எந்த சடங்கு, கன்வென்சனைக் குறித்தோ நமக்கு மேன்மை பாராட்டல் வரக்கூடாது. நமது மேன்மை பாராட்டல் ஒன்றே ஒன்றாக இருக்கவேண்டும். அது சிலுவை தான்.

**''நானோ நம்முடையக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்''.** (கலா 6 : 14).

ஆகவே இந்த சிலுவையின் பிரமாணத்தின் படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கும் தேவனுடைய இஸ்ரவேலருக்கும் சமாதானமும் இரக்கமும் உண்டாயிருக்கும் என்றுச் சொலி அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை வாழ்த்துகிறார். அப்படியானால் நீங்கள் பாரம்பரியமான நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களா? அல்லது பரிசுத்த ஆவியானவர் நமக்கு முன்னால் உயர்த்திக் காட்டியிருக்கிற சிலுவையின் பிரமாணத்தைச் சார்ந்த வர்களா? சிலுவையின் பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மை பாராட்ட மாட்டார்கள்.

**8. ஊழியர்களை வருத்தப்படுத்தாதிருங்கள்:-** கடைசியாக அப்போஸ்தலனாகிய பவுல் இந்த நிருபத்தை முடிக்கிற போதும் சபையாருக்கும் வாழ்த்துதல் சொல்லுகிற போதும் அவர் சபைக்குச் சொல்லுகிற ஒரு சத்தியம் என்னவென்றால், ஊழியக்காரர்களை நீங்கள் வருத்தப்படுத்தக்கூடாது.

**''இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக, கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்''. (கலா 6 : 17).**

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபையாருக்கு என்னை நீங்கள் வருத்தப்படுத்தக்கூடாது என்று சொல்லும் போது தன்னைக் கிறிஸ்துவின் அச்சடையாளங்களோடு ஒப்பிட்டு அவர் சொல்கிறார். கர்த்தருடைய அப்போஸ்தலனாக சபையின் மேய்ப்பனாக அகில உலக சுவிசேஷகனாக இந்த பவுல் எடுத்து தேவனால் பயன்படுத்தப்படுவதற்கு முன்பாக கிறிஸ்துவின் பாடுகளிலும் கிறிஸ்துவின் அடிகளிலும் கிறிஸ்துவின் சிலுவை நிந்தனைகளிலும் இவர் வழிநடத்தப்பட்டு கிறிஸ்து எங்கெல்லாம் சரீரத்தில் பாடுபட்டாரோ அதே பாடுகளை என்னுடைய சரீரத்திலும் அச்சடையாளமாக நான் தரித்திருக்கிறேன். எனவே என்னை நீங்கள் வருத்தப்படுத்துவது உங்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்காது என்று சொல்லி எச்சரிக்கிறார்.

அன்பானவர்களே! அப்போஸ்தலனாகிய பவுலை வருத்தப்படுத்தக்கூடாது என்பது மட்டுமல்ல, அகில உலகத்திலும் நீங்கள் எந்த போதகரின் கைக்குக் கீழ் இருந்தாலும் உங்கள் ஊழியக்காரரை நீங்கள் வருத்தப்படுத்தக்கூடாது. அவர்கள் துக்கத்தோடு அந்த ஊழியத்தைச் செய்தால் அது உங்களுக்கு ஆசீர்வாதமாய் இராது. அவர்கள் சந்தோஷத்தோடே அந்த ஊழியத்தைச் செய்யும்படி நீங்கள் கர்த்தருடைய ஊழியக்காரரோடு ஒருமனமாய் இசைந்து செல்லுங்கள். ஊழியக்காரர்கள் மனம் நிறைந்து உள்ளம் திறந்து பரிசுத்த ஆவியின் நிறைவோடு உங்களை ஆசீர்வதித்தால் அது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

இப்படிப்பட்ட எட்டு நற்பண்புகளோடு நாம் புதிய ஏற்பாட்டு சபையிலே நடந்து கொண்டால் தேவனுடைய சமாதானமும் தேவனுடைய இரக்கமும் தேவனுடைய கிருபையும் நம்மோடு இருக்கும் என்றுச் சொல்லி அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை வாழ்த்துகிறார்.

## இந்நூலைப் பற்றி...

பாவத்திலிருந்து விடுதலை பெறுவது எளிதாய் நடக்கக்கூடியது, ஆனால் பாரம்பரியத்திலிருந்து விடுதலை பெறுவது கூடாத காரியம். பாவத்தை பாவமென்று உணர்வது லேசான காரியம், ஆனால் பாரம்பரியத்தை பாவமென்று உணர்வது முடியாத செயல்.

இப்புத்தகத்தின் செய்திகள் மூலம் பாரம்பரியத்தை உடைப்பது எப்படி என்று கற்றுக் கொள்ளப் போகிறோம். மூன்று தலைமுறைகளாக பாரம் பரியத்தில் பற்றுக் கொண்ட சபைகள் மலடாக, பட்ட மரமாக தேய்ந்து கொண்டிருக்கையில் பரிசுத்த ஆவியானவர் மூலம் இயக்கப்படுகிற சபையானது பத்தே ஆண்டுகளில் பட்டணத்தை தலைகீழாக மாற்றுகிறது என்ற எழுப்புதலை விளக்குவது தான் இப்புத்தகம். ஆவியானவரின் அருள்மாரி அமோகமாக ஊற்றப்படும் இந்நாட்களில் பரிசேயர்களின் பாரம்பரியங்களும், சதுசேயர்களின் சதித்திட்டங்களும் புதிய ஏற்பாட்டு சபையை எப்படி குழப்புகிறது என்ற இரகசியத்தை தெளிவுடன் எடுத்து இயம்புவதே இந்நூல். இயேசு கிறிஸ்துவின் பிரசங்கங்கள் பரிசேயரின் வாயை அடைத்தது, சதுசேயரின் சிந்தனையை திக்குமுக்காடச் செய்தது. அதே அபிஷேகத்துடன் எழுதப்பட்டது தான் கலாத்தியர் நிருப விளக்கவுரை.

### ஆசிரியரை பற்றி...

**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான். ஏசா. 60:22**



என்ற வாக்குத்தத்தத்தை தரிசனமாக கொண்டு இயங்கி வரும் கர்மேல் பெந்தேகோஸ்தே சபைகளின் ஸ்தாபகரும், மூத்த போதகருமாகிய பாஸ்டர் மா. ஜான்ராஜ், கடந்த 35 ஆண்டுகளாக போதக வரத்தோடு, உலகின் பல நாடுகளில் மாநாடுகளில் உரையாற்றி வருகிறார். ஸ்தல சபையில் 1500 விசுவாசிகள் கொண்ட சபையும், 17 கிளை சபைகளும் உண்டு. 100 கிளை சபைகள் ஸ்தாபிப்பதும், 100 ஆவிக்குரிய புத்தக மிஷினெரிகளை எழுதி அனுப்புவதும், 100 இளம் ஊழியர்களை எழுப்பி பயிற்சி கொடுப்பதும் இவரின் இலக்காகும்.

தேவன் இவருக்கு கொடுக்கும் வெளிப்பாடுகளை புத்தக வடிவில் எழுதுகிறார். உத்தமமான ஜனத்தை கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்தும் இவரின் பிரசங்கங்கள் கேட்பவரை அனல் மூட்டி எழுப்புகிறது. அதன் பலனாக தவழ்வது தான் உங்கள் கரத்திலுள்ள புத்தகம்.

ஆக்கியோன்
**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**
**சீயோன் கோட்டை சர்வதேச ஊழியங்கள்**
26, D, காந்தி ரோடு, சிவகாசி - 626 123.
தமிழ்நாடு - இந்தியா.
போன்: 0091 - 4562 - 277209